*Issued* 6—7—1965]

R.R. No 2887

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

FRIDAY, 19TH MARCH 1965

VOLUME XXVIII—No. 3

MADRAS

209

*CONTENTS*



| | | PAGES |
|---|---|---|
| I | Question and Answers .. .. .. .. .. .. | 169–177<br>248–249 |
| II | Voting on Demands for Grants for 1965–66—*cont.* | |
| | (1) Demand No. XXVI—Irrigation .. .. .. .. | 177–246 |
| | (2) Demand No. XLII—Capital Outlay on Irrigation .. .. | |
| | (3) Demand No. XXVII—Public Works—Works .. .. | |
| | (4) Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant .. .. .. .. .. | |
| | (5) Demand No. XLIII—Capital Outlay on Public Works .. | |
| III | Papers laid on the table of the House .. .. .. .. | 246–247 |



V211, 31 N65
N65. 28. 3
64899

©
GOVERNMENT OF MADRAS
1965

*Legislative Assembly Department*
*Madras*

PRICE 50 *Paise.*]

V2.1.81 N65
N65-28-3

# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Friday, 19th March 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

## I.—QUESTIONS AND ANSWERS.

## STARRED QUESTIONS.

MR. SPEAKER: Question No. 273.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: May I answer the questions 273, 274, 275 and 276 together?

MR. SPEAKER: Yes.

**நாகர்கோயில் ஸ்காட் கிறித்துவக் கல்லூரி துப்பாக்கிப் பிரயோகம்**

* 273 **கேள்வி.—திரு. கே. ஏ. மதியழகன் :**
**திரு. மீ. கலியாணசுந்தரம் :**
**திரு. எம். வி. கரிவேங்கடம் :** } கனம் முதல் அமைச்சர்
**திரு. ஏ. குஞ்சன் நாடார் :**
**திரு. ஏ. சுவாமிதாஸ் :**

தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) நாகர்கோயில் ஸ்காட் கிறித்துவக் கல்லூரி மாணவர்களின்மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அத் துப்பாக்கிப் பிரயோகத்திஞல் யாருக்கேனும் படுகாயம் ஏற்பட்டதா ?

(உ) நாகர்கோயில் துப்பாக்கிப் பிரயோகம் பற்றி உயர்தர போலீஸ் அதிகாரி நாகர்கோயில் சென்று விசாரணை நடத்திஞரா ?

(எ) ஆம் எனில், அவர் அறிக்கையின் நகல் ஒன்று சபை முன் வைக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :**

(அ) ஆம்.

(இ) இரண்டு மாணவர்கள் காயமுற்றனர்.

(உ) ஆம். நிகழ்ச்சி நடந்த இடத்திலேயே விசாரணை நடத்தும்படி போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரலுக்கு உத்தரவிடப்பட்டது.

(எ) விரிவான அறிக்கை முன்னரே வெளியிடப்பட்டிருப்பதாலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாலும், பொது நலனைக் கருதி, இவ்வறிக்கையின் நகலைச் சபைமுன் வைப்பதை அரசாங்கம் அவசியம் எனக் கருதவில்லை.

(*a*) Yes.

(*b*) Two students were injured.

(*c*) Yes. The Inspector-General of Police was directed to conduct an on the spot enquiry.

(*d*) As a detailed statement has already been made and since appropriate action has been taken against the concerned officials, the Government do not consider it necessary in public interest to place a copy of the report on the Table of the House.

64899

[19th March 1965

*Memorandum from Principal, Scott Christian College, Nagercoil*

* 274. *Q.*—SRI M. KALYANASUNDARAM: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any memorandum, dated 7th December 1964 submitted by the Principal of the Scott Christian College, Nagercoil regarding the Police firing at the students on 2nd December 1964 has been received; and

(*b*) if so, the details of the action taken on the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) No specific action was considered necessary as a Magisterial enquiry has been conducted and appropriate action taken against the concerned officials.

*Compensation to Sri Gabriel and Sri Muthiah injured in Police firing*

* 275 *Q.*—SRI A. KUNJAN NADAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal to award compensation to Gabriel an Muthiah who sustained injuries on account of the Police firing in the Scott Christian College on 2nd December 1964; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) & (*b*): On compassionate grounds, the Government sanctioned the ex-gratia payment of Rs. 10,000 (rupees ten thousand) to Sri Gabriel and Rs. 3,000 (rupees three thousand) to Sri Muthiah. The amounts have since been paid to the two students.

*Enquiry into Thoothoor High School incident*

* 276 *Q.*—SRI A. KUNJAN NADAR: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any enquiry was ordered to be held on the incident that took place at Thoothoor High School on 26th November 1964;

(*b*) if so, the details thereof; and

(*c*) whether a copy of the report will be placed on the table of the House?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) Yes.

(*b*) The enquiry revealed that the Sub-Inspector of Police, Kollencode acted in a high-handed manner in assaulting a student of the Thoothoor High School and later in arresting the Headmaster and a few Assistants of that High School and marching them handcuffed on the road. The Inspector-General of Police who held the enquiry placed the Sub-Inspector under suspension



19th March 1965]

immediately. Departmental action is being taken against the Sub-Inspector and the other policemen who were responsible for the incident.

(*c*) As a detailed statement has already been made and since appropriate action has been taken against the concerned officials, the Government do not consider it necessary in public interest to place a copy of the report on the Table of the House.

SRI K. A. MATHIALAGAN. " All commands to the police are to be given by the officer in command of the party. Police are not on any account to fire except by word of command of their officer who has to exercise human discretion respecting the line of firing" என்றுஇந்த மெட்ராஸ் போலீஸ் ஸ்டாண்டிங் ஆர்டரில் இருக்கிறது. இந்த அனர்த்தப்பான் சுட்டதற்குப்பிறகு கூட இன்ஸ்பெக்டர்-ஜெனரல் போகிற வரையில் அவரை டிஸ்மிஸ்ஸோ, சஸ்பெண்டோ அதிகாரிகள் செய்யவில்லை. ஏன் அப்படிச் செய்யவில்லையென்று கனம் முதலமைச்சர் கூறுவார்களா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அங்குள்ள அதிகாரிகள் டிஸ்மிஸ் செய்யமுடியாது. இன்ஸ்பெக்டர்-ஜெனரல் வரப்போவதாக உடனடியாகத் தெரிவிக்கப்பட்டது. இன்ஸ்பெக்டர்-ஜெனரல் அங்கு போன பிறகு விசாரித்ததில் சரிப்படி நடக்கவில்லை என்று அவர்களுக்குப் புலப்பட்டது. உடனடியாக சஸ்பெண்ட் செய்தார்கள். மேலும் நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள்.

SRI K. A. MATHIALAGAN: Again Police Standing Order 731 (2) says: ' Where an actual situation arises and the District Magistrate is present at the spot, he should be in complete charge of the situation.' The District Collector is in charge of the situation and it is under his command. The Government have ordered an enquiry into the shooting incident by the Revenue Divisional Officer who is his subordinate. What justification is there to exonerate the District Collector?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கலெக்டர் மீது அரசாங்கம் குற்றம் காணவில்லை.

**திரு. ஏ. சுவாமிதாஸ் :** தூத்தூர் சம்பவத்தில் சப் இன்ஸ்பெக்டர் மீது மட்டும்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. அவருக்குத் துணைநின்ற போலீசார்மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அப்படியானால் எத்தகைய நடவடிக்கை எடுக்கப்பட்டது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** யார் யார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதைப்பற்றி சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் விரிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நடைப்பெற்று முடிந்தவுடன் காயம் அடைந்தவர்களை போலீசார் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகவில்லை. கேப்ரியெல், முத்தையா ஆகியவர்களை புத்தேரி இரட்சண்ய ஆஸ்பத்திரியில் பிரின்சிபால்தான் கொண்டுபோய் சேர்த்தார்கள். அவர்களை அப்படியே போலீசார் விட்டுவிட்டுச் சென்றதின் காரணம் என்ன ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** போலீசார் மேல் நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள் என்று தெரிவித்தேன். பிரைவேட் பிராசிக்யூஷன் போலீஸ் அதிகாரிமீது போடப்பட்டது. அதன் விசாரணையும் நடந்திருக்கிறது. அதற்குமேலும் நடந்த விசாரணையைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை.

[19th March 1965

*Causes for outbreak of Dengue*

* 277 *Q.*—Sri M. KALYANASUNDARAM :
Sri K. NARAYANASWAMY PILLAI :
Pulavar K. GOVINDAN :
Sri S. MADHAVAN :
} Will the Hon the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any investigation was made into the causes for the outbreak of Dengue epidemic in and around the city of Madras; and

(*b*) the details of the steps taken to control the epidemic?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM:
(*a*) Yes.

(*b*) A statement[a] is laid on the table of the House.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இந்தக் காய்ச்சல் வந்த பிறகுதான் மாநகராட்சி கொசு ஒழிப்புத் திட்டத்தைத் தீவிரப்படுத்தியதாக அறிக்கை குறிப்பிடுகிறது. அப்படியானால் இந்தத் திட்டம் சென்னை மாநகரத்தில் நடைமுறையில் இல்லையா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** கொசு ஒழிப்புத் திட்டம் ரொம்பகாலமாக இருக்கிறது. இது டிங்கி ஜுரம் மாதிரி ஆனால் உண்மையில் இது டிங்கி ஜுரம் அல்ல. சிக்கன்குனியா என்று பிறகு லேபரட்டரி டெஸ்ட் மூலம் நிர்ணயிக்கப்பட்டது. அது வந்த பிறகு இன்னும் தீவிரமாகக் கொசு ஒழிப்புத் திட்டம் அமுலாக்கப்பட்டுவருகிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** ஆண்டு ஒன்றுக்கு வருகிற ஒவ்வொரு ஜுரத்திற்கெல்லாம் ஒவ்வொரு பெயர் வருகிறதே, ஜுரம் வந்தபிறகு பெயர் கொடுக்கப்படுகிறதா ஜுரம் வருவதற்கு முன்னால் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஏற்கனவே ரொம்ப காலமாக இந்த பெயர்கள் இருந்திருக்கின்றன. அந்த ஜுரம் எந்தக் கிரிமியினால் தாக்கப்பட்டு வருகிறதோ, அந்தப் பெயரை வைக்கிறார்கள்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** சென்னையில் இந்த டிங்கி ஜுரம் வருவதற்குக் காரணம் கூவத்திலும், பக்கிங்காம் கால்வாயிலும் கொசுக்கள் இருப்பதாலும், துர்நாற்றம் வீசுவதாலும் என்று சொல்கிறார்களே, இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** இதற்குக் காரணம் கூவம் பக்கிங்காம் போன்ற கால்வாய்கள் அல்ல. எங்கெங்கே தண்ணீர் தேங்கி இடக்கிறதோ, அங்கெல்லாம் கொசு இருக்கிறது. சென்னையைப் பொறுத்தவரை பெரம்பூரில்தான் அதிகமாக இருந்தது என்று தெரிகிறது.

**டாக்டர் பா. நடராஜன் :** எழும்பூரில் கொசு அதிகமாக இருக்கிறது என்பது கனம் அமைச்சருக்குத் தெரியுமா?

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** டிங்கு ∴பீவர் அங்கு இருக்கிறது போலவே தெரியவில்லை.

---

a Printed as Appendix on pages 248–249 infra.



19th March 1965]

*Buildings for T.B. Clinics*

* 278. *Q.*—Sri M. V. KARIVENGADAM: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the construction of buildings for T.B. Clinics at Pudukkottai, Tuticorin and T.B. Sanatorium at Pennathur have been completed; and

(*b*) if not, the reasons therefor?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM:
(*a*) Yes.

(*b*) Does not arise.

**தென்னாற்காடு மாவட்டத்தில் புதிதாகக் கட்டப்பட்ட பள்ளிக் கட்டிடத் தகர்ச்சி**

*** 279 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1957-ல் வட்டார வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் கீழ் தென் ஆற்காடு மாவட்டத்தில் 30,392 ரூபாய் செலவில் கட்டப்பெற்ற பள்ளிக் கட்டிடங்கள் நான்கும், கட்டி முடித்த நான்கு மாதங்களுக்குள்ளாகவே இடிந்து விட்டது என்பதும், அதை மீண்டும் புதுப்பிக்க 21,200 ரூபாய் அனுமதிக்கப்பட்டது என்பதும் உண்மையா?

(இ) இவற்றிற்குக் காரணமாயிருந்தவர்மீது அரசு எடுத்திருக்கும் நடவடிக்கை போதுமானதன்று என, 1963–64-ஆம் ஆண்டு பொதுக் கணக்குக் குழு கருத்துத் தெரிவித்துள்ளதா?

(உ) அதன்மீது அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :**

(அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) தங்கள் கடமையைச் சரிவரச் செய்யத்தவறினர் என்றும், திறமையற்றவர்கள் என்றும் நிரூபிக்கப்பட்ட அலுவலர்கள்மீது போதிய ஒழுங்கு நடவடிக்கைகளைக் காலதாமதமின்றி எடுக்குமாறு நெடுஞ்சாலை கிராமப் பணித்துறைத் தலைமைப் பொறியாளருக்கு உரிய அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன.

**புலவர் கா. கோவிந்தன் :** பொதுக் கணக்குக் குழு எடுத்த நடவடிக்கை போதுமானது அன்று என்று கூறியிருக்கிறது. அதன் பிறகு என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கெனவே அதிகாரிகள் மீது நடவடிக்கைகள், சென்ஷர், வார்னிங், ரிடையர் ஆகக் கூடியவர்கள் மீது சம்பளப் பிடிப்பு போன்ற நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஏற்கெனவே நடவடிக்கைகளை தலைமைப் பொறியாளர் எடுத்ததால் மறுபடியும் இந்தப் பிரச்னையைப் பரிசீலனை செய்ய வேண்டாம் என்பது அரசாங்கத்தின் கருத்து. இம்மாதிரி இல்லாமல் நடவடிக்கைகள் துரிதமாக நல்ல முறையிலே எடுக்கவேண்டும் என்று வருங்காலத் திற்கு அறிவுரை வழங்கி இருக்கிறது.

**புலவர் கா. கோவிந்தன் :** இந்தக் கட்டடங்கள் இவ்வளவு குறுகிய காலத்தில் இடிந்து விழக் காரணம் என்ன?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** "டிபெக்டிவ் டிசைன்", கட்டடம் கட்டும்போது டிசைன் சரியான முறையில் போடவில்லை என்று கூறப்படுகிறது.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** இந்தக் கட்டடங்களைக் கட்டிய கண்ட்ராக்டர் யார்? இப்படி மோசமான நிலையில் கட்டிய காரணத்தால் கட்டடம் இடிந்து விழுந்ததால், ஏன் அந்தக் கண்ட்ராக்டர் பேரில் நஷ்ட ஈடு கோரி வழக்குத் தொடரவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** கண்ட்ராக்டருக்குப் பொறுப்பு இருந்தாலும் இன்சினியர்கள் அந்த டிசைன்களைப் பார்த்து அவ்வப்போது அங்கே நடப்பதற்குப் பொறுப்பு என்று இலாகா நினைத்து, சம்பந்தப்பட்ட இன்சினியர்கள் மீது நடவடிக்கை எடுத்துக்கொண்டார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுகிறது என்றால் என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது? பணத்தை திருப்பிக் கட்டிவிடும்படி சொல்லியா அல்லது கட்டடத்தை திரும்ப எழுப்பவேண்டு மென்று என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** இதில் கீறல் விழுந்து ரிபேர் ஆக உள்ள அம்சங்களை சர்க்காரே பணம் கொடுத்து ரிபேர் செய்து வேலை பூர்த்தியாய் உள்ளது. சம்பந்தப்பட்ட என்ஜினியர்களில் இரண்டு பேர்கள் இறந்து விட்டார்கள். அவர்கள் பேரில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கமுடியாது. ரிடையரான அதிகாரிகளின் பென்ஷனில் மாதம் 5 ரூபாய் குறைத்து இருக்கிறோம்.

**திரு. ர. ஜீவரத்தினம் :** தலைவர் அவர்களே, இம்மாதிரிப் பல பள்ளிக் கூடங்கள் தென் ஆற்காடு ஜில்லாவில் மட்டுமின்றி வட ஆற்காடு ஜில்லா விலும் சரியா இல்லாமல் இருக்கிறது. இவற்றிற்கெல்லாம் காரணம், நம்முடைய டெண்டர் ஷெட்யூலில் "கன்ட்ரி உட்" என்று போட்டு விடுகிறோம். "கன்ட்ரி உட்" என்று சொல்லி என்ன மரத்தைக்கண்ட்ராக்டர் போட்டாலும் சட்டப்படி அவரை ஒன்றும் கேட்க முடியாது. இதை மாற்றி, "கன்ட்ரி உட்" என்றால் இன்னென்ன மரங்களைத் தான் குறிக்கும், இன்னென்ன மரங்கள் தான் போடவேண்டும் என்று சர்க்கார் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம். இருந்தாலும் கனம் அங்கத்தினர் ஆலோசனைக்கு நன்றி.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இந்த இன்ஜினீயர்கள் ரிடையர் ஆகிவிட்டார்கள் என்று அமைச்சர் சொன்னார்கள். கட்டடம் முடிந்து 4 மாதத்திற்குள் இடிந்து விழுந்து இருக்கிற காரணத்தால், உடனே இந்த அதிகாரிகளின் பேரில் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** நடவடிக்கைகளிலே காலதாமதம் ஆகி விட்டது என்று "பப்ளிக் அகௌண்ட்ஸ் கமிட்டி" எடுத்துக் காட்டி இருக்கிறது. மேற்கொண்டு இம்மாதிரி தவறுகள் ஏற்பட்டால், துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று, என்ஜினியரிங் தலைமைக் காரியால யத்திற்கு, கவர்ன்மெண்டு அபிப்பிராயத்தை எழுதி அனுப்பி உள்ளோம்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கண்ட்ராக்டருடைய பெயர் என்ன என்று கேட்டேன் ? யார் அவர் ? அவர் தாலூகா காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் என்பது உண்மை தானா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அந்தத் தகவல் என்னிடம் இல்லை. கண்ட்ராக்டர் பெயரை, தனிக்கேள்வி போட்டால், தெரிந்து சொல்லுகிறேன்.

**திரு. அ. ரா. இராமசாமி :** வட்டார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கட்டப் படுகிற பெரும் பகுதிக் கட்டடங்கள் ஒரு ஆண்டுக்குள்ளாகவே, பல கீறல்கள் விழுந்து, பெரும் காற்று அடித்தால் ஓடுகள் பிரிந்து செல்லக்கூடிய சூழ் நிலை ஏற்படுவதால், கட்டடம் கட்டும்போதே, ஒரு அக்ரிமெண்ட் ஏற்படுத்தி இத்தனை ஆண்டுகள் கட்டடம் உறுதியாக இருக்கும் என்று உத்தரவாதம் அளிக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் முன்வருமா, அப்படி ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.





**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அரசாங்கத்துக்கு இதைப் பற்றி எழுதி அனுப்பினால் அதை நாங்கள் பரிசீலிக்கிறோம்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** இந்தக் கட்டடங்கள் எந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டன. எந்த ஆண்டுகளில் முடிவடைந்தன, எவ்வளவு நேரம் ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன். எந்தெந்த ஊர்களில் இவைகள் கட்டப்பட்டன என்றும் அறியலாமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஓமந்தூர், நல்லூர், வெள்ளிமேடு பட்டி, தும்பூர்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, இம்மாதிரி தமிழ் நாட்டிலே நிறையப பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்டு இடிந்து விழக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இனியாவது அமைச்சர் அவர்கள் சரியான முறையைப் பயன்படுத்தி காண்ட்ராக்ட் வேலை நடப்பதில் உஷாராக இருப்பார் களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கெனவே இப்போது உள்ள சமுதாய நலத் திட்டத்தின் கீழ் பஞ்சாயத்து யூனியனே காண்ட்ராக்ட் விட்டுக் கட்டுவதில் "டிபெக்டுகள்" பல வந்ததால், டெண்டர் விட்டு நல்ல முறை யிலே செய்யவேண்டுமென்று உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதை கனம் அங்கத்தினர் அறிவார் என்று நினைக்கிறேன்.

### " சேரி " என்னும் பெயரை " புரம் " என்று மாற்றுவதற்கான இசைவு

*** 280 கேள்வி.—திரு. மு. கருணாநிதி :**
**திரு. இராம. அரங்கண்ணல் :** } கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா :—

(அ) " சேரி " என்ற பெயரை மாற்றி " புரம் " என்று அழைக்கலாம் என்று சென்னை மாநகராட்சிக்கு இம்மாநில அரசு சம்மதம் வழங்கி யுள்ளதா ?

(இ) ஆம் எனில், தமிழ் நாட்டிலுள்ள மற்ற இடங்களிலும் இப் பெயர் மாற்றம் அமுலாக்கப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) சென்னை மாநகரில் சில தெருக்களின் பெயர்களில் வரும் "சேரி" என்ற சொல்லை "நகர்" என்று மாற்ற மாநகராட்சி மன்றம் உத்தேசித்தது. "சேரி" என்ற சொல்லை "நகர்" என்று மாற்றுவதைவிட, அத்தகைய தெருக்களின் பெயர்களி லிருந்து "சேரி" என்ற சொல்லையே நீக்கிவிடலாமென மாநகராட்சி மன்றத்திற்கு யோசனை தெரிவிக்கப்பட்டது. மாநகராட்சி மன்றமும் அதை ஏற்றுக்கொண்டது.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** ஒரு குறிப்பிட்ட இனத்தவர் வாழ்கின்ற இடம் சேரி என்றோ, நகர் என்றோ, காலனி என்றோ சொன்னால் தனி மக்கள் வாழ்கின்ற இடம் என்று தெரிகிறது. இப்படி பிரித்து வாழ்கின்ற நிலை இல்லாமல், தெருக்களுக்குப் பெயர் வைக்கிறாற்போல இவைகளுக்கும் பெயர் வைக்க வழிவகை சர்க்கார் செய்யுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கெனவே இருந்த பெயருக்கு வேறு பெயர் வைப்பது தான் பிரச்னை. புதிதாக வருவதற்கு பெயர் வைப்பது பற்றி ஆலோசனை இல்லை.

### சென்னை நகருக்கான பெருநகரத் திட்டம்

*** 281 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) சென்னை மேயர் அண்மையில் சென்னை நகரத்திற்கான பெரு நகரத் திட்டம் ஒன்று அரசாங்கத்திடம் சமர்ப்பித்துள்ளாரா ?

(இ) ஆமெனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

[19th March 1965

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) ஆம்.

(இ) சென்னை மாநகருக்கு அபிவிருத்திகள் செய்யும் பிரச்சினையை மாநகராட்சி மன்றம் தனது நிதி நிலைமையையொட்டி ஆராயவேண்டும். மன்றம் பொரிசு செய்து அனுப்பும் திட்டங்களை அரசாங்கம் அதனதன் தகுதிக்கேற்ப உரிய காலத்தில் பரிசீலனை செய்யும்.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சென்னையைப் பெருநகரமாக்க வேண்டும் என்பது பற்றி மாநகர ஆட்சி, சர்க்கார் உத்தரவின் பேரில், ஒரு "மாஸ்டர் பிளானை" தயாரித்த பிறகு, முன்னுள் நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் இன்னொரு "மாஸ்டர் ப்ளான்" வெளி நாட்டுக்காரர்களின் ஆலோசனை கேட்டுத் தயாரித்தார்கள். இப்படித் திட்டம் தயாரிக்கப்படுகிறதே தவிர, சென்னையின் எதிர்காலப் போக்கை அனுசரித்து இந்தத் திட்டத்தை உருவாக்குவதற்கு, இந்தச் சர்க்கார் இந்த 4-வது ஐந்தாண்டுத் திட்டத்தில், டில்லியில் ஒதுக்கி இருக்கிறார்களோ 100 கோடி, அம்மாதிரி ஒதுக்க என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** பழைய மேயரும், டெபுடி மேயரும் அவர்களுடைய எண்ணப்படி தயாரித்த திட்டம் கிட்டத்தட்ட ரூ. 918 கோடி ரூபாய் ஆகும். இத்தகைய பெரும் திட்டத்தை, மாநகர ஆட்சி செய்ய முடியாது. சர்க்கார் ஒத்துழைத்தாலும் செய்ய முடியாது. இது ஒரு "ஆம்பிஷஸ் ஸ்கீம்".

**திரு. ர. ஜீவரத்தினம் :** தலைவர் அவர்களே, சென்னை நகரை அபிவிருத்தி செய்துகொண்டே போனால், பல இடைஞ்சல்கள் ஏற்படுகின்றன. தொத்து நோய்கள் பரவி வருகின்றன. கொசு உபத்திரவம் அதிகமாகி வருகிறது. இதையெல்லாம் தவிர்க்க, சென்னையை விட்டு, பல ஜில்லா தலைநகரங்களை எடுத்து அவைகளை அபிவிருத்தி செய்து மக்கள் நன்றாக வாழ வழிவகை சர்க்கார் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கெனவே பல ஜில்லாத் தலைநகர்களிலே முனிசிபாலிடிகள் நல்ல முறையிலே, நல்ல அபிவிருத்தி வேலைகள் செய்து வருகின்றன என்பதை கனம் அங்கத்தினர் அறிவார்.

**திரு. டி. கார்ச்சா கவுடர் :** சென்னையைப் போல கோவையைப் பெருநகரமாக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டு இருக்கிறதா ? அப்படியானால் அதற்கான திட்ட மதிப்பீடு எவ்வளவு ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

**திரு. கே. ஏ. மதியழகன் :** சென்னை மேயர் ஆயிரம் கோடி ரூபாய்க்குத் தயாரித்துள்ள திட்டம் 30 வருஷ காலத்தில் நிறைவேற்றப்படவேண்டிய ஒன்றாகும். ஆகவே ஆண்டுக்கு 30 கோடி சொச்சம்தான் வரும். இதை நமது அரசாங்கம் மத்திய சர்க்காரிடத்தில் வற்புறுத்தி நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** ஏற்கனவே அவர் தங்களுடைய அனுபவத்தையும், தங்கள் திட்டங்களையும் முதல் அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்து இருக்கிறார்கள். அதற்கு இன்னமும் எந்தவிதமான, திட்டமான பதில் அனுப்பப்படவில்லை. அதைப் பரிசீலிக்கிறபோது கனம் அங்கத்தினருடைய கருத்தையும், எண்ணத்தையும் சேர்த்துப் பரிசீலிக்கிறோம்.

**டாக்டர் பா. நடராஜன் :** மேயர் திட்டத்திற்கும், முன்னுள் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் வகுத்த திட்டத்திற்கும் என்ன வேற்றுமை ? இரண்டு திட்டங்களும் சபை முன்பு வைக்கப்படுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** அந்த விவரம் இப்போது என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி வேண்டும்.



19th March 1965]

**பஞ்சாயத்து யூனியன் ஜீப்புகளைப் பயன்படுத்தும் முறை**

*282 கேள்வி —**திரு. செ. மாதவன் :** கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :—

(அ) பஞ்சாயத்து யூனியன்களில் உள்ள ஜீப்புகளைப் பயன்படுத்தும் முறை பற்றி மத்திய அரசாங்கம் மாநில அரசுக்கு ஏதேனும் வேண்டுகோள் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆமெனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

**கனம். திரு. சே. ம. அ. மஜீத் :** (அ) ஆம்.

(இ) சமுதாய வளர்ச்சி வட்டாரங்களிலுள்ள மோட்டார் வாகனங்களை உபயோகிக்கும் விதிகளை மாற்றியமைக்கும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இப்போது உணவுப் பொருள் கொள்முதல் விநியோக வேலைகளுக்காக வருவாய்த் துறையினர் யூனியன் ஜீப்புகளை எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். அதனால் யூனியன் வேலைகள் பாதிக்கப்படுகின்றன. ஆகவே மாதம் முழுக்க எடுத்துக்கொள்ளாமல் பத்து நாட்களுக்கு அவர்கள் எடுத்துக் கொள்ளலாம். பாக்கி 20 நாட்கள் யூனியன் வேலைகளுக்காக கொடுக்கப்படவேண்டும் என்று ஏற்பாடு செய்ய முடியுமா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** மனிதர்களுக்கும், உயிர்ப் பொருள்களுக்கும் உணவு தான் அவசியம். ஆகவே உணவுப் பொருள் கொள்முதல் வேலைக்குத்தான் முதலிடம். அவர்கள் இந்த ஜீப்புகளை எடுத்துக் கொள்ளலாம் என்று உத்தரவு போட்டுத்தான் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** தலைவர் அவர்களே, உணவுப்பொருள் அவசியம் தான். அதற்காக யூனியன் வேலைகளும் பாதிக்கப்படக்கூடாது. ஆகவே யூனியன் ஜீப்புகளை மாதத்தில் பத்து நாட்களாவது யூனியனுக்குக் கொடுத்துவிட்டு, பாக்கி 20 நாட்கள் அவர்கள் எடுத்துக்கொள்ளும்படியாக உத்தரவு பிறப்பிக்க யோசனை கூறுகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** யோசனைக்கு மிக்க நன்றி.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** ப்ளாக்குகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஜீப்புகள் சிறிது பழுதடைந்தாலும் ஹெட் குவார்டர்சுக்கு சர்வீஸ் செய்ய அனுப்புகிறார்கள். பல நாட்கள் ஆகிறது, திரும்பி வருவதற்கு. அதனால் ப்ளாக்கில் எந்த வேலையும் நடப்பதற்கு வசதியும், வாய்ப்பும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே பக்கத்தில் உள்ள சர்வீஸ் ஸ்டேஷன்களில் சர்வீஸ் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவார்களா ?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** எங்கெங்கு சர்க்கார் சர்வீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றனவோ, வொர்க் ஷாப் இருக்கின்றனவோ அங்குதான் செய்துகொள்ளமுடியும்.

**கனம் சபாநாயகர் :** கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk *at the commencement of a speech indicates revision by the Members.]

## II.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR 1965-66

(1) DEMAND NO. XXVI—IRRIGATION.

(2) DEMAND NO. XLII—CAPITAL OUTLAY ON IRRIGATION.

(3) DEMAND NO. XXVII—PUBLIC WORKS—WORKS.

(4) DEMAND NO. XXVIII—PUBLIC WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

(5) DEMAND NO. XLIII—CAPITAL OUTLAY ON PUBLIC WORKS.

[19th March 1965

THE HON. SRI V. RAMAIAH : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,58,21,300 under Demand No. XXVI—Irrigation."

திரு. து. ப. அழகமுத்து : கனம் தலைவர் அவர்களே, "சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களை இன்றும் சரியான முறையில் பயன் படுத்த வில்லை என்பதைச் சுட்டிக்காட்ட" நான் கீழ்க்கண்ட வெட்டுப் பிரேரணை யைப் பிரேரிக்கிறேன்.

"That the allotment of Rs. 6,58,21,300 under Demand No. XXVI—Irrigation be reduced by Rs. 100."

THE HON. SRI V. RAMAIAH : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 10,98,99,600 under Demand No. XLII—Capital Outlay on Irrigation."

திரு. கோ. சி. மணி : கனம் தலைவர் அவர்களே, நீர்ப்பாசன மூலதனச் செலவில் சிக்கல்கள் பற்றி விவாதிக்க கீழ்க்கண்ட வெட்டுப் பிரேரணையை முன்மொழிகின்றேன்.

"That the allotment of Rs. 10,98,99,600 under Demand No. XLII—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100."

THE HON. SRI V. RAMAIAH : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,59,67,800 under Demand No. XXVII—Public Works—Works."

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, "புதிய சாலைகளை எடுத்துக் கொள்ளவும், உள்ள சாலைகளின் பராமரிப்புக்காகவும், பெரு வழித் துறைக்கு ஒதுக்கப்படும் பணம், மக்கட் தொகையை அடிப்படையாகக் கொள்ளாமல் சாலைகளின் நீளத்தை அடிப்படையாகக் கொண்டு தரப்பட வேண்டும் என்பதை வலியுறுத்த" கீழ்க்கண்ட வெட்டுப் பிரேரணையை முன்மொழிகின்றேன்.

"That the allotment of Rs. 6,59,67,800 under Demand No. XXVII—Public Works—Works be reduced by Rs. 100."

THE HON. SRI V. RAMAIAH : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,25,04,300 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant."

திரு. து. ப. அழகமுத்து : கனம் தலைவர் அவர்களே, "விசேஷ கிராம நீர் வழங்கு ஆராய்ச்சி பிரிவு நடத்திய ஆராய்ச்சியை உடனடியாக அமுலுக்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்த" என் பெயரிலுள்ள வெட்டுப் பிரேரணையைப் பிரேரிக்கிறேன்.

"That the allotment of Rs. 2,25,04,300 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100."



19th March 1965]

THE HON. SRI V. RAMAIAH : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,13,85,100 under Demand No. XLIII—Capital Outlay on Public Works."

MR. SPEAKER : The Demands and the cut motions are before the House for discussion.

* திரு. ஆ. துரையரசன் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பொதுப் பணித் துறை, நீர்ப்பாசன இலாகா மானியக் கோரிக்கையின் மீது எங்களுடைய கட்சிக்காரர்கள் தந்திருக்கிற வெட்டுப் பிரேரணைகளை ஆதரித்து என்னுடைய தொகுதி சம்பந்தமான சில விவரங்களைத் தங்கள் மூலமாக இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

பொதுவாக நீர்பாசன இலாகாவிற்கு நிறையப் பணங்களை நாம் ஒதுக்கி, கிராமத்தில் விவசாயத்தை ஊக்குவிப்பதற்காகப் பல்வேறு துறைகளிலும் செலவிடப்படுவதற்கு நாம் திட்டமிட்டிருந்தாலும், ஒதுக்கப்படுகிற தொகைகள் பூராவும் பெரு நகரங்கள் ஆகியவற்றைச் சுற்றியே பல்வேறு இடங்களுக்குச் செலவழிக்கப்படுகிறதோ, பயன்படுத்தப்படுகிறதோ என்று அஞ்சக் கூடிய சூழ்நிலை என்போன்றவர்களுக்கு இருப்பதிலே ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்று கருதுகிறேன். காரணம் உணவு உற்பத்தியை நாம் தீவிரப் படுத்த வேண்டுமென்பதிலே பல திட்டங்களைப் போட்டு இருக்கிறோம். அந்தத் திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்துவதற்கு உதவியாக நாட்டு மக்களுக்கு நீர்ப்பாசன வசதிகளைச் செய்து தரவேண்டிய பொறுப்பு நம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பு—குறிப் பாக பாசன வசதி அற்ற பகுதிகளில்—தென் மாவட்டங்களிலே இன்னமும் நன்கு கவனிக்கப்படாமல் இருக்கிறது. இரண்டு மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப்போட்ட பிறகும்—ஏதோ காட்டாறுகளில் கட்டப்படுகிற அணைக் கட்டுகளின் மூலமாக விவசாயத்தை நல்லமுறையில் ஊக்குவிக்கலாம் என்றாலும்—வானம் பொழிந்தால்தான் காட்டாற்றில் தண்ணீர் வர முடியும். அப்படித் தண்ணீர் வருவதற்கு—பெரும்பாலும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு தடவை கூட வானம் பொழியாத காரணத்தால் நாட்டில் பஞ்ச நிலைமை தொடர்ந்து நீடிப்பதை நம்மால் பார்க்க முடிகிறது. அதன் காரணமாகத்தான் நான் இந்த மன்றத்தில் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுவது. நாங்கள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை தண்ணீர் பாசன வசதி அற்ற தென் ராஜ்யங்களுக்குத் தண்ணீர் கொடுக்கவேண்டுமென்று கேட்டபோ தெல்லாம் மைசூர் அரசாங்கத்தோடு பேச்சு வார்த்தை நடத்தி அதற்குப் பிறகுதான் தரப்படும் என்று அறிவித்தார்கள். அமைச்சர் அவர்கள் விரைவிலே பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தி, உபரியாகக் கிடைக்கின்ற தண்ணீரை நம்முடைய தென் மாவட்டங்களுக்குக் கொண்டு வருவதற்காக வேண்டிய சூழ்நிலையை உண்டாக்கித் தரவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கி றேன்.

அடுத்தபடியாக, பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான ஏராளமான ஏரிகள் இன்னும் மராமத்துச் செய்யப்படாமல் இருக்கின்றன. ஒவ்வொரு கூட்டத் தொடரிலும் நாங்கள் இதை எடுத்துச் சொல்லியும் அதற்குப் பிறகு உணவு உற்பத்தியைப் பெருக்குவதிலே அக்கறை கொண்டவர்களாக உள்ள நாம் அதைக் கவனிக்காமல் இருப்பது வருந்தத்தக்கது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். குறிப்பாக அறந்தாங்கி வட்டத்தை எடுத்துக் கொண்டால், பி.டபிள்யூ.டி. இலாகாவிற்குச் சொந்தமான பல ஏரிகள் இன்னும் மராமத்துச் செய்யப்படாமல் இருக்கின்றன. ஏற்கனவே ஜமீன் கிராமங்களாக இருந்த கிராமங்களைச் சர்க்கார் எடுத்துக்கொண்டு கிட்டத்தட்ட 15 ஆண்டுகள் ஆகிறது. இந்தப் பதினைந்து ஆண்டுகளுக்கிடையே ஏரிகளில்

சிறிய சிறிய மராமத்து வேலைகள் செய்யப்பட்டிருக்கின்றதே ஒழிய பெரிய மேஜர் ஒர்க்ஸ் இதுவரை செய்யப்படவில்லை. குறிப்பாக சில ஏரிகளை எடுத்துக்கொண்டு பார்க்கலாம். இடையாற்றுமங்கலம் மொகத்திலேயுள்ள பெரிய ஏரி சுமார் 50 வருடங்களாக எந்தவிதமான மராமத்தும் செய்யப்படாமல் இருக்கிறது. வெள்ளாற்றிலே அணைக்கட்டுப் போட்டுத் தந்திருக்கிறோம். ஆவடையார் கோவில் தேவஸ்தானத்திற்குச் சொந்தமான ஒரு ஏரிக்கு வாய்க்கால் விடப்பட்டு இருக்கிறது. ஆனால் அந்த ஏரிக்குக் கரை இல்லை. எந்தவிதமான மராமத்தும் செய்யப்படவில்லை. இந்த ஆண்டுகூட கிடைத்த தண்ணீரைக் கொண்டுசெல்ல முடியாத ஒரு சூழ்நிலை அங்கு ஏற்பட்டது. செய்யப்படவேண்டிய வேலைகள், ஒழுங்காகச் செய்யப்பட வேண்டும் என்பது ஒன்று; அவைகள் காலாகாலத்தில் செய்யப்படவேண்டும் என்பது மற்றொன்று; நல்ல முறையிலும் செய்யப்பட வேண்டும் என்பது தான் எங்களுடைய கோரிக்கை.

இதுபோல், எஸ்.ஐ.எம்.பி. டிவிஷனுக்குச் சொந்தமான பல ஏரிகள் மராமத்துச் செய்யப்படாமல் இருக்கின்றன. அந்த ஏரிகளை அமைச்சர் அவர்களோ அல்லது மற்றவர்களோ பார்வையிடவேண்டும். சில இடங்களில் ஏரிகளுக்கும், வயலுக்கும், கரைக்கும் சம்பந்தாசம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. அவைகளை உடனடியாக மராமத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, பூமிக்கு அடியில் உள்ள நீரூற்றுக்களைக் கண்டு பிடிப்பதன் காரணமாக, விவசாயத்தைப் பெருக்குவதற்கான திட்டப்படி ஒரத்தநாடு, பட்டுக்கோட்டைப் பகுதிகளில் ஆராய்ச்சி நடத்தப் போவதாக இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அறந்தாங்கி வட்டத்திலே பல்வேறு இடங்களில் நீரூற்றுக்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆவடையார் கோவிலுக்குப் பக்கத்திலே விளாநூரில் வெளிநாட்டு நிபுணர்கள் ஆராய்ச்சி செய்து நீரூற்றுக்கள் இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதைப்போல் அறந்தாங்கிக்குப் பக்கத்திலேயும் அருமையான நீரூற்றுக்கள் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. நமக்குக் காவேரித் தண்ணீரைக் கொண்டுவருவதற்காக எடுக்கப்படுகின்ற முயற்சிகளினிடையே, இந்த நீரூற்றுக்களைக் கண்டுபிடிப்பதன்மூலமாக, அதன்மூலம் விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலமாக உணவுப் பிரச்னையை நம்மால் சமாளிக்க முடியுமென்ற நம்பிக்கையிலே உடனடியாக இவைகளைச் செய்து தர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

பொதுவாக இங்கே ஒதுக்கப்படுகின்ற தொகைகளைப் பற்றி நான் இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னதுபோல் மிகப் பின்தங்கிய பகுதிகளாக இருக்கின்ற இடங்களை அமைச்சர் அவர்களும், மற்றவர்களும் சுற்றிப் பார்த்து இல்லையென்றால் அதற்காக ஒரு குழுவை நியமித்து, எங்கெங்கு என்ன வேலைகள் செய்யவேண்டும், என்பதையெல்லாம் பார்த்து அந்தந்த இடங்களில் வேலைகளைத் துரிதமாக செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. எம். தண்டாயுதபாணி:** சட்டமன்றத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, அதை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்பு கிறேன்.

தற்போது உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இந்தத் தருணத்தில் விவசாயத்திற்கு வேண்டிய வசதிகளைப் பெருக்கி உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு முற்பட்டுள்ளோம். அரசு அளிக்கும் உதவிகள் பெற்று, ஏற்பட்டிருக்கும் உணவு நெருக்கடியைப் போக்கக்கூடிய வகையில் எல்லா மாவட்ட விவசாயிகளும் உற்பத்தியைப் பெருக்கியுள்ளார்கள். அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே நெருக்கடி நிலையைச் சமாளிப்பதற்குப் பெரும் பங்கு கொண்டார்கள் என்று கூறினால் அது மிகையாகாது. யாரும் அதை மறுக்கவும் முடியாது. குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திலே ஏறத்





தாழ இந்த மாநிலத்திலே சாகுபடி செய்யப்படுகிற நில விஸ்தீரணத்திலே நான்கில் ஒரு பங்கு, அதாவது 15 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்து வருகிறோம். ஆகவே, எங்களுக்கு இருக்கும் சிறு சிறு சிக்கல்களை நிவர்த்தி செய்துகொடுத்தால் இன்னும் அதிகமாக உற்பத்தியைப் பெருக்கமுடியு மென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன்.

எங்களுக்கு இருவிதமான சிக்கல்கள் உண்டு. குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலே, திருத்துறைப்பூண்டி, நன்னிலம், நாகப்பட்டினம், சீர்காழி போன்ற தாலூகாக்கள் ஓல்டு டெல்டாவைச் சேர்ந்த பகுதிகள். அங்கு வடிகால் பிரச்னை தீராத பிரச்னையாக இருந்து வருகிறது. அந்தப் பகுதிகளிலே ஏறத்தாழ 11 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்து வருகிறோம். பட்டுக்கோட்டை, ஒரத்தநாடு அறந்தாங்கிப் பகுதியில் 4 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்து வருகிறோம். அந்தப் பகுதிக்கு, 1929-ல் மேட்டூர் அணை கட்டி அதன்மூலம் நீர்ப்பாசன வசதி செய்யப்பட்டது. இந்தப் பகுதிகளுக்கு கடைநிலைப் பகுதிகளாக இருக்கிற காரணத்தால் போதுமான அளவுக்குத் தண்ணீர் கிடைக்கிறதா என்று பார்த்தால் தண்ணீர் போதுமான அளவுக்குக் கிடைக்க வில்லை என்பது தெரியவரும். அதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. குறிப்பாக, அந்தக் காலத்தில் அணை கட்டும்பொழுது 1 கன அடி தண்ணீருக்கு 75 ஏக்கர் பாசன வசதி கிடைக்கச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் திட்டமிட்டார்கள். ஆனால், ஓல்டு டெல்டாவில் 1 கன அடி 40 ஏக்கர் விஸ்தீரணத்திற்குத்தான் தண்ணீர் பாய்வதற்கு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே இப்பொழுது பாசன வசதிக்கு அளிக்கப் படுகின்ற தண்ணீர் அளவு போதாதது நாம் "குரோ மோர் ஃபூட்" என்ற திட்டத்தின் அடிப்படையிலே, ஆயக்கட்டிலே, தலைப்பிலே டெம்பரரி பைப் அமைத்துக்கொடுத்தோம். அது டெம்பரரி பைப்பாக இருந்தாலும் அதை நீக்குவது என்பது இயலாத நிலையில் இருந்து வருகிறது. ஆகவே, அந்த நிலைகளையெல்லாம் பரிசீலனை செய்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடை நிலைப் பகுதிகளுக்குத் தண்ணீர் பாதிக்கப்படுகிறது. தலைப்பிலே கல்லணைக் கால்வாயிலும் அதற்கு ஏற்றபடி தண்ணீர் விடுவதில்லை. அதிகாரிகளைக் காரணம் கேட்கும்பொழுது 3,500 கன அடி தண்ணீர் தான் விடமுடியும்; அதற்கு மேல் விட்டால் கொள்ளளவு போதாது. அதை அகலப்படுத்தி, ஆழப்படுத்தினால்தான் அதிகமாகத் தண்ணீர் விட இயலும் என்று கூறிவிடுகிறார்கள். ஆகவே, இந்த நிலைகளையெல்லாம் நிச்சயமாக நன்றாகப் பரிசீலனை செய்து பார்த்து, இந்தச் சிக்கல்களை நிவர்த்தி செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு கன அடி தண்ணீர் 75 ஏக்கருக்கு என்று இருப்பதை ஓல்டு டெல்டாவில் போல் 40 ஏக்கர் என்று குறைக்காவிட்டாலும், 50 ஏக்கர் பாசன வசதி செய்வதற்காவது அனுமதி கொடுத்தால் நிச்சயமாக விவசாயத்தைப் பெருக்குவதற்கு அது ஒரு வாய்ப்பாக அமைய முடியும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன்.

புதிதாகப் பாசனவசதி அளிக்காவிடினும் ஆயக்கட்டிலே சேர்க்கப்பட்ட நிலங்களுக்கு தண்ணீர் வசதி கிடைக்காத கடைநிலைப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப் பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்னும் பட்டுக்கோட்டைப் பகுதியிலே பல காட்டாறுகள் இருந்து வருகின்றன. பட்டுக்கோட்டைத் தாலூகாவிலே கல்லணைக் கால்வாய் பாயாத பகுதிகள் பல ஆயிரம் ஏக்கர் இருந்து வருகின்றன. காட்டாறுகளுக்குக் குறுக்கே, சிக்கனமான அளவில் சிறிய சிறிய அணைகள் கட்டி, அந்தப் பகுதிகளுக்குப் பாசன வசதி செய்து கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக நசுனி ஆறு என்ற ஒரு ஆறு இருக்கிறது. அந்த ஆற்றின் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன்பே பரிசீலனை செய்யப்பட்டு, இந்தச் சட்டசபை அஷ்யூரன்ஸ் கமிட்டிகூட அந்த

இடத்தை வந்து பார்த்துச் சென்றது. அதன்மூலம் ஏறத்தாழ 5 ஆயிரம் ஏக்கர் அளவுக்குப் பாசன வசதி செய்து கொடுக்க முடியும். எதோ காரணத்தால் மூன்று ஆண்டு காலமாக தள்ளி போடப்பட்டு வருகிறது. அந்தப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்குப் பாசன ஆதாரத்தைப் பெருக்கித் தரும் வகையில் அதனை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியில் பாசன வாடிகால் என்ற நிலை சில ஆறுகளில் இருக்கிறது. பல கிராமங்களுக்குப் பாசன ஆதாரமாகவும், பல பகுதிகளுக்கு வாடிகால் ஆதாரமாகவும் இருந்து வருகிறது. அந்தப் பாசன வாடிகால்கள் ஆண்டுதோறும் பராமரிக்கப்படுவதில்லை. ஏன் பராமரிக்கப்படவில்லை என்று கேட்டால் அதற்குரிய தொகை ஒதுக்கப்படவில்லை என்று கூறிவிடுகிறார்கள். ஆண்டுதோறும் பராமரிப்புச் செய்யத் தவறினால் அது பாசனத்திற்கு வசதியற்றதாகப் போய்விடும். ஆகவே, பாசன வாடிகால் திட்டங்களை ஆண்டுதோறும் பராமரிப்பதற்கு வேண்டிய தொகைகளை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரை தம்பிக்கோட்டை வாய்க்கால் வெட்டப்பட்டது. 750 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இடையில் ஒரு சில ஷட்டர்கள் போட்டுக்கொடுத்தால் கடைநிலைப் பகுதிகளும் பாசன ஆதாரம் பெற வழி ஏற்படும். இதைப் பற்றி அமைச்சர் அவர்களிடத்திலும் சீப் என்சினியர் அவர்களிடத்திலும் எடுத்துக் கூறியிருக்கிறேன். அதைச் செய்து கொடுத்தால் மிக உதவியாக இருக்குமென்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மாதிரி சிறு அணைக்கட்டுகள் கட்டுவதிலே செலவிடப்படுகிற தொகையையும், அதிலிருந்து கிடைக்கின்ற வருவாயின் அளவையும் கணக்கிட்டு அந்த அணைக்கட்டுத் திட்டம் சரிக்கட்டி வருமா என்று பார்த்து, சரிக்கட்டாது என்று உணர்ந்தால் கைவிட்டு விடுகிறார்கள். நாம் உணவு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ற நிலையில் இதுபோன்ற சிறு தடங்கல்களையெல்லாம் நீக்கி, இந்த மாதிரிச் சிக்கல்களை எல்லாம் அமைச்சர் அவர்கள் நிவர்த்தி செய்து எங்களுக்குப் பாசன வசதியைப் பெருக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

***திரு. ஏ. பி. பாலகன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். கடனா நதி, ராம நதி என்ற இரண்டு நதிகளிலும் நீர்த்தேக்கம் கட்டும் விஷயம் கடந்த ஏழு வருஷங்களாகவே தாமதப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறது. இந்த இரு திட்டங்களையும் விரிவு படுத்தவேண்டுமென்று சமீபத்தில் மறு பரிசீலனை செய்யும் ஒரு நிலையில், மாவட்டத்தில் இதற்கென்று தனியாக இருக்கின்ற எஞ்சினியர்களும், பிரதம எஞ்சினியர் அவர்களும் எடுத்துக்கொண்ட ஆர்வத்திற்கும் உற்சாகத்திற்கும் என் பாராட்டுதல்களைத் தெரிவிக்காமல் இருக்க முடியாது. இந்த இரு திட்டங்களுக்கும் இப்போதைய பட்ஜட்டிலேயே நிதி ஒதுக்கீடு செய்யப்படும் நிலை ஏற்பட வேண்டுமென்ற எண்ணத்தோடு அவசர அவசரமாக கிராமங்களுக்குச் சென்று காரியத்தை முடிக்கப் பெரு முயற்சி செய்தார்கள். அம்மாதிரி அவர்கள் செய்ததன் காரணமாக இந்தத் திட்டத்தைப் பற்றி இப்போது ஆய்வுரையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டங்கள் இரண்டும் திட்டக் கமிஷனால் ஒப்புதல் வழங்கப்பட்டதும் நிறைவேற்றப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்காக என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நான் எனது மனப்பூர்வமான நன்றியை நமது உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் வெகு காலமாக அந்த மக்கள் மத்தியில் பெரிய ஆர்வத்தை ஏற்படுத்தி இருக்கின்ற திட்டம். ஆகையால் மேற்கொண்டு தாமதமாகிவிடாமல் திட்டக் கமிஷன் ஒப்புதலை வாங்கி விரைவில் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



எங்களுடைய நெல்லை மாவட்டத்தில் சமீபத்தில் வடகிழக்குப் பருவக் காற்று பொய்த்ததன் காரணமாக ஏற்பட்ட விளைவுகளைச் சிறிது எடுத்துக் கூற விரும்புகிறேன். எங்கள் நெல்லை மாவட்டத்திற்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டு. "நெல்லைக் காத்த நெல்லையப்பர் அமர்ந்த ஒரு மாவட்டம்" என்று கூறுவார்கள். நெல்லுக்கு இந்த ராஜ்யத்தில் தஞ்சைக்கு எவ்வளவு சிறப்பு உண்டோ அதே சிறப்பு நெல்லை மாவட்டத்திற்கும் உண்டு. இதுவரை நெல்லை மாவட்ட மக்கள் அரிசி இல்லாமல் பசியோ, பஞ்சமோ, பட்டினியோ ஏற்பட்டுத் தவித்தார்கள் என்று சரித்திரமே கிடையாது. ஆனால் அந்த நிலை இப்போது மாறிவிட்டது. "நெல்லுக்குத் தவம் இருக்கும் நெல்லை" என்று தவம் இருக்கும் நிலை ஏற்பட்டு விட்டது. அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் பெய்ய வேண்டிய வடகிழக்குப் பருவ மழை அறவே பொய்த்து விட்டது. என்னுடைய தொகுதியை எடுத்துக் கொண்டால் மூன்று விதமான பாசனத்தில் 22,000 ஏக்கர் நிலத்தில் நெல் விளைகிறது. ராம நதி, கடனா நதி பாசனம் டைரக்ட் ஆக இல்லாமல் குளத்திற்கு வந்து அதன் மூலம் சுமார் 13,000 ஏக்கர் விளைகிறது. மானாவாரிக் குளங்கள் மூலமாக விளைகின்ற நிலங்கள் சுமார் 5,000 ஏக்கர். கழிவு நீரோடைகள் சிற்றோடைகள் மூலம் விளைகின்ற நிலங்கள் சுமார் 4,000 ஏக்கர். ஆக 22,000 ஏக்கர் கடயம் தொகுதியில் நெல் விளைகின்ற பூமி. இந்த 22,000 ஏக்கர்களும் இப்போது தீய்ந்து விட்டது. இதற்கு மேலாக உள்ள கிணறுகளில், கமலை கட்டி இறைத்து அல்லது ஆயில் எஞ்சின் வைத்து இறைத்துப் பாசனம் செய்யப்பட்ட சுமார் 500 ஏக்கர் விளைந்திருக்கிறது. அந்தப் புறத்தில் தாம்பிரபரணி சிஸ்டத்தில் சுமார் 200 ஏக்கர் விளைந்திருக்கும். ஆக 700 ஏக்கரிலும் மொத்தத்தில் 6,000 மூட்டை நெல் கிடைத்திருக்கும். இரண்டு லட்சம் மக்கள் தொகை கொண்ட எங்கள் தொகுதிக்கு 6,000 மூட்டை நெல் கிடைத்திருக்கிறது. ஆனால் அந்த நெல்லையும் எங்களுடைய தொகுதிக்குள்ளேயே கொண்டு போக வழி இல்லாமல் $1\frac{1}{2}$ மைலுக்கு ஒரு செக்போஸ்ட் போட்டு வைத்திருக்கிறார்கள். தொகுதிக்குள்ளேயே நெல் போக விடாமல் தடுக்கும் முறையால் அங்கே ஜனங்கள் மத்தியில் பரபரப்பு ஏற்படுருக்கிறது. ஆனால் டிமாண்ட் நோட்டீஸ் 22,000 ஏக்கருக்கும் வந்து விட்டது. ஜனவரி மாதம் கிராமாதிகாரிகள் வந்து பார்த்திருக்கிறார்கள். மழை வருமா வராதா என்ற நிலை இருந்தது. ஒரு ஏக்கருக்குக் குறைந்தவர்கள் எல்லாம் நெல் கொடுக்க வேண்டுமென்ற சட்டம் இல்லை. ஆனால், 80 செண்ட், 50 செண்ட் வைத்திருப்பவர்களுக்கெல்லாம் டிமாண்ட் நோட்டீஸ் வந்திருக்கிறது. ஒரு ஏக்கருக்குக் குறைவாக வைத்திருப்பவர்களுக்கெல்லாம் டிமாண்ட் நோட்டீஸ் போயிருக்கிறது. சாதாரண விவசாயிகள் அங்கு இருக்கின்ற அதிகாரிகளை, தாசில்தார்களை அணுகமுடியாத சூழ்நிலையில் இருப்பவர்களுக்கெல்லாம் தீராத தலைவலியாக இருக்கிறது. முன்பு வீடு வீடாகச் சென்று இருக்கிற நெல்லை எடுத்தார்கள். அப்போது சாப்பாட்டுக்கு இரண்டு மூட்டையை வைத்துக்கொண்டு மிச்சத்தை எடுத்துக்கொண்டார்கள். இது ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. இதனால் ஊருக்குள் கெட்டபெயர் வருகிறது என்று லெவி ஸிஸ்டம் கொண்டு வரப்பட்டது. தற்போது அதன் காரணமாக மக்கள் மத்தியில் பெரும் குழப்பம் ஏற்பட்டு விட்டது.

முன்பாவது இருக்கிற நெல்லை அளக்கச் சொன்னார்கள். இப்போது கிரயத்துக்கு வாங்கிக் கொடுக்கச் சொல்கிறார்கள். இரண்டு லட்சம் மக்கள் தொகைக்கு 6,000 மூட்டைதான் விளைந்திருக்கிறது. நெல்லைக் கொண்டு போக முடியாமல் ஆங்காங்கு செக் போஸ்ட்ஸ் இருக்கின்றன. ஆக இப்படிப்பட்ட ஒரு அவல நிலை எங்கள் பகுதியில் இருக்கிறது. இதை நிவர்த்திக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நெல்லை மாவட்ட எம். எல். ஏ.க்கள் இந்த வேலையைத் தான் பார்த்துக் கொண்டிருந்தோம். கிணற்று இறைவை மூலம் விளைந்த நெல்லுக்கு காஸ்ட் ஆப் ப்ரொடக்ஷன் 60, 70 ரூபாயாகிறது. ஆக இந்த லெவி ஸிஸ்டத்தில் குழப்பம் இருக்கிறது. உணவுதான்ய விநியோகத்தைப் பொறுத்த மட்டில் எவ்வளவு தேவையோ அவ்வளவு கொடுப்பதில்லை

கால் பந்துதான் கொடுக்கிறார்கள். 40 முட்டை தேவையானபோது பத்து முட்டைதான் கொடுக்கிறார்கள். ஒரு பஞ்சாயத்தில் மூன்று மைல் சுற்றளவில் கிராமங்கள் இருக்கின்றன. மற்றவர்களை தேர்ந்தெடுத்து செய்வார்களோ என்று பத்து முட்டையை ஒரு பள்ளி தேர்ந்தெடுத்து கொடுத்து முடித்து விடுகிறார்கள். ஆகவே மூன்று மைல் தூரத்திலிருந்து பிறிது நேரம் கழித்து வருபவர்களுக்கு கிடைக்க முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே இதை நான்கு பங்கு அதிகமாகக் கொடுக்கவேண்டும். சாத்தியமில்லாத அளவிற்கு திருநெல்வேலி மாவட்டத்தில் பருவ மழை பெய்து விட்டதால் நில வரி, செஸ் வரி, தண்ணீர் வரி போன்றவைகளைத் தள்ளுபடி செய்யவேண்டும். சர்க்கார் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே அடுத்த அறுவடை வரை தள்ளிப் போட்டு தவணை கொடுக்கவேண்டும். அதோடு கடயம் தொகுதியைப் பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தி எல்லா பஞ்ச நிவாரண வேலைகளையும் அங்கு செய்து தர வேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, எதிர்கட்சியினர் கொண்டுவந்திருக்கும் வெட்டுப் பிரேரணையை ஆதரித்து சில கருத்துக்கள் கூற விரும்புகிறேன். ராமேஸ்வரம் தனுஷ்கோடியில் புயலால் ஏற்பட்ட சேதத்தைப் பற்றியும் அதற்காக அங்கு செலவு செய்ய இருக்கிற பணம் பற்றியும் இங்கு இந்த உரையில் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சமீபத்தில் ஏற்பட்ட புயல் காரணமாக அங்கு சாலைகள், கண்மாய்கள் இவைகள் பெரும்பாலும் பாதிக்கப் பட்டுவிட்டன. அமைச்சர் அவர்களும் இதை நேரில் வந்து பார்த்தார்கள், நானும் அவர்கள் கூட சுற்றிப்பார்த்தேன். அங்கு கண்மாய் அமைப் பைப்பார்க்கிறபோது ஒரு கண்மாயிலிருந்து கலிங்கு வழி வரும் தண்ணீர் அடுத்துள்ள கண்மாய்களுக்கு படிப்படியாகப் போவதால் திடீரென்று மழை பெய்தால் ஒரு கண்மாயில் உடைப்பு ஏற்பட்டால் அடுத்து அடுத்து எல்லாக் கண்மாய்களிலும் உடைப்பு ஏற்டுகிறது. இதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன். திடீரென்று மழை பெய்து கண்மாயில் உடைப்பு ஏற்பட்டால் அந்தத் தண்ணீரை உடனடியாக வெளியேற்ற வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ராமனுதபுரம் ஜில்லாவில் கிட்டத்தட்ட அங்குள்ள விவசாயம் அத்தனையும் கண்மாய் மூலம் தான் செய்யப்படுகிறது. அங்கு 5,000 கண்மாய்கள் இருக்கின்றன. அங்குள்ள கண்மாய்கள் பெரும்பாலும் ஜமீன் பிரதேசத் தில் இருந்ததால் இன்னும் சில கண்மாய்கள் கால்வாய்கள் மராமத்துச் செய்யப்படாமல் இருக்கின்றன. கண்மாய் மராமத்துச் செய்யப்படும் போது கரைகளைத்தான் பலப்படுத்துகிறார்களே தவிர மழை பெய்தவுடன் கரையில் இருக்கிற மண் அடிக்கப்பட்டுக் கண்மாய் மேடாகி விடுகிறது. ஒரு கண் மாயில் நீர் பெருகிவிட்டால் ஒரு போகம் விளையக்கூடிய நிலைமை இருந்தது. ஆனால் இன்று கண்மாய்கள் மேடாகிவிட்டதால் மழை பெய்தாலும் கூட அடிக்கடி அங்கு பஞ்சம் ஏற்படுகிறது. ஆகவே கரைகளைமட்டும் பலப்படுத்துவது என்றில்லாது புல் டோஸர்களை வைத்துக் கண்மாய்களை நன்கு ஆழப்படுத்தி அதில் தண்ணீர் நிற்க வசதி செய்து கொடுத்து அதன் ஆயக்கட்டு அத்தனையும் விளைய வேண்டும். அதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள் கிறேன்.

இதில், சமீபத்தில் ஏற்பட்ட புயல் சேது சமுத்திரத் திட்டத்தை உறுதியாக்கச் செய்தது என்று சொல்லியிருக்கிறார்கள். புயல் உறுதி செய்தாலும் உடனடியாக சேதுசமுத்திரத் திட்டத்தை ஏற்று நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இலங்கையிலிருந்து வருகிற வர்களுக்கும் அந்தப் பிராந்தியத்தில் உள்ளவர்களுக்கும் அதன் காரண மாக வேலைவாய்ப்பு ஏற்படும். அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆகவே, சேதுசமுத்திரத்திட்டத்தை உடனடியாக ஏற்று நடத்த வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீர்பாசன ஆதாரங்கள் அத்தனையையும் நாம் பயன்படுத்தும் கடைசி நிலைக்கு வந்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நம்





மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒன்பது பெரிய அணைக்கட்டுத் திட்டங் களைக்கட்டி அது முடிந்து விட்டது. இனிமேல் ஒன்றும் இல்லையா என்றால் நிச்சயமாக இருக்கிறது. பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரை இறைத்துக் கால்வாய் மூலம் பாசன வசதி செய்வதற்கு எந்த அளவுக்கு முடியும் என்பதை ஆராய்ந்து அந்தத் தண்ணீரை உபயோகிக்க முடியுமா என்பது பற்றி அதற்கு வேண்டிய அறிக்கை கூட தயார் செய்திருக்கிறார்கள் என்று சொல்லி யிருக்கிறார்கள். ஆக, பூமிக்கு அடியில் இருக்கிற தண்ணீரை எப்படி உபயோகிப்பது என்பது பற்றிக் கவனம் செலுத்தி அதைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 17 வருட ஆட்சியில் எவ்வளவு குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன என்று சொல்ல முடியுமா? கிழக்கு ராமநாதபுரம் பகுதியில் என்ன செய்திருக்கிறீர்கள் ? ஏன் அங்கு குழாய்க் கிணறுகளைத் தோண்ட கூடாது ? முதல் அமைச்சர் அவர்கள் உணவு அமைச்சராக இருந்த போது குறிப்பிட்டிருக்கிறார்கள் கிட்டத் தட்ட அதற்கு 26,400 ரூபாய் செலவாகும் என்று. ஆண்டுக்கு "ரன்னிங் எக்ஸ்பென்ஸஸ்" 5,800 ரூபாய் ஆகிறது. 40 ஏக்கருக்குப் பாசன வசதி செய்ய முடியும். ஆக ஒரு போகத்திற்கு 145 ரூபாய் என்ற அளவில் வருகிறது. உணவுப் பற்றாக்குறை இருக்கும் இந்த நேரத்தில் உணவு உற் பத்தியைப் பெருக்குவது மிக அவசியம். ஆகவே இதற்காக அரசாங்கம் பாதித் தொகை மான்யமாகக் கொடுத்து பாதித் தொகை விவசாயிகளிடம் இருந்து வசூலிக்கவேண்டும். அடுத்தபடியாக, பில்டர் பாயிண்ட் ஸ்கீம்ஸ் நிறையப் போட வேண்டும். எங்கெங்கு ஆறுகள் ஓடுகின்றனவோ அங்கு ஆற்றுப் படுகை ஓரத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் சிறப்பாக இருக்கும் என்றும் கூறிக்கொள்ளுகிறேன். ரிவர் பம்பிங் ஸ்கீம்மையும் பரிசீலனை செய்ததில் ஏக்கருக்கு தண்ணீர் ரேட் 50 ரூபாய் ஆகும் என்று பக்தவத்சலம் ரிப்போர்ட்டில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. அதை வைகை ஆற்றுப் படுகை ஓரத்தில் செய்தால் நலமாக இருக்கும். அப்படி ஆற்றுப் படுகை ஓரத்தில் ரிவர் பம்பிங் ஸ்கிமை வைத்தால் ஒருங்கிடுக்கு 100 ஏக்கர் வரை விவசாயம் செய்ய முடியும். பாசன வசதி கொடுக்கிறவர்களிடம் இருந்து தண்ணீர் ரேட்டை வாங்கிக் கொள்ளலாம். ஆக இப்பேர்ப்பட்ட திட்டத்தில் கவனம் செலுத்தினால் ஓரளவு உணவு நெருக்கடியைத் தீர்க்கமுடியும். ராமனுதபுரம் ஜில்லாபற்றி தங்களுக்கு நன்கு தெரியும். மதிப்புக்குரிய கரியமாணிக்கம் அம்பலம் அவர்கள் தொகுதியில் குடிக்கக் கூட தண்ணீர் இல்லை. லாரிகளில் கொண்டுபோய்த்தான் தண்ணீர் ஊற்றும் நிலை இருக்கிறது. ஆகவே அப்பேர்ப்பட்ட பிரதேசங்களில் குழாய் கிணறுகளை வெட்டுவதற்கு அரசாங்கம் அதை ஏற்றுக் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தண்ணீரைச் சிக்கனமாக பயன் படுத்தவேண்டும் என்பது சம்பந்தமாக டாக்டர் கே. ராமைய்யா என்பவர் ஒரு கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதை நான் வாசிக்க விரும்பு கிறேன். 'Though in India it is considered essential to keep the water always in the field throughout the growth of the crop, in some of the other countries like Italy, Spain or America, there is often a practice to drain the water off completely from the fields now and then.'

அதேபோல் ஏன் இங்கும் செய்யக் கூடாது ? அந்த விதத்தில் இங்கும் செய்ய ஆராய்ச்சி நடத்தினால் நல்லது. விவசாயத்திற்குத் தண்ணீரை எப்போதும் நிறுத்திக்கொள்ள வேண்டிய சூழ் நிலை இருக்கிறது. ஆகவே ஆராய்ச்சி செய்து தண்ணீர் இல்லாது காயக்கூடிய இடங்களில் அதிபடியான வசதிகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மஞ்சளாறுத் திட்டம் என்று ஒன்று இருக்கிறது. மதுரை பெரியகுளம் தாலுகாவில் வைகை உப நதியில் வருகிற அணைக்கட்டுக்கு 65 லட்சம் ரூபாய் செலவழிக்க முடியும் என்றிருக்கிறது. இதனால் வைகை அணைக் கட்டிற்கு வரும் தண்ணீர் பாதிக்கப்படாதா என்பதை ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வைகை அணைக்கட்டில் தண்ணீரே கிடையாது. சமீபத்தில் ஏற்பட்ட புயலினால் தண்ணீர் விடுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆகவே, தண்ணீர் வரக்கூடிய பிரதேசங்களில் அணைகள் கட்டினால் வைகை

அனைக்கட்டு பாதிக்கப்படும். இறந்த பாபநாசம் மக்கள் அதனால் பாதிக்கப்படுவார்கள். ஆகவே அதை மறு பரிசீலனை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. அ. அப்பாவு தேவர் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியத்தை நான் வரவேற்று, ஆதரித்து சில வார்த்தைகள் கூறலாம் என்று விரும்புகிறேன். எங்கள் தஞ்சை ஜில்லாவில் நீர்ப்பாசன சம்பந்தமாக வடிகால் முதலியவைகள் ஒரளவு நல்ல முறையில் நடந்து வருகின்றன. ஆனால் இன்னும் சில தாலுகாக்களிலும் சில கிராமங்களிலும் இந்தப் பாசன வசதிகளும் வடிகால் வசதியும் இன்னும் சரிவர ஏற்படவில்லை. அவைகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த சாகுபடி திட்டத்தின்கீழ் எங்கள் ஜில்லாவில் பல இடங்களில் இந்தத் திட்டம் அமலாகி வருகிறது. அதற்குச் சில கிராமங்களில் இன்னும் வடிகால் வசதிகள், வாய்க்கால் வசதிகள் இல்லாததினால் உற்பத்தி குறைகிறது. அவைகளைக் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். சில மாதங்களுக்கு முன் கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் டெல்லி பாசன அமைச்சர் கனம் டாக்டர் கே. எல். ராவ் அவர்களும் தஞ்சை ஜில்லாவிற்கு வந்து இன்னும் பெரிய அதிகாரிகளும், ஜில்லா அதிகாரிகளும் சேர்ந்து தஞ்சை ஜில்லாவில் முக்கியமாக என்ன செய்ய வேண்டும் என்பதை யோசித்து முடிவு செய்தார்கள். அதற்கு நல்ல பலன் கிடைத்திருக்கிறது. அது மாதிரி மறுமுறையும் கூட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஜில்லாவில் பாபநாசம் தாலுகாவில் வெண்ணாறு என்ற ஒரு பெரிய ஆறு இருக்கிறது. அதில் சில இடங்களில் கரைகள் மிகவும் பல வீனமாக உடைந்து இருக்கின்றன. அவைகளை உயர்த்தும்படியும் கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கரைகளில் சாதாரணமாக ரிவட்மெண்ட் கட்டு கிறார்கள். ரிவட்மெண்டு கட்டுவதில் பிரயோசனம் இல்லை. இவ்விதம் கட்டப்பட்ட ரிவட்மெண்ட் இரண்டு மூன்று மாதங்களுக்குள், அதாவது தண்ணீர் வருவதற்குள் விழுந்து விடுகின்றன. அதனால் கரை பலவீனம் அடைகிறது. இதில் என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், முன் னால் இருந்த பழைய முறைப்படி கிராயன்ஸ் முடைசல் கட்டுவார்கள் அது போன்று கட்டினால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன். அதனால் இரண்டுவிதமான பிரயோசனங்கள் ஏற்படுகின்றன. ஒன்று கரைக்கும் பலம் ஏற்படும். அதோடு அதிலிருந்து சிறு நிலங்கள் சேரு கின்ற இடத்திற்குப் படுகை என்று சொல்வார்கள். அதிலும் உபயோகம் கிடைக்கின்ற அளவிற்குப் பலனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தக் கரைகள் இல்லாத பெரிய ஆறுகளில் 10 வருடத்திற்கு ஒரு முறையாவது கரையை உயர்த்த வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது. அப்படி 10 வருடங்களுக்கு என்றில்லா விட்டாலும் 15 வருடங்களுக்கு ஒரு முறையாவது பெரிய ஆறுகளில் கரைகளை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாபநாசம் தாலுகாவில் என் தொகுதியில் சேர்மா நல்லூர் என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அதில் 75 ஏக்கர்களுக்கு வடிகால் வசதியில்லாத நிலைமை இருக்கிறது. இதனால் அவை களில் மிகவும் நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. ஏக்கருக்கு மூன்று கலம் வரை யில்தான் அதிலிருந்து விளைவு ஏற்படுகிறது. என்பதைத் தெரிவித்துக் கொண்டு அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் பாபநாசம் தாலுகாவில் என் தொகுதியில் இரும்புதலை என்ற கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்திற்கு வடிகால் வசதியே கிடையாது. என்று கிராம மக்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் கிராமத் திற்கு பம்பு வைத்துத் தண்ணீர் இறைக்கலாம் என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். இந்தப் பெரிய கிராமத்திற்கு பம்பு வைத்துத் தண்ணீர் இறைப்பதென்றால் அது சாத்தியமாக இருக்கும் என்று தோன்றவில்லை. அதைக் கவனித்து இந்தக் கிராமத்திற்கு வடிகால் வசதி செய்து கொடுக்க



வண்டும் என்றுகேட்டுக்கொள்கிறேன். இந்த இடத்தில் சைபன்
iphon) வசதி ஏற்படுத்தி அதன் மூலமாக என் தண்ணீர் வடிய வசதி
சய்து கொடுக்கக் கூடாது என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்
துமாதிரி செய்யக்கூடியதாக இருந்தால் அந்தக் கிராமத்திற்கு மிகவும்
லமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த வாய்க்கால்களில் என்க்ரோச்மெண்ட் (ஆக்கிரமிப்பு)
ங்கள் தாலுகாவைப் பொறுத்தவரையில் அதிகமாக இருக்கிறது. அவை
ளை எல்லாம் உடனடியாக காலி செய்து திரும்பி எடுக்கும்படியாக உத்தர
ட வேண்டும். இந்த மாதிரி என்க்ரோச்மெண்ட் செய்வதால் தண்ணீர்
ாய்வது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. அதனால் உற்பத்தியும் பாதிக்கப்
டுகிறது. அதற்கு அநாவது என்க்ரோச்மெண்டுக்கு காரணமாய் இருப்ப
ார்கள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், வில்லேஜ் முன்சிப், கர்ணம் இவர்கள்
ான். இவர்களுக்குக் கடுமையான உத்தரவு போட்டால் இந்த மாதிரி
நேராது என்று அரசாங்கத்திற்கு நான் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன்.

அது மாத்திரமல்லாமல், வாய்க்கால்களிலுள்ள புறம்போக்கு நிலங்
ளுக்கு சர்வே கல் இருக்கின்றன. அவைகளும் அடிக்கடி காணாமல்
போய் விடுகின்றன. அதுமாதிரி போவதற்கு இவர்கள்தான் காரணமாய்
இருக்கிறார்கள். ஆகவே, இதற்கும் இந்த அதிகாரிகள்தான் ஜவாப்தாரி
என்று அரசாங்கம் சொன்னால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.
ஆறுகளுக்கு என்று நியமிக்கப்பட்டிருக்கின்ற லஸ்கர்கள் சரிவர வேலை
பார்ப்பதில்லை. ஆற்றங்கரைகளையும் கவனிப்பதில்லை. அதோடு பக்கத்தி
லுள்ள மரங்களையும் கவனிப்பதில்லை. இவர்களுக்குக் கடுமையான உத்
தரவு பிறப்பித்து அவைகளை எல்லாம் சரிவர பார்க்கும்படியாகச் சொல்ல
வேண்டு என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பெரிய கிராம ரோடுகள், பெரிய ரோடுகள் இவை
களில் எல்லாம் இடையூறுகள் இருக்கின்றன. ரோடு அகலம் இல்லாமல்
இருப்பதைப் போக்கி அகலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
மேலும் பல சிறிய கிராமங்களுக்கு ரோடு வசதியில்லாமல் இருக்கிறது.
அந்த இடங்களுக்கெல்லாம் ரோடு போட்டுக் கொடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். இதற்கெல்லாம் ஆவன செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. சோ. ஆறுமுகம் :** மதிப்பிற்குரிய சட்டமன்றத் தலைவர் அவர்
களே, இன்றையதினம் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர்
அவர்கள் கொண்டுவந்திருக்கும் 1965–66-ம் ஆண்டுக்கான நீர்ப்பாசன
மானியத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பு
கிறேன். பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள், கொடுத்திருக்கக்
கூடிய அறிக்கையில் நாம் எல்லாத் திட்டங்களையும் எடுத்துக்கொண்டோம்.
இன்னும் மேற்கொள்ளக்கூடிய திட்டங்கள் குறைவாகவே இருக்கின்றன.
அதுவும் சிறிய ஏரிகளைப் பழுது பார்த்து, அதன் மூலமாக விவசாயத்திற்குத்
தண்ணீர் கொடுக்க முடியும் என்று காண்பித்திருக்கிறார்கள். ஆனால்,
சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும், சேலம் பகுதியைச் சேர்ந்த
எம். எல். ஏ–க்கள் ஆகிய நாங்கள் பல ஆண்டுகளாக இந்த மன்றத்திலும்
அமைச்சர்களை நேரில் பார்க்கின்றபோதும், சேலம் மாவட்டத்திற்கு வருகை
தருகின்ற போதும், நாங்கள் விண்ணப்பங்கள் மூலமாகவும், அமைச்சர்
களிடத்திலே நேரடியாகவும் சொல்லி வருகின்றோம். சேலம் மாவட்டத்
திலே பொன்னியாறு-திருமணிமுத்தாறுத் திட்டத்தை எடுத்துக்கொள்ள
வேண்டும். இந்தத் திட்டத்தை சர்க்கார் எடுத்துக்கொண்டால் சேலம்
மாவட்டத்தில் தென் பகுதியில் இருக்கக்கூடிய கிட்டத்தட்ட 50,000 ஏக்கர்
நிலங்களுக்கு மேல் இதன் மூலமாகப் பாசன வசதி ஏற்படுவதோடு நூற்றுக்
கணக்கான ஏரிகளுக்கு, காவிரியில் உபரித் தண்ணீர் வருகிற நேரத்தில்,
அந்தத் தண்ணீரைக்கொண்டு ஏரிகளை நிரப்பி, அதன் மூலமாக விவ
சாயப் பெருங்குடி மக்களுக்கு நாம் நன்மை செய்கிற வகையிலும், உணவு
உற்பத்தியை அதிகமாகப் பெருக்குகிற வகையிலும் இந்தத் திட்டம் நல்ல

முறையிலே பயன்படும் என்று சமீபத்திலே மத்திய அமைச்சர் கலாம் கே. எல். ராவ் அவர்கள் கூட அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, சங்ககிரி பி.டபிள்யூ. டி. என்ஜினீயரும் இந்தத் திட்டம் பயனை தரும் திட்டம், இதைச் சர்க்கார் எடுத்துக்கொள்ளலாம் என்று மாடலைத் தயார் செய்தும், என்ன செலவு ஆகும் என்று அறிக்கை கூடத் தயாரித்துச் சர்க்காருக்கு அனுப்பியுள்ளார்கள். இப்படிப்பட்ட திட்டத்தை சர்க்கார் புறக்கணிப்பதற்கான காரணம் என்ன என்று என்னோடிருக்கும் உள்ள வர்கள் அறிந்துகொள்ள விரும்புகிறோம். உண்மையில் இந்தச் சர்க்கார், இந்த பொதுப் பணித் துறையை ஏற்றுக்கொண்டிருக்கிற அமைச்சர் அவர் கள் தயவு செய்து திட்ட வட்டமாகச் சொல்லிவிட வேண்டும் இந்த மன்றக் கூட்டத்திலே. ஆண்டுதோறும் நாங்கள் பேசிக்கொண்டே இருப்போம். என்று பேசி நீங்களும் கேட்டுக்கொண்டே இருப்போம் என்று இருந்து பேசுவதால் என்ன பயன் என்ற நிலையில் இருப்பது அந்தப் பகுதி மக்களுக்கு இது ஏதோ ஏமாற்று வித்தையாக இருக்கிறது. தேர்தல் நேரத்தில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று நினைக்கிறார்களோ என்று தோன்றுகிறது. நேரிலே சொன்னால் உடனடியாகக் கவனிப்பதாகச் சொல்லுகிறார்கள், பிறகு கவனிப்பதில்லை என்ற குற்றச்சாட்டை நான் அந்தப் பகுதி விவசாயிகள் சார்பில் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில், இந்த சேலம் பகுதியில் பஞ்சமலையில் இரும்புத் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்காக அந்தப் பகுதியிலுள்ள 22,000 ஏக்கர் நிலங்களுக்கு மேல் சர்க்கார் எடுத்துக்கொள்ளப்போவதாகச் சென்ற ஆண்டு கெஜட்டில் விளம்பரமும் செய்யப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்து அந்தப் பகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் 22,000 ஏக்கர் நிலங்களுக்கு மேல் எந்த நேரத்திலும் சர்க்கார் எடுத்துக்கொள்வார்கள், ஆகவே நாம் கிணற்றிலே தண்ணீர் இல்லாவிட்டாலும் கிணற்றை ஆழப்படுத்தித் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்து பயன் இல்லை என்றும், வீடுகள் தீக்கிரையானாலும், புதிதாக அமைத்துக் குடியிருப்பதில் பயன் இல்லை என்றும், எந்த நேரத்திலும் அந்த நிலங்களைச் சர்க்கார் எடுத்துக்கொள்வார்கள் என்ற அச்சத்தால் விவசாயிகள் நிலத்தில் நல்ல முறையில் பயிர் செய்யாமலும் அந்தப் பகுதி விவசாயிகள் பெரும்பாலும் ஒன்றரை ஆண்டு காலமாகச் சர்க்கார் அறிக்கையைப் பார்த்து நஷ்டம் ஏற்படுகிற வகையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதி நிலங்களுக்கு நில வரி வசூல் செய்வதைத் தவிர்க்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே நமது பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதே நேரத்திலே கிராமத்திலே விவசாயிகளிடத்திலே வரி வசூல் செய்யப்படுகிறது. வீட்டு வரிக்கு எப்படி டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்து வசூல் செய்கிறார்களோ, அதைப் போல் நில வரி வசூல் செய்யப்படுவதற்கும் முதல் தடவையாக இவ்வளவு ரூபாய் வரி செலுத்தப்பட வேண்டும், இரண்டாவது தடவையாக இவ்வளவு செலுத்தப்பட வேண்டும், மூன்றாவது தடவையாக இவ்வளவு செலுத்தப்பட வேண்டும் என்று முன்பு கூட்டியே டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்தால் கிராம அதிகாரிகள் விவசாயப் பெருங்குடி மக்களை ஏமாற்றாமல் இருக்க வழி ஏற்படும். அதே நேரத்தில் கிராம அதிகாரிகள் மீதும் மக்கள் குறை சொல்லாத நிலைமை ஏற்படும் என்று டிமாண்ட் நோட்டீஸ் கொடுத்து வரி வசூல் செய்தால் நலமாக இருக்கும் என்ற கருத்தையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய பகுதியிலே பல ஏரிகள் இருக்கின்றன. அதைப் பற்றிச் சர்க்காரிடத்திலும், கலெக்டரிடத்திலும் சொல்லியும், செய்யக்கூடிய நிலைமை இருந்தும், இன்று வரையில் ஒன்றும் செய்யாமல் இருக்கிறார்கள். இவைகளையும் எடுத்து........(மணியடிக்கப்பட்டது).





*** திரு. செ. சதாசிவம் :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, கனம் ணை அமைச்சர் கொண்டுவந்திருக்கக்கூடிய நீர்ப்பாசன இலாகா மான் த்தை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களைத் தெரிவித்துக் காள்ள விரும்புகிறேன்.

இந்த மான்யக் கோரிக்கையிலே கண்டுள்ள பல அபிவிருத்தித் திட்டங் ளைக் கண்டு நாம் மகிழாமல் இருக்க முடியாது. சுதந்திரம் அடைந்த றகு பல பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை ஏற்படுத்தி அதன் மூலமாகப் யன் அடையக் கூடிய வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம். இதுபோன்ற பெரிய ர்ப்பாசனத் திட்டங்கள் மூலமாக உள்ள திட்டங்களிலே ஒரு சில திட்டங் ள் மூலமாக அடையக் கூடிய பயன்களை அடையாமல் பாதிக்கப்பட்ட ிரதேசப் பிரதிநிதி என்ற முறையில் ஒரு சில திட்டங்களை நான் சமர்ப் ிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக லோயர் பவானித் திட்டம் மூலமாக என்னுடைய பகுதிக்கு அதை விஸ்தரிக்கக் கூடிய வாய்ப்பு இருந்தும், அதை விஸ்தரிக்க வேண்டுமென்று பல ஆண்டு காலமாகக் கூறிக்கொண்டிருந்தும் அது விஸ்தரிக்கப்படவில்லை என்று கூறிக்கொள்ளு கிறேன். அது போன்று அமராவதித் திட்டத்திலே கூட, அந்தத் திட்டம் உருவானபோது கூட அந்தத் திட்டம் எங்கள் பகுதிக்கு விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று கூறியிருந்தும் எங்கள் பகுதி புறக்கணிக்கப்பட்டிருக் கிறது. எங்கள் பகுதிக்கு இந்தத் திட்டத்தின் மூலமாக எந்தப் பயனும் கிடைக்கவில்லை. பரம்பிக்குளம்-ஆளியாறுத் திட்டமும் எங்கள் பகுதிக்கு விஸ்தரிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டும் அந்தத் திட்டமும் கொண்டு வரப்படவில்லை. எங்கள் பகுதி மிக வரண்ட பகுதி, தாழ்ந்த நிலையில் உள்ள பகுதி என்பதை அமைச்சர் அவர்கள் நன்கு உணருவார்கள். லோயர் பவானித் திட்டம் மூலமாக எங்கள் பகுதியில் ஓடும் கழிவு தண்ணீரைத் தேக்கி உபயோகப்படுத்த சிறு சிறுத் திட்டங்கள் உருவாக்க லாம். லோயர் பவானி வாய்க்கால்களின் கழிவு தண்ணீர் உபரித் தண்ணீர் நொய்யல் ஆற்றிலே கலந்து வரும்போது என் தொகுதியில் உள்ள உங்காம்பாளையம் என்னும் இடத்தில் நொய்யல் அருகில் அணை கட்டினால் அங்கு உள்ள நிலங்களை இரு போக நன்செய் நிலமாக ஆக்க லாம் (சுமார் 20,000 ஏக்கர் பாயும்) என்று திட்டம் இருந்தும், பரிசீலனை செய்து நல்ல திட்டம் என ஒப்புக் கொண்டிருந்தும், இது வரையில் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கின்றது. அரசாங்கத்தில் ஒரு சில சிக்கல்கள் இருந்தாலும் அவைகளை நிவர்த்தித்து இந்த ஆண்டில் எடுத்துக் கொள்ள சர்க்கார் முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதி வரண்ட பகுதியாக இருப்பதால், அமராவதி ஆற்றிலும் நொய்யல் ஆற்றிலும் பம்ப்செட் மூலமாக தண்ணீர் எடுத்து விவசாயம் செய்ய சர்க்காரிடம் இதற்காகப் பண உதவி கோரவில்லை—பர்மிட் கொடுத்தால் சொந்தச் செலவிலேயே சிறிய விவசாயிகள் பயன் அடைய முடியாது. குறிப்பாக நொய்யல், அமராவதி ஆகிய ஆற்றங்கரைகளில் உள்ள வெள்ளியம்பாளையம், மரவாபாளையம், கீழத்தலையூர் ஆகிய இடங்களில் உள்ள விவசாயிகள் முறையே 400, 500, 200 ஏக்கர்கள் என்று கூட்டுறவு முறையில் விவசாயம் செய்யத் தயாராக இருக்கிறோம். 1961 ஆண்டு முதல் அனுமதி கேட்டும் இதுவரை கொடுக்கப்படவில்லை. இதை உடனடியாகச் செய்து கொடுத்தால் உணவு உற்பத்தியில் எதிர் பார்க்கின்றதற்கு மேல் இரு மடங்கு உற்பத்தி செய்ய முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இப்பொழுது சொல்ல விரும்புவது என்னவென்றால், காவேரி டெல்டா பிரதேசத்தில் உள்ள தண்ணீர் சிக்கனப்படுத்தி, அங்கு குழாய்க் கிணறுகளை அமைத்து இப்பொழுது இருக்கக்கூடிய பாசன வசதியைப் போன்று மூன்றில் ஒரு பங்கு அதிகமாக பாசன வசதியை விஸ்தரிக்கக் கூடிய ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. அதனால் இதற்குமுன் கூறியது போல் காவேரியில் தண்ணீர் இல்லை. அதனுடைய உப நதிகளின் தண்ணீரை வேறு திட்டங்களுக்குக் கொடுக்க முடியாது என்ற சூழ்நிலையை மாற்றி, காவேரியினுடைய உபநதிகளான அமராவதி, நொய்யல்,

குடகனாறு ஆகிய நதிகளில் உள்ள உபரித் தண்ணீரை, சிறிய வாய்க்கால் மூலமாகவும் பம்பு செட்டுகள் மூலமும் எடுத்துப் பாய்ச்ச எங்களுக்கு சிறிய திட்டங்கள் செய்து கொடுக்கவேண்டும். அமராவதி, நொய்யல் ஆறுகளில் சிறுசிறு விவசாயிகள் கேட்கக்கூடிய பம்பு செட்டுகள் வைக்க பர்மிட் கொடுக்க ஏற்பாடு செய்தால் நல்ல முறையில் விவசாய உற்பத்தியை பெருக்குவதற்கு வசதியாக இருக்கும். அதனால் இந்தத் திட்டங்களைப் பொறுத்தவரையில் உடனடியாகப் பெர்மிட் வழங்கவேண்டும். 1961 வருஷம் அக்டோபர் மாதம் 2 தேதிக்கு முன்பாக இருந்த பம்பு செட்டுக்கு கலெக்டரே பெர்மிட் கொடுத்துவிடலாம். அதற்குப் பிற்பாடு உள்ள பம்பு செட்டுகளுக்கு சர்க்காரிடம் வந்து அனுமதி பெற்றுச் செல்லவேண்டும் என்ற ஒரு நிலைமை இருப்பதினால், இப்பொழுது இது சம்பந்தமாக சர்க்காருக்கு வரக்கூடிய மனுக்களை பைசல் செய்வதில் தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, ஆங்காங்கு உள்ள நீர்ப்பாசன அதிகாரிகளுடைய ஒத்துழைப்புடன் கலெக்டரே இதற்கு பெர்மிட் கொடுக்கலாம் என்று உத்தரவு பிறப்பித்தால் எங்களுடைய பகுதி மக்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும்.

அமராவதியில் கெங்கல்பட்டி என்ற அணை இருக்கிறது. அதன் வலது கரை அமராவதியிலேயே ஒரு துரதிருஷ்டமான பகுதி, 9 மைல் நீளமுள்ள பகுதிக்கு எந்த விதமான நீர்ப்பாசன வசதியும் கிடையாது. ஆகவே, அந்த அந்த அணையின் மறு பகுதியிலே ஒரு வாய்க்கால் ஏற்படுத்தினால், அதன் மூலம் நல்ல பலன் ஏற்படும். எஸ்.எம்.ஐ.பி. இலாகா மூலம் அந்த திட்டம் பரிசீலனை செய்யப்பட்டது. அந்தத் திட்டத்தை எடுத்து நடத்த வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது நல்காசி ஆற்றில் பாப்பலாறு திட்டம். இத்திட்டத்தின் மூலம் எங்கள் பகுதி பாதிக்கப்படாமல் போதிய பாசன வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். மதுரை ஜில்லா கடைகோடியில் உள்ள திருச்சிஜில்லா, கரூர் தாலுகாவுக்கும் இதை விஸ்தரிக்க வேண்டும். அதையொட்டி எங்கள் பகுதிக்கு சரி பாதியாவது தண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று என்ஜினியரிங் இலாகாவை கேட்டுக் கொள்கிறேன்.

*** திரு. செ. சீனிவாசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, கனம் ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கும் நீர்ப்பாசன மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட லட்சியமாக கிட்டத்தட்ட ரூ. 265 லட்சம் வைகை சீரமைப்புத் திட்டம் இன்னும் சில திட்டங்கள், அதாவது கடனாறு திட்டம் முதலிய திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தும், இந்த ஆண்டு வரை சுமார் ரூ. ·008 லட்சம் தான் செலவுக் கணக்கில் வந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்பொழுது, இந்தத் திட்டங்களுக்காக அவ்வளவாக செலவழிக்கப்படவில்லை என்றுதான் தோன்றுகிறது. அடுத்தபடியாக, கோரிக்கைகளுக்கு வரும்பொழுது, இவைகளுக்கு இன்னும் திட்டக் கமிஷன் அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்று காணப்படுகிறது. திட்டக் கமிஷனுடைய திட்டத்தில் இவைகள் சேர்க்கப்படாத பொழுது இங்கே அவைகள் எப்படி இடம் பெற்றன என்பது சந்தேகமாக இருக்கிறது.

அடுத்தபடியாக, வைகை சீரமைப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையிலே அது முக்கியமான நீர்ப்பாசன வசதியை பெருக்கக்கூடிய ஒரு பெரிய திட்டம். சுமார் ஒரு லட்சத்து எட்டாயிரம் ஏக்கருக்கு நிரந்தரமான பாசன வசதி தரக்கூடிய ஒரு திட்டம். அது ஏன் இன்னும் அமுல் நடத்தப்படவில்லை என்று எண்ணிப் பார்க்கும்பொழுது, அந்தப் பகுதி மக்களுக்கு ஒரு பெரிய தலைவலியாகத்தான் இருக்கிறது. சாதாரணமாக திருமங்கலம் பகுதி கால்வாயில் சுமார் 15,000 ஏக்கருக்கு வைகை அணையிலிருந்து தண்ணீர் கொடுக்கப்படுகிறது என்று முன்னால் அறிவித்த பொழுது கிழக்கு ராமனாதபுரம் பகுதியில் வாழ்கின்ற விவசாய மக்களுக்கு ஒரு பெருத்த அதிர்ச்சி ஏற்பட்டது. இப்பொழுது மதுரை ஜில்லாவிலே வைகையின் உபநதியான மஞ்சளாறுத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது என்று கேள்விப்பட்ட உடனே கீழ்ப்பகுதி ராமனாதபுரம் விவசாய மக்களுக்கு அது ஒரு பெரிய துயரத்தை ஏற்படுத்தியிருக்கிறது. சம்பந்தப்





பட்ட என்ஜினியர்கள் இதனால் வைகையினுடைய வரத்து குறைந்துவிடும், கணிசமான அளவுக்கு குறைந்துவிடும் என்று அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள். நமது அமைச்சர் அவர்கள் அந்த விதமான பாதிப்பு எதுவும் ஏற்படாது என்று இங்கே உறுதி சொல்லவேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிழக்கு ராமனாதபுரம் பகுதியில் இந்த வைகையைப் பொறுத்த அளவுக்கு ஒரு பெரிய தலைவலி. கிருதமால்நதி திட்டம். அநேகமாக பல ஆண்டுகளாக பரிசீலிக்கப்பட்டு வந்தும், எப்பொழுது வைகைத் தண்ணீர் விடுவதாக ஏற்பாடு இருந்தாலும், முதுகளத்தூர், அருப்புக்கோட்டை தாலுகாவில் அந்த வைகைத் தண்ணீரை எதிர் பார்த்து, அதற்கான நடவடிக்கை எடுத்தும், வைகை கீழ் கடைசியில் இருக்கும் பாசனத்திற்கு அது சரியான பலன் அளிக்க முடியாத வகையிலே சில சமயங்களிலே நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அந்தமாதிரி இனிமேலும் நிகழாதபடி, கிருதமால் நதியைப் பொறுத்த வரையில் ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுகிறேன். தவிர முதுகளத்தூர் தாலுகாவில் ஓடும் காட்டாற்றில் ஒரு அணைக்கட்டு கட்டி அதன் மூலம் தண்ணீரை தேக்கி வைத்து, முதுகளத்தூருக்கு பாசன வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, " மாடர்னைஸிங் வைகை சானல்ஸ் ஸிஸ்டம் " நல்ல முறையில் சீக்கிரமாக அமுல் நடத்த, அதற்கான திட்டத்தை வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் நமது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை ஒரு விஷயத்திற்காக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டில் சமீபத்தில் ஏற்பட்ட புயல், பெரு மழையின் காரணமாக கிழக்கு ராமனாதபுர மாவட்டம் ஸ்தம்பித்து இருந்த நிலைமையில் சிறிது காலம்கூட தாழ்த்தாமல் உடனே அங்கு வந்து, அந்தப் பகுதி மக்களுக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்ததற்காக அமைச்சர் அவர்களை கிழக்கு ராமனாதபுரம் பகுதி மக்கள் சார்பாக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அடுத்தபடியாக . : . . (மணி அடிக்கப்பட்டது).

*** திரு. சி. பொன்னுசாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, சிறு துறைமுகங்கள் சம்பந்தமான மான்யக் கோரிக்கையை ஆதரித்து நான் சில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன். துறைமுகங்கள் மிக அவசியம் என்பது நமது தேசத்தில் 3,500 மைல் நீளமுள்ள கடற்கரை இருக்கிறது என்பதிலிருந்து சொல்லத் தேவையில்லை. சிறு துறைமுகங்கள் கட்டும்பொழுது நிபுணர்கள் ஒரு சில கருத்துக்களை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று யோசனை கூற விரும்புகிறேன். பெரிய துறைமுகங்களில் கப்பல் மூலம் சரக்குகள் வந்து இறங்கி ரோடுகள் மூலமாகவும், ரயில் மூலமாகவும் பல இடங்களுக்குச் செல்கின்றன. சிறிய துறைமுகங்களில் அங்கே கப்பல்களை நிறுத்த முடியாது. ஆகவே, சிறு துறைமுகங்கள் கட்டும் பொழுதே, " கண்ட்ரி கிராப்ட்ஸ் " தோணிகள் நிறுத்துவதற்கு வசதியாக இருக்கும்படியாக கட்ட வேண்டும் என்பது என்னுடைய சொந்தக் கருத்து. தூத்துக்குடி துறைமுகத்தில் ஏராளமான தோணிகள், 150, 200 டன் எடையுள்ள சரக்குகளை ஏற்றிச் செல்லக்கூடிய தோணிகள் இருக்கின்றன. பெர்டிலைஸர், உணவுப் பொருள்கள் போன்றவைகள் தூத்துக்குடி, மதராஸ் ஆகிய இடங்களில் கப்பல்களில் இறக்கப்பட்டு, இது போன்ற தோணிகள் மூலம் சிறிய துறைமுகங்களில் பிடிக்கப்பட்டு, குறைந்த அளவு செலவில் மக்களுக்கு பல இடங்களுக்கு கொண்டு போகப்படுவதற்கு வசதியாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

அதோடுகூட சிறிய துறைமுகங்களில், இப்பொழுது வேப்பலோடை என்ற இடத்தில் துறைமுகம் கட்டப் போவதாக அறிக்கையில் சொல்லப் 10–0 a.m
பட்டு இருக்கிறது. வேப்பலோடையிலிருந்து முக்கியமாக ஏற்றுமதி செய்யப்படுவது உப்பு. அந்தப் பகுதியில் உப்புதான் அதிகமாக

[திரு. சி. பொன்னுசாமி] [19th March 1965

உற்பத்தி செய்யப்படுகிறது. ஏறக்குறைய ஒரு லட்சத்திற்கும் அதிகமான டன்கள் உற்பத்தி செய்யப்பட்டு, கல்கத்தாவிற்குப் போகிறது. அந்த துறைமுகம் கட்டுவதால் உப்பு ஏற்றுமதிக்கு வசதி ஏற்படும். அதோடு பெரிய தூண்களைப் போட்டு அந்த இடத்தில் ஒரு ஜட்டி, அதாவது பாலம் போன்று கட்ட வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் மீன் வளம் பொருந்திய இடங்களிலெல்லாம் ஒரு கோடிக்கு அதிகமாகச் செலவழித்து வேலைகள் செய்வது என்று தொகைகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அங்கெல்லாம் முழுக்க முழுக்க மீன்கள்தான் கிடைக்கும். ஆகவே, மீன்களை பக்குவப்படுத்தி, நல்ல முறையிலே சேர்த்து வைத்து வெளியிடங்களுக்கு அனுப்ப சௌகரியமாக வசதி தரும் துறைமுகமாக அமைய வேண்டும். குறிப்பாக, புன்னைக்காயல் துறைமுகத்திற்கு ஒரு கோடிக்கு அதிகமாக செலவழிக்கப் போகிறார்கள். அதை நினைத்து நான் சந்தோஷப்படுகின்றேன். பாலம் கட்டப்படுகிறது. ரோடு சாங்க்ஷன் ஆகியிருக்கிறது. ஆத்தூர் ரோட்டோடு நல்ல பாலமாக வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்பொழுதுதான் பஸ்வான்கள் மூலம் பல இடங்களுக்கும் மீன்களைக் கொண்டு சென்று நல்ல மார்க்கெட்டு கண்டுபிடிக்கவும், நல்ல விலை கிடைக்கவும் வசதி ஏற்படும். ஆத்தூர் ரோடு ஒரு நாஷனல் ஹைவேஸ், கோஸ்டல் ரோடு, அந்த ரோட்டில், சிறிய துறைமுகங்கள், பகுதி பகுதியாக இருக்கின்றன. ஒரு பர்லாங், இரண்டு பர்லாங், ஒரு மைல், இரண்டுமைல் தூரத்தில் உள்ளுக்கு இருக்கின்றன. அவைகளை யெல்லாம் இணைக்கும் வகையில் நல்ல முறையில் ரோடுகள் அமைக்கப்படவேண்டும்.

அதோடு கூட தூத்துக்குடியில் இப்பொழுது துறைமுகம் இருக்கிறது. அந்த துறைமுகத்தை மாநில சர்க்கார் பராமரிக்க வேண்டும். மத்திய சர்க்கார் செய்யும் ஆழ் கடல் துறைமுகம் வந்தாலும்கூட, அதையும் கவனிக்கப் போகிறார்கள். அதற்காக 27 லட்சம் ரூபாய் செலவழிக்கப் போகிறார்கள். ஆனால், இந்த வகையில் நான்காவது திட்டத்தில் ஒதுக்கி வைத்திருக்கும் பணம் போதாது என்று நான் கருதுகிறேன். ஏனென்றால் இப்பொழுது இருக்கும் துறைமுகத்தில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அந்தத் துறைமுகத்தை எடுத்துக் கொண்டால், அங்கே பொருள்களை மாற்ற க்ரேன்கள் மிகவும் முக்கியம். ஏனைய நாடுகளை எடுத்துக் கொண்டால், க்ரேன்கள் மூலம் எவ்வளவு பணிகள் செய்யப்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம். தூத்துக்குடியில் இருந்த இரண்டு க்ரேன்களில், ஒன்று புது ஹார்பருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பதிலாக அவர்கள் க்ரேன் கொடுப்பார்கள் என்றாலும், மத்திய சர்க்காரிடம் போகும்போதெல்லாம், ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் இல்லை என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். திட்டம் போட்டு காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, அதே சந்தர்ப்பத்தில் மத்திய சர்க்கார், அன்னிய செலாவணி இல்லை என்று எழுதுகிறார்கள். தூத்துக்குடி துறைமுக டிரஸ்டில் 87 லட்சம் இருக்கிறது செலவு செய்ய ஃபாரின் எக்ஸ்சேஞ்ச் தடையாக இருக்கிறது. தூத்துக்குடி சம்பந்தப்பட்ட மட்டில், வருடம் ஒன்றுக்கு கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய்க்கு, தும்பு, ஈக்கிள், சென்னா இலை முதலியவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அந்த வகையில் பாரின் எக்ஸ்சேஞ்ச் கிடைக்கிறது. ஆகவே, அந்த துறைமுகத்திற்கு மத்திய சர்க்கார் ஒரு தனி இடம் கொடுத்து, அன்னிய செலாவணி வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மாநில சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்க வேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே, இப்பொழுது இருக்கும் தூத்துக்குடி துறைமுகத்தை எடுத்துக்கொண்டால் பல குறைபாடுகள் இருக்கின்றன. அங்கே ரெயில்வே லைன் போடவேண்டும். பழசைபுதுப்பிக்க வேண்டும். ஜட்டி கட்ட வேண்டும். கோடவுன் கட்டவேண்டும். டீப் ஸீ ஹார்பர் வரும் காரணத்தினால், அங்கே வெளி நாடுகளிலிருந்து அடிக்கடி பல பேர் வருவார்கள். அதிகாரிகளும் பல பேர் வந்து போய்க்கொண்டே இருப்பார்கள். ஆகவே, போர்ட் ட்ரஸ்ட் பணத்திலிருந்து, ஒரு சர்கூட்



19th March 1965] [திரு. சி. பொன்னுசாமி]

ஹௌஸ் அமைத்து, அதோடு பல கட்டடங்களைக் கட்டி, ஆபீசர்களுக்கும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். இருப்பிருக்கும் 87 லட்ச ரூபாயை நல்ல முறையிலே செலவு செய்து, தூத்துக்குடியில் பல குறைபாடுகளை நீக்க போர்ட் ட்ரஸ்ட் தயாராக இருக்கிறது என்றாலும், பாரின் எக்ஸ்சேஞ்ச் குறுக்கே நிற்கிறது. அதை மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லி, குறைபாடுகளை அகற்றி, க்ரேன்கள் வாங்க துணையாக ஆவன செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

**திரு. மு. சண்முகம் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும், நீர்ப்பாசன, பொதுப்பணி மானியக் கோரிக்கைமீது தந்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை கூறிக்கொள்ள விரும்புகிறேன். நீர்ப்பாசன வசதிகளுக்காக மாநிலத்திலே பெரும் அணைக்கட்டுகளை கட்டும் திட்டங்களை யெல்லாம், நிறைவேற்றிவிட்டு, புதிய பல சிறு திட்டங்கள் ஏற்படுத்தப்படுவது பாராட்டக் கூடியது. ஆனால், அதே நேரத்தில், நீர்ப்பாசன திட்டங்கள் மூலம் ஏற்படுத்தப்படும் வசதிகள் விவசாயிகளுக்கு நேரிடையாகப் பயன்படும் இடங்களில், திட்டங்கள் கிராம அளவில் பராமரிக்கப் படவில்லை என்பதை இந்த சந்தர்ப்பத்திலே எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆதி காலங்களிலே, கிராமங்களிலே பெரும்பாலும் மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். அந்தக் காலத்தில் குடிமராமத்து 'அளவில் ஏரிகளும், ஸ்ப்ரிங் டாங்குகளும், ஊற்றுக் குளங்களும், ஆறுகளிலிருந்து ஏரிகளுக்கு பாயும் வாய்க்கால்களும், மக்களுடைய ஒற்றுமையால் பராமரிக்கப்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுது கிராமங்களில் அந்த நிலைமை மாறி, மக்களிடையே உள்ள ஒற்றுமையின்மையின் காரணமாக குடி மராமத்து வேலைகள் செய்யப்படாமலே இருக்கின்றன. அப்படி குடி மராமத்துத் திட்டங்கள் கைவிடப்பட்டுவிட்டன என்பதையும் அரசாங்கம் அறியும் என்பதைக் கூற விரும்புகிறேன். நீர்ப்பாசனத் திட்டங்களில் பெரும் திட்டங்கள் நிறைவேறினாலும், கிராமங்களில் நேரிடையாக விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் பராமரிக்கப்படவில்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அநேக ஊர்களில் ஏரிகள் பழுது பார்க்கப்படாமல், நீண்ட காலமாக கவனிக்கப்படாமலேயே இருந்து வருகின்றன. அதே போல ஸ்ப்ரிங் டாங்குகள் கவனிக்கப்படாமல் இருக்கின்றன. அப்படிப்பட்டவைகள் தென்னாற்காடு மாவட்டப் பகுதியில் பெரும் பகுதியாக அமைந்திருக்கிறது. ஊற்றுக் குளங்கள் வரண்டு போய் இருக்கின்றன. தூர்ந்துபோய் இருக்கின்றன. மழை காலத்தில் செலவு இல்லாத வகையில் பாசன வசதிகளை கொடுத்து வந்த நிலை மாறி, அவைகள் இன்றைக்கு மராமத்து செய்யப்படாததால், அதன் உபயோகம் குறைந்துவிட்டிருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட நீர் நிலைகளை தூர் எடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்பொழுதுதான், விவசாய மக்களுக்கு நேரிடையாகப் பயன்படும். ஆகவே இதில் அரசாங்கம் தலையிட்டு, வழிவகை செய்ய வேண்டும். அதே போன்று ஆறுகளிலிருந்து, ஏரிகளுக்குத் தண்ணீர் வரும் வாய்க்கால்கள், கால்வாய்கள், சப்ளை சானல்ஸ் குடிமராமத்து செய்யப்பட்டு வந்தன. அவையும் இப்பொழுது நின்றுவிட்டதன் காரணமாக, தூர் எடுக்கப்படாததன் காரணமாக, ஏரிகளுக்கு ஆறுகளிலிருந்து தண்ணீர் பாய்வது நின்று விட்டிருக்கிறது. ஆகவே, அதையும் மராமத்து செய்து, தண்ணீர் தேக்கம் ஏற்படும் நிலையை உண்டு பண்ண வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட பணிகளைச் செய்ய யாதொரு முயற்சியும் இந்த திட்டங்களிலே செய்யப் போவதாகக் காணப்படவில்லை. அவைகளையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்திலே சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டம் ஏற்பட்ட பிறகு, திருக்கோயிலூருக்குக் கிழ்ப்புறம் உள்ள விழுப்புரம், கடலூரில் ஒரு பகுதி ஆகிய வட்டாரங்களிலுள்ள ஆயக்கட்டுகளுக்கு அந்த ஆற்றிலிருந்து ஏற்கனவே கிடைத்து வந்த நீர்ப்பாசன வசதி குறைந்துவிட்டதாகப் பலபுகார்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் என்று நான் நம்புகிறேன். அந்த அணைக்கட்டுத் திட்ட ஆரம்ப

காலத்திலேயே இப்படிப்பட்ட புகார்கள் அரசாங்கத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. ஆனால், அப்பொழுது அதற்கு அரசாங்கம் சரியான நடவடிக்கை எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. இரண்டாவது கட்ட திட்ட வேலையில் கூட, அப்படிப்பட்ட விழுப்புரம், கடலூர் பகுதிகளின் பாசன வசதிக்காக யாதொரு திட்டமும் அதிலே இணைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. திருக்கோயிலூர் வரையில்தான் பாசன வசதிக்குண்டான திட்டங்கள் அமைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. விழுப்புரத்திற்கும், கடலூருக்கும் ஆற்றிலிருந்து கிடைக்கக் கூடிய வசதி பாதிக்கப்பட்டதனால், அவைகளுக்கு வசதி ஏற்படுத்துவதற்கு ஆற்றின் இரு கரையோரங்களிலும் தனிக் கால்வாய்கள் தோண்டி, அவற்றின் மூலம் வசதி செய்து கொடுக்கலாம் என்று முன்னாள் முதலமைச்சர் திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள் காலத்தில் ஒரு பிரேரபணை கொண்டுவரப்பட்டிருந்தது. என்றாலும், இதுவரை அந்தப் பிரேரபணை கவனிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. சாத்தனூர் அணைக்கட்டுத் திட்ட இரண்டாவது கட்டத்திலே அதிக நீர் விட வசதி ஏற்படுத்தியிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் ஆற்றின் இரு கரை ஓரங்களிலும் தனிக் கால்வாய்களை அணைக் கட்டிலிருந்து ஏறபடுத்தி, விழுப்புரம் வட்டத்திற்கும் கடலூர் வட்டத்தின் ஒரு பகுதிக்கும் நேரடிப் பயன் அளிக்கக்கூடிய வகையிலே அந்தக் கால்வாய் வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டியது மிகவும் முக்கியம் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவர ஆசைப்படுகிறேன். தனிக் கால்வாய்கள் ஏற்படுத்துவதற்குத் தனிப்பட்ட அதிக செலவு ஏற்படக்கூடும் என்றாலும், அந்த ஆயக்கட்டுகளுக்கு பாசன வசதி கிடைக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

விழுப்புரம் வட்டத்தில் பம்பையாறு என்று ஒரு சிறிய ஓடை ஓடுகிறது. மழைக் காலத்தில் அதில் வரும் தண்ணீர் வீணாகப் போய்விடுகிறது. ஆகவே, மாம்பழப்பட்டு, மல்லிகைப்பட்டு சமீபத்தில் அந்த ஓடையின் குறுக்கே ஒரு அணைகட்டினால் பக்கத்திலுள்ள கிராமங்களின் ஆயக்கட்டுகளுக்கு ஓரளவு பாசன வசதி கிடைக்கும், அதைச் செய்து கொடுக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்து, விழுப்புரம் சமீபத்தில் உள்ள அநேக பெரும் சாலைகள் எல்லாம் அரசாங்கத்தால் கவனிக்கப்பட்டு வந்தாலும், கிராமப் பகுதிகளைப் பொறுத்த வரையில், இன்னும் அநேக ஊர்களுக்குப் போக்குவரத்துக்கான நல்ல பாதை வசதி இல்லாத நிலைமை இருந்து வருவதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை. அதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

விழுப்புரம் நகரம் இப்பொழுது மிகவும் முற்போக்கான நிலைமையை அடைந்து வருகிறது. ஐந்து பக்கங்களிலிருந்தும் இரயில் வண்டிகள் வந்து அங்கே கூடுகின்றன. மேலும், இப்பொழுது சென்னை—விழுப்புரம் மின்சார இரயில் வசதியும் ஏற்பட இருக்கிறது. இப்படிப் போக்குவரத்து வசதி அதிகம் இருப்பதால், விழுப்புரத்தில் சர்க்யூட் ஹவுஸ் ஒன்று அமைக்கப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்கான ஏற்பாட்டையும் அமைச்சர் அவர்கள் செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று அங்கே இருக்கிறது. போதுமான வசதி இல்லாததால், அதை விழுப்புரத்திற்குப் பக்கத்தில் உள்ள ஓரிடத்தில் புதுக் கட்டடம் கட்டிக் கொடுத்து மாற்றிவிட்டால் அந்த இடத்தில் அரசாங்கத்தால் பராமரிக்கப்பட்டு வரும் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அமைத்துக்கொள்ள வசதியாக இருக்கும். இவற்றையெல்லாம் அமைச்சர் அவர்கள் திட்டத்தில் சேர்த்து நிறைவேற்றிக் கொடுக்கும்படி கேட்டு என் உரையை முடிக்கின்றேன். வணக்கம்.

* **திரு. ரா. ராஜகோபாலசாமி:** கனம் சபாநாயகர் அவர்களே, மதிப்பிற்குரிய உணவு அமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் சமர்ப்பித்திருக்கிற





பொதுப் பணித்துறை, பெருவழித் துறை, நீர்ப்பாசனத் துறை ஆகிய மானியங்களை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற நான் விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் பரம்பிக் குளம்—ஆளியாறு திட்டத்தைப்பற்றி எடுத்து உரைத்திருக்கிறார்கள். அது ஒரு பெரிய பல-நோக்குத் திட்டம் என்றும், 48 கோடி ரூபாய் செலவில் உருவாகி வருகிறது. அதிலிருந்து சுமார் 240,000 ஏக்கரா பூமிக்குத் தண்ணீர் பாயும் 185,000 கிலோ வாட் மின்சாரம் கிடைக்கும் என்றெல்லாம் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தத் திட்டத்தில் அமைச்சர் அவர்கள் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு, அடிக்கடி அந்தத் திட்டப் பகுதிகளுக்கு விஜயம் செய்து, அங்குள்ள பொறியியல் வலலுநர்களுக்கு அவ்வப்போது யோசனைகள் சொல்லியும், உற்சாகப்படுத்தியும் தொழிலாளர்களை உற்சாகப்படுத்தியும், ஊக்குவித்தும், வேலை நல்லபடியாக நிறைவேறுவதற்கு வழி செய்து வருகிறார்கள். அதற்காக இந்தச் சமயத்தில் அங்குள்ள மக்களின் சார்பாக நான் நமது அமைச்சர் அவர்களையும் நமது பொறியியல் வல்லுநர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பரம்பிக்குளம் திட்டத்திலிருந்து உடுமலைப் பகுதிக்குத் தெற்கே பல பகுதிகள், இடங்கள் தண்ணீர் பாயாமல் விடப்பட்டிருக்கின்றன. குறிப்பாக கிளுவங்காடு பகுதி எங்கள் தாலுக்காவிலேயே மிகவும் வறண்ட பகுதியாகும். ஒரு புறம் அமராவதி வாய்க்காலும், இன்னொரு புறம் பரம்பிக்குளம் – ஆளியாறு வாய்க்காலும் ஓடிக்கொண்டிருந்தும், இந்தப் பகுதிக்குத் தண்ணீர் பாய்வதற்கு வகை செய்யப்படாமல் விடப்பட்டிருக்கிறது. அது உடுமலை வாய்க்காலிலிருந்து மானுப்பெட்டி கிளை வாய்க்கால் மூலம் பயன் அடையும் நிலைமை இருக்கிறது. அதைத் தயவுசெய்து அமைச்சர் அவர்கள் பெரிய மனது வைத்து, அந்தப் பகுதியிலுள்ள 500 ஏக்கருக்காவது பாசன வசதி செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தின் கடைசி பகுதியாகிய திருமூர்த்தி அணையிலிருந்துதான் சற்றேறக்குறைய இரண்டு லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் பாய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அணையில் தளி, ஜல்லிப்பட்டி கிராம மக்களுடைய பெரும்பாலான பூமிகள் போய் விட்டபடியால், மிஞ்சியிருக்கிற பூமிகளுக்கு, குறிப்பாக தளி, ஜல்லிப்பட்டி கிராமங்களிலுள்ள பூமிகளுக்குத் தண்ணீர் பாய்வதில்லை. அந்த அணைக் கட்டிலிருந்து இரண்டு லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் போகவிருக்கிறது. ஆனால், ஆரம்பத்திலே இருக்கும் தளி, ஜல்லிப்பட்டி கிராமம் மக்கள் போகும் அந்தத் தண்ணீரில் எந்தப் பயனையும் பெறாமல், சும்மா பார்த்துக்கொண்டிருக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆகையால், அங்கு திருமூர்த்தி அணையில் ஒரு மேல் நிலை மதகு வைத்தாவது, அங்குள்ள 1,500 ஏக்கரா பூமிகளுக்கு, குறைந்தது ஒரு போகத்திற்காவது, நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க வழி வகை செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

அடுத்த ஆண்டு, 1965-66 மத்தியில் திருமூர்த்தி அணையிலிருந்து 75 ஆயிரம் ஏக்கருக்குத் தண்ணீர் விடப்போவதாக அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். இந்தத் திட்டம் புஞ்சைப் பயிர்களுக்கு உதவக்கூடிய திட்டம். திருமூர்த்தி அணைப் பிரதேசத்தில் கரிசல் பூமிகளும், செவ்வல் பூமிகளும் இருக்கின்றன. அங்கே புஞ்சை பூமிகளில் தண்ணீரை எப்படிப் பயன்படுத்தி அதிக மகசூலை எடுக்கலாம் என்று ஆராய்ந்து விவசாயிகளுக்கு எடுத்து சொல்ல தனித்தனியே அப்படி மாதிரிப் பண்ணைகள் அமைத்து வேண்டிய வசதி செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, திருமூர்த்தி மலை ஒரு பெரிய பழங்கால தேவஸ்தானம். அது ஒரு டூரிஸ்ட் சென்டரும்கூட. அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நமது மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் அவர்கள்கூட அங்கே

விஜயம் செய்திருக்கிறார்கள். 1949-50-ம் ஆண்டிலே தற்போதைய முதலமைச்சர் அவர்கள் மராமத்து இலாகா அமைச்சராக இருந்தபோது, அங்கே நாங்கள் நடத்திய ஒரு விவசாய மகாநாட்டை அவர் திறந்து வைத்தார்கள். அப்போதே, திருமூர்த்தி அணை கட்டவேண்டும் என்று நாங்கள் கோரிக்கையை அவரிடம் விடுத்திருந்தோம். அந்தப் பகுதியின் முக்கியத்துவத்தை அனுசரித்து அங்கே ஒரு நல்ல ப்ராஜெக்ட் ஹவுஸ் கட்ட வழிவகை செய்யுமாறு நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அதோடு, அந்த அணைக்கட்டுப் பகுதியில் பார்க் (பூந்தோட்டம்) இது வரை அமைக்கப்படவில்லை. அணை முடியும் தறுவாயில் இருக்கிறது. எல்லா அணைக்கட்டுகளிலும் பார்க்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், அந்த இடத்தில் அமைக்கப்படவில்லை. இந்த முக்கியம் வாய்ந்த இடத்திலும் மற்ற இடங்களில் உள்ளதுபோல் ஒரு பார்க் அமைத்துக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, பெருவழித் துறை சம்பந்தப்பட்ட வகையில், குமரலிங்கம், கொழுமம் இவற்றுக்கு மத்தியில் அமராவதி ஆற்றுக்குக் குறுக்கே பாலம் ஒன்று கட்ட வேண்டும் என்கிற திட்டம் நெடு நாட்களாகவே இருந்து வருகிறது. மூன்றாவது திட்டத்திலும் அது சேர்க்கப்பட்டிருக்கிறது. அதற்காக மத்திய சர்க்கார் ரோடு நிதியிலிருந்தும் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை இந்த ஆண்டிலாவது சேர்த்து முடித்துத் தரவேண்டும் என்று நான் பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

அமராவதி புது வாய்க்காலுக்குக் கான்க்ரீட் போடும் ப்ரொபோஸல் இருக்கிறது. கான்க்ரீட் போடும் திட்டத்தை விரைவில் முடித்து, உடுமலை பிரதேசத்தில் அமராவதி வாய்க்கால் பகுதியில் விடப்பட்டுள்ள பல கட்டவுட் ஏரியாக்களுக்கு தண்ணீர் பாயும் நிலையில் இருந்தும் பாயாத இடங்கள் தண்ணீர் பாய வழிவகை செய்து கொடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு இத்துடன் என் உரையை முடித்துக் கொள்ளுகின்றேன்.

* **திரு. கா. நா. பழனிசாமி கவுண்டர் :** கனம் சபாநாயகர் அவர்களே, இன்றைய தினம் மராமத்து இலாகா அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த பிரேரணையை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கின்றேன். முக்கியமாக சர்க்கார் நிர்வாகத்தில் நீர்ப்பாசனத் திட்டங்கள் நல்ல முறையில் செயலாக்கப்பட்டு வருகிறது நம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். பதினாறு ஆண்டுகளுக்கு முன்பாக நாம் உணவுப் பொருள்களுக்குக் கஷ்டப்பட்டுக் கொண்டுதான் இருந்தோம். இது எல்லோருக்கும் தெரிந்திருக்கும். உணவுப் பற்றுக்குறையைப் போக்க நம் அரசாங்கம்—கடந்த இந்த பதினாறு ஆண்டுகளில் பல்வேறு நீர்ப் பாசனத் திட்டங்களை எடுத்து நிறைவேற்றி இருக்கிறது. அதன் காரணமாக நாம் உணவுப் பிரச்னையைச் சமாளிக்கக் கூடிய நிலையை அடைந்திருக்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். குறிப்பாக நம்முடைய திட்டங்களை எடுத்துக் கொண்டால்—பரம்பிக்குளத் திட்டம் ஒரு மகத்தான சாதனையாகும். 45 கோடி ரூபாய் செலவில் 2½ லட்சம் ஏக்கராவுக்குப் பாசன வசதி அளிப்பதோடு, 2 லட்சம் கிலோவாட் மின்சார உற்பத்தியைப் பெருக்கக்கூடிய அளவில் இந்தத் திட்ட சாதனை அமைந்திருப்பது பாராட்டுவதற்குரியதாகும். அதுவும் ஐந்து மைல் தூரத்திற்கு மலையையே குடைந்து தண்ணீரைக் கொண்டு வந்திருக்கிறார்கள். குந்தா திட்டம் போல மலையைக் குடைந்து ஐந்து மைல் கால்வாயை வெட்டிவருவது என்றால் மிக மிகப் பெரிய சாதனையாகும். கனம் அமைச்சர் அவர்கள் இங்குள்ள அங்கத்தினர்கள் அனைவரையும் அங்கே கொண்டுபோய் இந்த மகத்தான சாதனையைக் காட்டவேண்டும் என்று கூடத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நாட்டவர்கள் மட்டும் அல்ல, வெளிநாட்டில் இருந்து வருகிறவர்கள் கூட இந்தச் சாதனையைப் பாராட்டுகிறார்கள் என்றால் அதில் வியப்பு ஒன்றும் இல்லை. ஆகவே நான் இந்த இலாகா அமைச்சர் அவர்களையும் பிரதம இன்ஜினியர் திரு. அப்ரகாம் அவர்களையும், இன்னும் அவ்விலாகா





என்ஜினியர்கள் எல்லோரையும் பாராட்டுகிறேன். என்ஜினீயரிங் ஸ்கில் என்பார்களே—அதற்கு ஒரு மகத்தான வெற்றி என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல இன்னும் பல திட்டங்களை நாம் நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. குறிப்பாக கோயம்புத்தூர் ஜில்லாவைப் பொறுத்த வரையில் இரண்டு மின்சாரத் திட்டமும், குந்தாத் திட்டமும் உருவானதற்கு இந்தச் சட்டமன்றத்தின் மூலமாக அந்த இலாகா நிர்வாகிகளுக்கு என்னுடைய பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நாம் போட்டுள்ள திட்டங்களினால்—கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எந்த வகையிலும் பயனடையாத சில தாலுக்காக்கள் இருக்கின்றன. அவற்றைப் பொறுத்த வரையில்—பாண்ட் ஸ்கீம்—குளம், குட்டைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. தாராபுரம், பல்லடம் போன்ற தாலுக்காக்களில் எல்லாம் இந்த பாண்ட் ஸ்கீமை நல்ல முறையில் செயல்படுத்தினால் உணவுப்பொருள் உற்பத்திக்கு மிகவும் உபயோகமானதாக இருக்கும். கடந்த மூன்றாண்டுகளாகவே அதுபற்றி தயாரிக்கப்பட்ட திட்டம் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. திட்டத்திற்கு ஐயாயிரம், ஆறாயிரம்தான் செலவாகக்கூடும். அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதுபோல மேல்பவானித் திட்டம், அமராவதித் திட்டம் ஆகியவற்றின் மூலம் பல்லடம் தாலுக்கா பயன் அடையும்படி செய்ய வேண்டும். திருப்பூர் நொய்யாற்றில் இருந்து கோயம்புத்தூர் பழையக்கோட்டை வரை சிறு ஓடை போகின்ற நிலையை ஏற்படுத்த வழிவகைகள் இருக்கின்றன. அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக் கொண்டால் இந்த ராஜ்ய மக்கள் அனைவரும் பெருமை படக்கூடிய வகையில் எல்லாத் திட்டங்களும் எடுத்து நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அடுத்து ஹைவேஸ் இலாகா மூலமாக ரோடுகள், பாலங்கள் எல்லாம் புதுபிக்கப்பட்டு வருவது மிகவும் பாராட்ட வேண்டிய ஒன்றாகும். சிறிய ரோடுகள் எல்லாம் அகலப்படுத்தப்பட்டு வருகின்றன. அதுபோல பாலங்கள் எல்லாம் அகலப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்த மாதிரியான வேலைகள் மற்ற ராஜ்யங்களுக்கும்கூட வழிகாட்டியாக அமைந்திருக்கின்றது' எனப் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு சர்க்கார் இப்போது பல ரோடுகளை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். குறிப்பாக மெயின்ரோடுகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னும் சில ரோடுகள் நகர சபைகளின் பொறுப்பிலேயே விடப்பட்டு இருக்கின்றன. நகரசபைகள், பஞ்சாயத்துக்கள் ஆகியவற்றின் வருமானம் அந்த ரோடுகளைச் சரியான முறையில் பராமரிக்கப் போதவில்லை. ஆதலால் அந்த ரோடுகளையும்கூட ஹைவேஸ் இலாகாவிலேயே எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் பஸ் போகக்கூடிய ரோடுகள் மண் ரோடுகளாக இருக்கின்றன. ஒரு பஸ், இரண்டு பஸ் வைத்திருக்கக் கூடியவர்களுக்கு-புது ரூட் வழங்கும்போது இந்த மாதிரி மண் சாலைகளாக அவை வந்துவிடுகின்றது. அதனால் பஸ்களுக்கு அதிகத் தேய்வு ஏற்படுகிறது. ஆகவே பஸ் போகக்கூடிய எல்லா ரூட்டுகளையும் ஹைவேஸ் இலாகாவின் பராமரிப்பில் இருக்கும்படி சர்க்கார் அவைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இன்றைய தினம் கிட்டதட்ட 50, 60 முனிசிபாலிட்டிகளுக்கு சர்க்கார் பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டத்தை விஸ்தரித்திருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். எங்கள் திருப்பூர், திண்டுக்கல் போன்ற இடங்களுக்கும் குடி தண்ணீர் திட்டம் கட்டுவதற்காக ஏற்பாடு செய்திருப்பதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். இந்தத் திட்டத்தை இன்னும் எல்லா நகரங்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்தக் குடி தண்ணீர் திட்டத்திற்காக ஆகும் செலவில் பாதியை மத்திய சர்க்காரும் மாநில சர்க்காரும் கொடுப்பது என்றும், மற்றொரு பாதியை நகரசபை ஏற்றுக்கொள்வது என்றும்

ஏற்பாடாக இருக்கிறது. நகரசபைகளின் சுமையைக் குறைக்க ராஜ்ய அரசாங்கம் முன் வரவேண்டும் என்றும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மற்றும் கிராமங்களில் இருக்கிற பஞ்சாயத்துகளால் எவ்வித வசதியும் செய்து கொடுக்க வழி இல்லாது இருக்கிற இடங்களில் சர்க்காரே கிராம மக்களுக்கு தக்க வசதி அளிக்க அந்த பஞ்சாயத்துகளுக்கு பொருள் உதவி செய்ய வேண்டும் என்று 'கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் எடுத்துச் சொல்வதற்குப் பல விஷயங்கள் இருக்கின்றன என்றாலும், நேரம் இல்லாத காரணத்தினால் இத்துடன் முடித்துக்கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த சபாநாயகருக்கு என்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. ர. நல்லசிவம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள ஆய்வு உரையில், நிலத் தண்ணீர் ஆய்வுக் குழு ஒன்று இந்த மாநிலத்தில் அமைக்கப்பட்டிருப்பது குறித்து கூறியுள்ளதற்கு உண்மையிலேயே நான் இந்த அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். ஏனென்று சொன்னால் நிலத்தின் மேல் மட்டத்திலுள்ள தண்ணீரை உயர்ந்த பட்சம் எவ்வளவு பயன்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு நாம் பயன்படுத்தியாகிவிட்டது. நிலத்திற்குக்கீழ் இருக்கும் ஜலத்தை எப்படி மேலே கொண்டு வந்து பயன்படுத்துவது என்பது பற்றி நாம் பல ஆண்டுகளாகத் திட்டமே போடவில்லை. சமீபத்தில் தஞ்சாவூருக்கு வந்த அமெரிக்க—ஃபோர்டு ஸ்தாபன குழுவினர்—இத்தகையதொரு அரிய கருத்தை நமக்குப் புலப்படுத்தியதற்காக நன்றி 'தெரிவித்துக் கொள்கிறேன். இந்த முயற்சி தஞ்சை ஜில்லாவோடு நின்றுவிடக் கூடாது. ராஜ்யம் பூராவும் இருக்கவேண்டும். தஞ்சை ஜில்லாவிற்கு ஆய்வுக் குழு வந்ததற்குப் பிறகு பல கிணறுகள் தோண்ட நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதுபோல எல்லா ஜில்லாக்களில் செய்ய வேண்டும்.

குறிப்பாக ஆற்றுப் பாசனத்தில் ஒரு பகுதி நீராவியாகப் போகிறது. ஒரு பகுதி கழிவாகிறது. பூமிக்குள் எவ்வளவு போய்விடுகிறது என்பதைப் பற்றி இதுவரை திட்டவட்டமாக ஆராய்ச்சி நடத்தியதில்லை. பூமிக்குள் இருக்கும் தண்ணீரை வெளியே கொண்டுவர தக்க முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டாலே விவசாயிகளுக்கு இது மிக உதவியாக இருக்கும். எங்கள் பகுதியில்கூட ட்யூப் வெல்ஸ் தோண்ட வசதி இருக்கிறது. கீழே நல்ல தண்ணீர் இருப்பதாகவும் சொல்லப்படுகிறது. வெறும் திட்டம் போடுவதோடு நாம் நின்றுவிடக் கூடாது. பூமியின் மேல் மட்டத்தில் இருந்தே எந்தப் பகுதியில் தண்ணீர் ஓட்டம் வற்றாமல் இருக்கிறது என்பதை ஆராய்ச்சி செய்ய நம் நாட்டில் ஏதாவது முறை இருக்கிறதா என்று ஆராய்சி செய்து அதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும். நம் நாட்டில் இல்லை என்றால் இத்தகைய முயற்சி மேல் நாடுகளில் இருக்கிறதா, இருந்தால் அந்த முறைப்படி இங்கும் ஆராய்ச்சி நடத்த வகை செய்வதற்கு 2 கோடி ரூபாய் அளவிலாவது பணம் ஒதுக்கி ஆவன செய்ய வேண்டும் என்பதாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக புதுப் புது நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. அப்படி நிறைவேற்றப்படுகிறபோது பழைய பிரதேசங்களுக்குக் கொடுத்து வந்த தண்ணீர் அளவு பாதிக்கும்படியாக எந்தத் திட்டமும் வகுக்கக் கூடாது. குறிப்பாக கீழ் பவானித் திட்டத்தைப் பொறுத்தவரையில் 1959-ம் வருஷத்தில் தண்ணீர் கொடுக்கின்ற முறை மாற்றி அமைக்கப்பட்டது, அதுவும் சர்க்காருடைய அதிகாரிகள் எல்லோரும் கூடி அந்த முறையை வகுத்தார்கள். நஞ்சை என்று சொன்னால் ஓடுகின்ற தண்ணீரைக் கொண்டு தேக்கி சாகுபடி செய்வது. நஞ்சைக்குத் தண்ணீர்
10–30 a.m. கொடுக்கிறோம் என்றில்லாவிட்டாலும் புஞ்சைக்காவது கொடுப்பதில் தடங்கல் ஏற்படாதவாறு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். புஞ்சைக்குக் கொடுக்கின்ற தண்ணீரை வைத்துக்கொண்டு நஞ்சை செய்கிறோம் என்று சொல்கிறார்கள். விவசாயிகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுக்கவேண்டும். அதற்குப் பதில் ஆசை வார்த்தை கூறிக்கொண்டு வேடிக்கை செய்வதிலே பயன் கிடையாது.





கீழ்பவானி 2 லட்சம் ஏக்கர்களைக் கொண்டது; அதை இரண்டு பகுதிகளாகப் பிரித்து இரண்டு போகம் கொடுக்கப்படுகிறது. விவசாயிகளுக்கு மூன்றாவது போகம் ஏப்ரலிலிருந்து கொடுக்கப்படும் என்று ஆசை வார்த்தை காட்டப்படுகிறது. அதற்குள்ளே ஒரு பெரிய சதி அடங்கியிருக்கிறது என்று சந்தேகப்பட்டுச் சொல்கிறார்கள். கீழ் பவானி சம்பந்தமாக 21–9–1964 அன்று சர்க்கார் ஒரு உத்திரவு போட்டிருக்கிறார்கள். அந்த உத்திரவிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால், கீழ் பவானியிலிருந்து இரண்டாவது போகத்திற்காகக் கொடுக்கப்படும் தண்ணீர் பாதியாகக் குறைக்கப்படும், ஏப்ரலிலிருந்து மூன்றாவது போகத்திற்குத் தண்ணீர் கொடுப்போம் என்று போட்டிருக்கிறார்கள். அந்த உத்திரவை விவசாயிகள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒரு நோக்கத்தோடுதான் போட்டிருக்கிறார்கள். இதனால் தான் தண்ணீர் கொடுக்கப்படுகிறதோ என்று அஞ்சுகிறோம். நான் சர்க்காரைக் கேட்டுக்கொள்வதெல்லாம் தயவுசெய்து அந்த உத்திரவை ரத்து செய்து விடுங்கள் என்பதுதான். ஏனென்றால் நாங்கள் வேறு எந்த ராஜ்யத்திலேயும் இல்லாத அளவுக்கு மிகக் குறைந்த தண்ணீரை வைத்துக்கொண்டு சிக்கனமாக, நெல், வாழை, கரும்பு போன்ற பயிர்களை பயிர் செய்கிறோம். ஆகவே அந்த உத்திரவை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த உத்திரவை நீங்கள் ரத்து செய்யவில்லையானால், கீழ் பவானியைச் சேர்ந்த 8, 9 அங்கத்தினர்கள் ராஜிநாமாச் செய்ய வேண்டும் என்று விவசாயிகள் சொல்லி வருகிறார்கள். முதலிலேயே தண்ணீர் கொடுத்து இருக்கிறோம். அவர்களுக்குக் கொடுக்கின்ற தண்ணீரைக் குறைப்பது சரியல்ல. "கண்ணைக் கொடுத்துவிட்டுக் கண்ணைப் பிடுங்கினால்" எப்படி இருக்குமோ அதேபோல்தான் இதுவும் இருக்கும். ஆகவே, இரண்டு போகங்களுக்கே தண்ணீர் சரிவரக் கிடைப்பது கிடையாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இந்த உத்திரவை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த உத்திரவிலே குளறுபடி நடந்திருக்கிறது. முதலில் 21–9–1964-ல் இந்த உத்திரவைப் போட்டார்கள். மறுபடியும் 25–12–1964 அன்று அதைத் திருத்தி மற்றொரு உத்திரவு போட்டார்கள். மறுபடியும், 26–12–1964-ம் தேதியன்று மற்றொரு உத்திரவும் திருத்திப் போட்டார்கள். இதைப்போல் ஒரு துறையிலேயே சர்க்கார் குறிப்பிட்ட சில மாதங்களுக்குள் ஒன்றன்பின் ஒன்றாகத் திருத்திப் போட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த மூன்று உத்திரவுகளையும் ரத்து செய்து விடுங்கள். விவசாயிகளுக்கு வழக்கம்போலத் தண்ணீர் கொடுங்கள். விவசாயிகள் எந்தக் கட்சியையும் சேராதவர்கள்; அவர்கள் சோஷலிஸ்டுகளும் அல்ல, காங்கிரஸும் அல்ல. ஆகவே, அவர்களுடைய நலனைக் கருதி இந்த மூன்று உத்திரவுகளையும் உடனடியாக ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ரத்து செய்யவில்லையென்றால் நாங்கள் எல்லாம் ராஜிநாமாச் செய்யவேண்டுமென்று எங்களை வற்புறுத்துகிறார்கள். ஆகையால் உத்திரவை ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சேலம் ஜில்லாவிலே மேட்டூர் அணையைக் கட்டுவதற்கா சர்க்கார் 30 ஆண்டுகளுக்கு முன்னால் நிலம் ஆர்ஜிதம் செய்தார்கள் அப்பொழுது அங்கு வாழ்ந்துவந்த மக்கள் வெளியேற்றப்பட்டார்கள் அவர்கள் ஏறத்தாழ 1,000 குடும்பத்தினர் இருப்பார்கள். அவர்கள் எல்லாம் இப்பொழுது புதுச்சாம்பள்ளி என்ற இடத்தில் குடியிருக்கிறார்கள் இப்பொழுது அவர்கள் இருக்கும் இடத்திற்கு இன்னும் பட்டாப் போட்டு கொடுக்கவில்லை. அங்கு, ரூ. 5,000, ரூ. 10,000 மதிப்பில் கடைக போட்டிருக்கிறார்கள். இப்பொழுது பக்கத்திலே அலுமினியத் தொழி சாலை ஏற்படுத்துவதற்காக அந்த நிலத்தைச் சர்க்கார் ஆர்ஜிதம் செய்திரு கிறார்கள். ஒன்று அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும், இல்லை யென்றால் அந்த இடத்தையாவது பட்டாப்போட்டுக் கொடுக்கவேண்டு அவர்கள் புதுச்சாம்பள்ளியில் கட்டி இருக்கக்கூடிய வீடுகளைக் கண்டிப்பா அரசாங்கம் பட்டாச்செய்து கொடுக்கவேண்டும். அந்தந்தக் கடைகளையு சம்பந்தப்பட்டவர்களுக்கே கொடுக்கவேண்டுமென்று கூறிக்கொண்டு, அந் கீழ்பவானி சம்பந்தமான மூன்று உத்திரவுகளையும் ரத்து செய்யவேண் மென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறே

[19th March 1965

* **திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர் :** சட்ட மன்றத் தலைவர் அவர்களே,

" நீரின்றி அமையா யாக்கைக்கெல்லாம்
உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உடல் எனப்படுவது உணவின் பிண்டம்
உணவெனப்படுவது நிலத்தொடு நீரே
நிலத்தொடு நீரைப் புணர்த்தியோர் ஈண்டு
உடலும் உயிரும் உணர்ந்திசினோரே
வித்தி வான் நோக்கும் புன்புலம்
கண்ணகன் ஞால வைப்பிற்று ஆகினும்
நன்னி ஆளும் இறைவன் தாட்கு உதவாதே."

என்று 2,500 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பழம் தமிழ்ப் புலவர் பாடி யுள்ளார். அந்தப் பழம் பெரும் புலவரே இந்த நீர்ப்பாசனத் திட்டத்தை வரவேற்கின்றபொழுது நான் வரவேற்பதிலே ஆச்சரியம் ஒன்றுமில்லை. காரணம் இந்த நீர்ப்பாசனத் திட்டத்தினால் மிகப் பயன்பெற்றிருக்கின்ற ஒரு பகுதியிலே இருந்து வருகின்றவன் என்ற முறையிலே இந்த மாமன் றத்தின் முன்பு வைக்கப்பட்டுள்ள நீர்ப்பாசனம் என்ற தலைப்பின்கீழே இருக்கின்ற மானியக் கோரிக்கையை, கீழ் பவானி ஆயக்கட்டுப் பகுதியிலே வாழுகின்ற பழங்குடி விவசாய மக்கள் சார்பாக நான் வரவேற்பதுடன், இந்த அரசாங்கத்திற்கும், அமைச்சர் அவர்களுக்கும் வாழ்த்துக் கூறிக் கொள்வதுடன், இந்த இலாகாவில் பணியாற்றுகின்ற இயக்குநர்கள், பொறி யியல் இயக்குநர்கள், மற்ற ஊழியர்களுக்கும் என்னுடைய மனம்கனிந்த நன்றியையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். " மண் திணிந்த நிலமும், தீ முரணிய நீரும் " என்று கூறுகின்றவாறு ஐந்து பெரும் பூதங்களில் ஒன்றாகிய நிலமும், மற்றொன்றாகிய நீரும் முறையாக இணைகின்றபொழுது, அதிலிருந்து வருகின்ற பிரதிபலிப்பானது கம்பர் சொல்வது போல்—

" தண்டலை மயில்கள் ஆட
தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க
குவளை கண்விழித்து நோக்க
தெண்திரை எழினிகாட்ட
தேம்பிழி மகரயாழின் வண்டுகள் இனிது பாட
மருதம் வீற்றிருக்கும் மாதோ "

என்ற ஒரு நிலையிலே அது கண்கவர் காட்சியாக கைபுனைந்தியற்ருக்கவின் பெறுவனப்பாக நிலவுகின்ற நிலையை நாம் காண்கிறோம். வள்ளுவர் சொன்னார்—

" தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் உள்ளது நாடு "

என்று. தள்ளா விளையுளை எந்த நாடு கொண்டிருக்கிறதோ அதுதான் நாடு என்று சொன்னார். இந்த வகையில் நம்முடைய தமிழக அரசாங்க மானது முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே நிறைவேற்றிய சிறப்பான அம்சங்களிலே இந்த கீழ்பவானி ஆயக்கட்டுப் பகுதியும் ஒன்று என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கீழ்பவானி ஆயக்கட்டுப் பகுதியைப் பார்க்கின்றபொழுது சென்ற நான்கு ஆண்டுகளாக நடைமுறையிலே இருக்கின்ற மாற்று முறைப் பாசனம் மிக வும் சிறப்பாக அமைந்திருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்பு கிறேன். விவசாயத் தொழிலுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், விவசாயத்திற்குமே சால்புடையதாக அது அமைந்திருக்கிறது. அந்த நிலை யிலே இருப்பதால், இனிமேல் என்றுமே மாற்று முறை வழியிலேயே பாசன முறை இருப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

NR11,31 (76



N65-28

19th March 1965] [திரு. ஏ. எஸ். தக்ஷிணமூர்த்தி கவுண்டர்]

சென்ற நான்கு ஆண்டுகளாக, இந்தக் கீழ்பவானி ஆயக்கட்டுப் பகு திக்கு எந்த அளவுக்குத் தண்ணீர் கொடுக்கப்பட்டு வந்ததோ அந்த அளவுத் தண்ணீர் கொடுக்கவேண்டும்; கொஞ்சமேனும் குறையாமல் இனிமேல் என்றும் கிடைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு பயிர்க் கட்டுப்பாடற்ற முறையிலே சென்ற நான்கு ஆண்டு களாக கீழ்பவானி ஆயக்கட்டிலே நல்ல வளம் ஏற்படுத்தியிருக்கிறோம். அந்தப் பயிர்க் கட்டுப்பாடற்ற முறையிலேயே இன்னும் விவசாயத்தில் வளம் காண்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று தமிழக அரசாங் கத்தை நான் மிகவும் தாழ்ந்த வணக்கத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

வருகின்ற ஆண்டிலே ஏப்ரல் மாதம் 15-ம் தேதியில் இருந்து 56,000 ஏக்கருக்கு பாசன வசதி செய்து கொடுக்கின்ற வகையிலே இருக்கிற ஒரு கருத்தை அந்தக் குடிமக்கள் சார்பாக மிகவும் வரவேற்கிறேன். பயிர்க் கட்டுப்பாடு அற்ற முறையில் வரப்போகிறது என்று தெரிந்து மிகவும் வாழ்த்துச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கீழ்பவானி ஆயக்கட்டுப் பகுதியில் சிறு சிறு வாய்க்கால்களைப் பொறுத்து தொந்தரவு இருந்து கொண்டிருக்கிறது. அதனை அந்தந்த ரெவின்யூ டிவிஷனல் ஆபீசர்கள் மேற்பார்வையிட்டு உடனுக்குடன் சீர்படுத்தும் வகையைச் செய்யவேண்டும். அதற்கு ரெவின்யூ டிவிஷனல் ஆபீசருக்கு அதிகாரம் வழங்கி அவற்றைச் சீர்படுத்தும் முயற்சியினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

56,000 ஏக்கருக்குக் கொடுக்கப்படுகிற தண்ணீரை விட மேலும் பத்து அல்லது இருபதாயிரம் ஏக்கருக்குக் கூடக் கொடுக்கக் கூடிய அளவுக்குத் தண்ணீர் இருப்பதாக அறிகிறேன். இதை கவனிக்க வேண்டும். அவனாசி பகுதியில் ஒரு லட்சம் ஏக்கருக்குத் தண்ணீர் கொடுப்பதை வரவேற்கிறேன். இருந்தாலும் கூட எங்களுக்குக் குறைவு ஏற்படாமல், கீழ்பவானி ஆயக் கட்டுக்கு எந்த விதமான குறைவும் இல்லாமல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். " தாய் மிதித்துக் குஞ்சு முடமாகாது " என்று சொல்வதைப் போல அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவனாசி பகுதிக்குத் தண்ணீர் கொடுப்பதைத் தடையாக எண்ணவில்லை; அதை வரவேற்கிறேன். ஆனால் ஒரு பக்கம் [illegible] இன் னொரு பக்கம் கொடுக்கும் நிலைமையை அனுசரிக்க [illegible] தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். கீழ்பவானி [illegible] தண் ணீர் குறைந்தால் விவசாயிகளுக்குப் பெரும் ஆபத்து ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

" சுழன்றும்ஏர்ப் பின்னதுலகம் அதனால்
உழந்தும் உழவே தலை."

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார்.

64899

* **திரு. மீ. அழகர்சாமி :** கனம் சபாநாயகர் அவர்களே, மந்திரியவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கை[illegible] வரவேற்கிறேன். கடந்த மூன்று திட்டங்களிலே சாலை வசதிகளுக்காக [illegible] ஒதுக்கப்பட்டிருக் கக்கூடிய நிதியைப் பார்க்கும்போது, ஏனையவற்றுக்கு [illegible] ருப்பது போல் அல்லாமல் மிகக் குறைவான நிதியே இந்த மூன்று திட்டங்களிலும் ஒதுக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இதன் காரணமாக பெரும்பாலான மக்கள் ஏழ்மை நிலையிலே வசிக்கக்கூடிய கிராமப் புறங்களில் இருக்கக்கூடிய சாலைகளின் அபிவிருத்திக்குப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும். இந்த மூன்று திட்டங்களிலும் இதற்கென்று ஒதுக்கப்பட்ட நிதியானது தொழிற் சாலைகள் உள்ள பகுதிகள், சென்னை நகரைச் சுற்றியிருக்கிற ஆவடி, எண்ணூர் போன்ற பகுதிகள், தூத்துக்குடியைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதிகள் என்ற நிலையிலேதான் பெரும்பாலான நிதி செலவிடப்பட்டி ருக்கின்றது என்பதை வரவேற்கிறேன்; அது செய்யப்பட வேண்டியதுதான். இருந்தாலும்கூட பெரும்பாலான மக்கள் வாழக்கூடிய கிராமப் பகுதி

களிலே இந்தச் சாலே வசதியைப் பற்றி நாம் பிரத்தியேகமாகக் கவனிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஒருசில பகுதிகளில் இருக்கக் கூடிய மக்களுடைய பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பின் காரணமாக நாட்டின் பொதுவான வளர்ச்சி கூடுதலாகிவிட முடியாது. எனவே, கிராமப்புறங்களிலே வசிக்கக்கூடிய மக்களின் பொருளாதார வளர்ச்சி ஏற வேண்டுமானால், வாழ்க்கைத்தரம் உயர வேண்டுமானால் அந்தப் பகுதிகளிலே சாலேகளை அமைக்க வேண்டியது மிக முக்கியம். கிராமப் புறங்களில் சாலே வசதிகளைச் செய்து கொடுக்காது இருப்பது ஜனநாயக வளர்ச்சிக்குக் கூட உகந்ததாக இருக்காது. அதற்கு நேர் மாறான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அமைச்சர் அவர்கள் சில புள்ளி விவரங்களையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். நம்முடைய ராஜ்யத்தில் மொத்தம் 27,732 மைல் நீளமுள்ள சாலேகள் இருக்கின்றன என்று கூறியிருக்கிறார்கள். அதிலே நேஷனல் ஹைவேஸ், ஸ்டேட் ஹைவேஸ், மேஜர் டிஸ்ட்ரிக்ட் ரோட்ஸ் இவை மூன்றும் சேர்ந்து 10,830 மைல்கள் இருக்கின்றன. பாக்கியுள்ள ரஸ்தாக்கள் பதினாறுயிரத்துக்கு மேற்பட்ட மைல்கள் இருக்கின்றன. இன்று இருக்கக் கூடிய நிலைமையில் மெடல் போடப்படாத ரோடுகள் 17,000 மைல்கள் வரை இருக்கின்றன. ஆனால் மூன்றாவது திட்டத்தின் முதல் மூன்று ஆண்டில் 92 மைல்களுக்குத்தான் மெடல் போடப்பட்டது என்று புள்ளி விவரம் கொடுத்திருக்கிறார்கள். இந்த வேகத்தில் செல்வோமானால், இருக்கக்கூடிய ரோடுகளுக்கெல்லாம் மெடல் போட வேண்டுமென்றால், எத்தனையோ ஆண்டுகள் ஆகும் என்ற நிலைமையில்தான் இருக்கிறோம். ஆகவே, கிராம ரஸ்தாக்களைச் சீர்திருத்தம் செய்வதற்கு ஒரு பிரத்தியேகமான இடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாலே அபிவிருத்திக்காக நான்காவது திட்டத்திலே 37 கோடி ரூபாய் ஒதுக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறேன். குறிப்பாக, என்னுடைய தொகுதியில் ஒரு பகுதி மலேப் பிரதேசம். அந்தப் பகுதி நமக்கு அந்நியச் செலாவணியைப் பெற்றுத் தரக்கூடிய காப்பி, ஏலம் போன்றவற்றைப் பயிர் செய்யக்கூடிய பரந்த பகுதி. பல ஆயிரம் ஏக்கர் நிலங்களைக் கொண்ட பகுதி. இந்தப் பகுதிகளில் எந்த விதமான ரோடு வசதியும் இல்லாமல் இருக்கிறது. அதன் காரணமாக, காப்பி, ஏலம் ஆகிய இரண்டு பொருள்களின் உற்பத்திச் செலவு அதிகமாகிக் கொண்டே போகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு ரோடு போடப்படுவது பற்றிக் குறிப்பிட்டார்கள். ஒட்டன்சத்திரத்திலிருந்து பாச்சலூரா வரையிலும், பாச்சலூரிலிருந்து தண்டிக்கூடு வரையிலும் ஒரு ரோடு, "காட்" ரோடை இணைக்கும் வகையில் போடப்படவேண்டுமென்று ஸ்கீம் வகுக்கப்பட்டது. ஆனால் அதற்காக ஒரு பிரத்தியேகமான சப்-டிவிஷனை ஏற்படுத்தி டீடைல்டு எஸ்டிமேட்டத் தயார் செய்து பார்க்கும்போது, மிக அதிக அளவிலே எஸ்டிமேட்டைக் காட்டிலும் இரண்டு மடங்கு உயர்ந்து விட்டதன் காரணமாகக் கடந்த நான்கைந்து வருஷங்களாக அந்த ஏற்பாட்டினுடைய வேலே ஆரம்பிக்கப்படாமலே இருக்கின்றன. அந்த ரோட்டுக்குப் பிரையாரிடி கூடக் கொடுக்கப்பட்டிருந்தது. பிரையாரிடி எல்லாம் என்ன ஆயிற்று என்பது தெரியவில்லே. இதைப் பற்றி, நான் பல முறை அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லியிருக்கிறேன். அந்தப் பகுதி மக்கள் எல்லாம் அந்த ரோடு வந்து விடும் என்று எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆனால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லே என்ற நிலைமையில் இருக்கிறது. மந்திரியவர்கள் இந்த விஷயத்தில் பிரத்தியேகமாகக் கவனம் செலுத்தி அந்த ரோட்டைப் போட ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழில் வளர்ச்சி அபிவிருத்தி அடைந்து வருகிற பகுதிகளில் சாலேகள் அமைப்புக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறதோ அதே முக்கியத்துவம் அந்நியச் செலாவணியைச் சம்பாதித்துத் தரக்கூடிய காப்பி, ஏலம் போன்றவற்றைப் பயிரிடுகிற பகுதிகளுக்கும் தரவேண்டும்.

அடுத்து, மதுரை மக்களுடைய சார்பில் இந்தச் சர்க்காருக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே பரப்பலாறு திட்டமும், பாலாறு-பொரந்தலாறு திட்டமும் எடுத்துக்



காள்வதற்கு வகை செய்யப்பட்டிருப்பதாக பட்ஜெட் உரையில் முதல் ந்திரி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த இரண்டு திட்டங்களையும் ான்காவது திட்டத்தில் சேர்த்துக்கொண்டதற்காக என்னுடைய நன்றி யைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் பெரிய ளம் பகுதியில் சோத்துப்பாறை, குப்பான்பாறை ஆகிய இரண்டு திட்டங்களையும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சாத்துப்பாறைக்கு அமைச்சர் அவர்களே நேராக வந்து பார்த்தார்கள். ருவாய் வரக்கூடிய திட்டம், மிக அழகான திட்டம் என்று கூறினார்கள். ந்தத் திட்டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக்கொள் தற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு ன்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி:** கனம் சபாநாயகர் அவர்களே, எதிர்க்கட்சி ார்பில் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் இந்த விவாதத்தில் கலந்துகொள்ள விரும்புகிறேன். எங்கள் பகுதியில், கடலூர் கரத்தில் 22 லட்சம் ரூபாய் செலவில் பாலத்தை அகலப்படுத்தும் திட்டத்தை அங்கீகரித்திருக்கிறார்கள். அதற்காக நான் இந்த அரசாங்கத் திற்கும் குறிப்பாக பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எங்கள் ாவட்ட மக்களின் சார்பில் என் நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்தத் திட்டத்தை அங்கீகரித்து விட்டு, சட்ட ைப கட்டடம் கட்டுகிற மாதிரி நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக பேசி, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக அங்கீகரித்து, இப்போது அடிப்படை போட்டு நாலேந்து ஆண்டுகளுக்குள் கட்டி முடிக்கிற நிலே என்றில்லாமல் இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக, 1½ ஆண்டுகளுக்குள்ளாக, அந்த பாலத்தைக் கட்டி முடிக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்று கருது கிறேன். என் தொகுதியில் வி. ஆர். எப். ஸ்கீமில் பெண்ணேயாற்றில் பாலம் கட்ட 14 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்தார்கள் 1959-ல். இன்னும் அதற்கு பவுண்டேஷன் போடவில்லே. காண்ட்ராக்டரிடம் பணம் இல்லேயோ என்னவோ தெரியவில்லே. சீஃப் என்ஜினீயர் வருகிறார், போகிறார். ஆனால் நடவடிக்கைகள் ஒன்றும் எடுக்கப்படவில்லே. அதனால் நெய்வேலிக்குப் போகிற டிரூஃபிக் வேஸ்டாகிறது. காண்ட்ராக்டரிடம் கொடுக்காமல் அதை அரசாங்கமே கட்டி முடிக்கலாம், கடலூர் ஆஸ்பத்திரியை செய்ததுபோல். அவர்கள் போன ஆண்டு அக்டோபரிலேயே கம்ப்ளீஷன் ரிப்போர்ட் கொடுத்திருக்க வேண்டும். ஆகவே அதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தலேமை பொறியாளர் அவர்கள் அந்த இடத்திற்கு மீண்டும் விஜயம் செய்து அதை உடனடியாகக் கட்டி முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லேயெனில் அந்த காண்ட்ராக்டை ரத்து செய்து விட்டு அரசாங்கமே வேலே செய்து துண்டு விழுகிற நஷ்டத்தை காண்ட்ராக்டரிடமிருந்து வசூல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எங்கள் தாலூக்காவில், புவனகிரி குறிஞ்சிப்பாடியை கனெக்ட் செய்யும் பரவனாறு திட்டத்தை —சப்மர்ஜிபிள் பிரிட்ஜ்—செய்து முடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அத்திட்டத்திற்காக பல தடவை பணம் ஒதுக்கப்பட்டு இப்போது எட்டு லட்சம் அளவில் வந்திருக்கிறது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்து அதற்குப் பிறகு 1964 பிப்ரவரி மாதம் 12-ம் தேதி பி-3 என்ற செக்ஷனிலிருந்து கவர்ன்மெண்ட் மெமோராண்டம் வந்தது. கலெக்டரிடம் இருந்து வந்து அதை டெவலப்மெண்ட் கவுன்சிலில் வைத்து 10 லட்சம் ஸீலிங் வைத்திருக்கிறார்கள். 10 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் ஸவுத் டிவிஷனுக்கு அதர் ரோட்ஸுக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டார்கள். 20 லட்சத்திற்கு திட்டம் போட்டு முதற் திட்டமாக இதை டெவலப்மெண்ட் கவுன்சில் அங்கீகரித்தது. கலெக்டர் சிபார்சு செய்தார்கள். 1964-ம் வருடம் ஏப்ரல் மாதம் 16-ம் தேதி சீப் என்ஜினியரும் சிபார்சு செய்து அனுப்பியிருக்கிறார்கள். ஆனால் இன்னும் சாங்ஷன் ஆகவில்லே. ஏன் சாங்ஷன் ஆகவில்லே? என்ன அரசியல் அதற்குள்ளே வந்து விட்டது? சிதம்பரத்தையும் கடலூர் தாலூக்காவையும் இணைக்கக் கூடியதாக இருக்கிறது. அங்கிருந்து இங்கு நெல் கொண்டு

[திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி] [19th March 1965

வரவும், பொருளாதார வளர்ச்சிக்கும் அது உகந்ததாக இருக்கிறது. அதைக் கட்ட நம் அரசாங்கம் என் தயக்கம் காட்டுகிறது என்று தெரியவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்த திட்டங்களை என் மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட கடைசி ஆண்டில் கூட நிறைவேற்றவில்லை என்று கேட்கிறேன். பெண்ணை ஆற்றில் சில சமயம் வெள்ளம் வந்து பல கிராமங்கள் அழிந்து போகின்றன. அதற்கு ஒரு ப்ளாட் டாம் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை எக்ஸிக்யூடிவ் என்ஜினீயர், சூப்பரிண்டெண்டிங் என்ஜினியர் எல்லோரும் வந்து பார்த்தார்கள். எஸ்டிமேட் போட்டாகி விட்டது என்று சொன்னார்கள். அது குறித்து டெவலப்மெண்ட் கவுன்சில் கூட சிபார்சு செய்தார்கள். கலெக்டர் சிபார்சு செய்திருப்பதாக டெவலப்மெண்ட் கவுன்சில் கூட்டத்தில் சொன்னார்கள். ஆனால் இந்த பட்ஜெட்டில் அந்தப் பெயரையே காணோம். ஆகவே தயவுசெய்து அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் எங்கள் கழக உறுப்பினர் ஷண்முக உடையார் அவர்கள் கூட பேசினார்கள். சாத்தனூர் அணைக்கட்டு கட்டிய பிறகு திருக்கோவிலூருக்கு தண்ணீர் வருகிறதே தவிர கடல் பகுதியின் பக்கத்திலுள்ள அடிப பகுதியில் உள்ளவர்களின், எங்கள் ரைட்ஸ் பாதிக்கப்படாமல் கட்டியிருக்க வேண்டும். அதை நான்கு தடவைகளுக்கு மேல் சொல்லிவிட்டேன். ஏரிகளுக்கு தண்ணீர் கொடுத்து விவசாய வசதிகள் செய்து கொடுத்தால் உற்பத்தி தானாகப் பெருகும். என்ன சொன்னாலும், எவ்வளவு தடவை சொன்னாலும் சங்கு ஊதின மாதிரி நடந்து வருகிறது. அடுத்து, டீ.வி.ஆர்., எஸ்.எம்.ஐ.பி. ஸ்கீம்கள் இருக்கின்றன. அவைகளை டெவலப்மெண்ட் கவுன்சிலில் சிபார்சு செய்கிறார்கள். கலெக்டர் சிபார்சு செய்கிறார். ஆனால் என்று முடிவு வருமோ தெரியவில்லை. ஏரி மராமத்து செய்யும்போது தண்ணீர் வருவதற்கு முன்பே ஏரி மராமத்து செய்யப்பட வேண்டும். சிலர் இருக்கிறார்கள். எஸ்டிமேட் போட்டு வேண்டிய கண்ட்ராக்டர் வந்து விட்டால் தண்ணீர் வர ஐந்து பத்து நாட்கள் இருக்கும்போது மணல் எடுக்கிறார்கள். தண்ணீர் வந்து விட்டால் அவர் எந்த அளவிற்கு எவ்வளவு அடி மண் எடுத்திருக்கிறார்கள் என்று தெரியாது. ஆகவே தண்ணீர் வருவதற்கு முன்னால் இந்த வேலை நடந்து முடிந்திருக்க வேண்டும் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டும். இதை அரசாங்கம் சிந்தித்துப் பார்த்து ஆவன செய்ய வேண்டும். பெண்ணையாறு பகுதியில் பாதிக்கப்பட்ட எங்கள் பகுதியில் 10 லட்சத்திற்கு அதிகமாகச் செலவாகும். அங்கு, 20 ஏரிகளை கனெக்ட் செய்யும் முறையில் செய்ய வேண்டும். மாவட்ட அபிவிருத்தி மன்றத்தில் இதுபற்றி பேசப்பட்டது. என்ஜினியர் வருகிறேன் வருகிறேன் என்று சொல்கிறாரே தவிர வருவதில்லை. கலெக்டர் உத்திரவிட்டாலும் அங்குள்ள என்ஜினியர் நகர மாட்டேன் என்று சொல்கிறார்கள். ஆகவே சீப் என்ஜினியர் அங்கு வரும்போது கடலூர் டிவிஷனில் இவற்றை எல்லாம் நேரடியாக வந்து பார்த்து எது எதைச் செய்ய முடியுமோ அவற்றைச் செய்து உணவு உற்பத்திக்கு ஆக்கம் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

SRI K. S. G. HAJA SHERIFF : Mr. Speaker, Sir, I perused the book on the working of Minor Ports in Madras State. There are three important facilities that are required if the Minor Ports should develop and function in a useful manner. Firstly, the difficulty in crossing the bar at all times should be removed by placing dredgers. Secondly, there should be ample facilities at the shore for unloading and loading of cargo and also keeping them by means of lot of shed accommodation. Thirdly, powerful dredgers should be provided to take the cargo to the steamer and bring back the empty lighters. While two facilities are available, I do not find that the dredger facility and the tug facility is being created in any one of the minor ports, viz., Nagapattinam, Cuddalore and Tuticorin. Provision of a tug is a very important facility which will not only avoid waste of time, but will also improve the volume of traffic. What it will otherwise



19th March 1965] [Sri K. S. G. Haja Sheriff]

take about 3 to 4 hours, will take only 45 to 50 minutes if they used the dredgers and tugs. Thus there will be an enormous saving of time. I would therefore suggest to the Government that they should keep at least a powerful tug at every minor port as it will really be useful.

Sir, as hon. Members are already aware, Nagapattinam is a passenger port. The steamers going to Malaya and coming from Malaya touch that port and a lot of passenger and cargo activities are found there. That port handles at least about 30,000 passengers per annum. But, there is no proper rest house for the use of the passengers. Two years ago, when the Union Minister for Shipping visited that port, I remember that he showed some inclination to provide a rest house near the beach station adjoining the port. When I had recently been to Nagapattinam, I did not find any sign of a rest house being constructed there. So, I request the Hon. Minister to pursue the matter and see that a rest house was constructed there as early as possible. At present, there is a temporary rest house, but that is far away from the port and hence, it is not very popular.

I am very happy that some provision is being made for developing Ennore as a minor port. I think we are going to establish a thermal station there. Naturally, enormous quantities of coal will be coming here from Calcutta. Instead of handling the coal coming from Calcutta at the Madras harbour, it will be better if it is handled at this minor port which will incidentally be nearer the point of consumption. This port can be developed usefully for handling other traffic also.

Sir, along with the development of these Minor Ports with the object of improving the traffic and volume of cargo, there should also be facilities for the availability of a greater number of lighters for the smooth working of the vessels. The construction of lighters is a technique of its own and the cost also is very much on the high side. So, unless the Government come forward to give aid by way of granting loans to the boat-builders on easy terms and at a reasonable rate of interest. I am afraid the lightage capacity will not go up. So, I would request the Government to give loans to the boat-builders so that the handling capacity of the port also will go up.

Sir, I have once stated on the floor of this House that the homogenous cargo coming from abroad like fertilizers should always be handled or as far as possible be handled at minor ports so that it would be easy to distribute it to the interior parts. Now, that sort of cargo is mostly coming to Madras and therefore the cargo will have to be moved all along from Madras to the points of consumption in the interior parts. For instance, if this is to be consumed in the Thanjavur district or the South Arcot district or North Arcot district, I do not see any reason why this cargo should not be handled at minor ports of Cuddalore and Nagapattinam instead of allowing it to be handled at Madras. This matter

[Sri K. S. G. Haja Sheriff] [19th March 1965

has to be taken up with the Central Government. Of course there may be some difficulties and the owners may emphasise that the steamer's capacity should on an average be 750 tons. But this can be achieved provided the port is kept in an efficient condition by means of improving the port facilities there. So, I would request the Hon. Minister to look into this matter also. Thank you, Sir.

**திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்:** கனம் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் நீர்ப்பாசனத்துறை மான்யத்தை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். தற்போது ஐந்தாறு தலைமையின் கீழ் நீர்ப்பாசனத்துறை நிர்வாகம் நடந்து வருகிறது. பி. டபிள்யூ.டி.—ஃபுட் ப்ரடக்ஷன்—ஹைவேஸ்——டீ.வி.ஆர்—எஸ்.எம்.ஐ.பி.—போன்ற ஐந்தாறு நிர்வாகத்தின் கீழ்நடந்து கொண்டிருக்கிறது. இவ்விதம் இல்லாமல் இரண்டு குரூப்-களாக இருந்தால் நல்லது. மைனர் இர்ரிகேஷனில் 200 எக்கர்களுக்கு கீழே இருப்பதை ஒரு குரூப்பாகவும், அதற்கு மேல் இருப்பதை ஒரு குரூப்பாகவும் வைத்துக்கொண்டால நிர்வாகத்தை நடத்துவதற்கு வசதியாக இருக்கும். அப்படியில்லாமல் சேர்ந்து இருப்பதால் பல வேலைகளும் ஒழுங்காக நடப்பதில்லை. உதாரணமாக ஹைவேஸ் டிப்பார்ட்மெண்ட்டை எடுத்துக் கொண்டால், 211–வது உத்திரவின் பிரகாரம் புதிதாக டெவலப்மென்டுக்கு இடமிருப்பதாகத் தெரியவில்லை. மெயின்டினன்சுக்குத்தான் இடமிருக்கிறது. இவ்விதமில்லாமல் யூனிஃபார்ம் கண்ட்ரோல் இருக்கின்ற முறையில் செய்தால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக, டெக்னிக்கல் ஸ்டாஃப், ரிசர்ச் ஸ்டாஃப், வொர்க்ஷாப்பில் வேலை செய்கின்றவர்கள் இவர்களை அடிக்கடி மாற்றக்கூடாது. இவ்விதம் மாற்றினுல் அவர்களுடைய ரிசர்ச் செய்கின்ற பயிற்சி போய்விடும். மூன்று வருடங்களுக்கு மேலாக இருக்கிருர்கள் என்ருல் தொடர்ந்தும் இருப்பதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஆராய்ச்சி செய்வதற்கான அனுபவம் கிடைக்கும். இவர்களுக்கு மேலும் ஊக்கம் கொடுப்பதற்காக, அவர்களுக்கு எக்ஸ்ட்ரா அலவென்ஸ் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று நம்புகிறேன்.

ஆராய்ச்சியாளர் சொல்லுகின்ற கருத்தை மேற்கொள்வதில் நாம் சில நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் . உதாரணமாக "வெஸ்டர்ன் காட்ஸ்" வின் உயரத்தை குறைத்தால் "க்ளௌட்ஸ்" (மேகங்கள்) வந்து தங்கிப் போவதற்கு வசதி ஏற்படும்...... to reduce the height of the Western Ghats at least in some places.' அதன் மூலமாக மழை பெய்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிருர்கள். இதை அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"ரிவர்ஸ் ஸ்கீமை" பொறுத்தளவில், "வெஸ்ட் ஃப்ளோயிங் ரிவர்ஸ்" களை எல்லாம் பரிசீலனை செய்து அதை பலனுள்ளதாக ஆக்கவேண்டும் என்று கழிந்த மூன்று வருடங்களாக சொல்லப்பட்டு வருகிறது. ஒவ்வொரு வருடமும் 100 ரூபாய் மட்டும் இதற்கு டோக்கன் கிராண்ட் ஒதுக்கப்படுகிறது. அச்சன் கோவில் திட்டத்தைப் பற்றி முன்னுலேயே பேசப்பட்டிருக்கிறது. அமைச்சர் அவர்களும் வந்து பார்வையிட்டிருக்கிருர்கள். இப்போதுள்ள அமைச்சர் அவர்கள் தான் சொன்னதை சாதிக்கக்கூடியவர். அப்படியிருந்தும் இது 1963-லிருந்து செயல்படாமல் இருந்து வருகிறது. அதற்கு ஊக்கம் கொடுத்து "வெஸ்ட் ஃப்ளோயிங் ரிவர்ஸ்" சம்பந்தமாக வேலைகளைத் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடகுநயினுர் கோவில் ஸ்கீம், கருப்பாநதி ஸ்கீம் போன்றவைகளை எல்லாம் எடுத்து உடனடியாக வேலை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

"ரீ மாடல் ஸ்கீம்" சம்பந்தமாக, முக்கியமாக டெல்டா பிரதேசத்தில் தான் செயல்பட்டு வருவதாக இருக்கிறது. முக்கியமாக "ரீ மாடல் ஸ்கீம்" டேக்கன் ஓவர் செய்யப்பட்ட கிராமங்கள், அயன் கிராமங்கள் இந்த



19th March 1965] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

இடங்களில் நடத்த வேண்டும். இங்கெல்லாம் பழைய ஃபுட் ப்ரடக்ஷன் திட்டம் தான் இருந்து கொண்டிருக்கிறது. மேலும் நல்ல முறையில் இந்த இடங்களை முன்னேற்றுவதற்கு "ரீ மாடல் ஸ்கீம்" மூலமாக இருக்கக்கூடிய தண்ணீரை நல்ல முறையில் பங்கீடு செய்யக்கூடிய முறையில் எல்லோருக்கும் வினியோகம் செய்தால் நலமாக இருக்கும். முக்கியமாக "டேக்கன் ஓவர் ஏரியா" "அயன் வில்லேஜ்" இவைகளில் எல்லாம் இப்போது "ட்யூயல் கண்ட்ரோல்" இருந்து கொண்டிருக்கிறது. ஒரே கிராமத்தில் அயன் வில்லேஜ் தாசில்தாரும் இருந்து கொண்டிருக்கிருர், டேக்கன் ஓவர் ஏரியா தாசில்தாரரும் இருந்து கொண்டிருக்கிருர். இவ்விதம் "ட்யூயல் கண்ட்ரோல்" இருப்பதை மாற்றி ஒருவரின் கண்ட்ரோல் இருக்கும்படியாகச் செய்வது நலமாக இருக்கும். உதாரணமாக திருநெல்வேலி ஜில்லா பாப்பாங்கரை என்ற இடம் ஐந்து தாசில்தார்களின் கீழ் நிர்வாகம் நடந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் மாற்றி, பி.டப்ள்யு.டி.-யிடம் ஒப்படைத்துவிட்டால் நல்லது என்று எண்ணுகிறேன்.

புதிய கிணறுகளுக்கு (நியூ வெல்ஸ்) ஒதுக்கப்பட்டிருப்பது போதாமல் இருக்கிறது. 5,000 ரூபாய் வரை செலவாகிறது ஒரு கிணற்றுக்கு. இது வரை 16 ஆயிரம் கிணறுகள் தான் வெட்டப்பட்டிருக்கின்றன. இதை இன்னும் அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கம்யூனிட்டி வெல்ஸ் சம்பந்தமாக செயல்படுவது குறைவாக இருக்கிறது. இதையும் அதிகமாக செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பி. டப்ள்யு.டி.யின் கீழ் பிரைமறி ஸ்கூல் பில்டிங்ஸ் சம்பந்தமாக செங்கோட்டை தாலூகாவுக்கு எந்தத் தொகையும் ஒதுக்கப்படவில்லை. கன்னியாகுமரி ஜில்லாவுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. செங்கோட்டையைப் பொறுத்த வரையில் அங்கிருக்கின்ற கட்டிடங்களுக்கு ரிப்பேரோ, மெயின்டினன்ஸோ, எக்ஸ்டன்ஷனே நடக்கவில்லை. ஆகவே செங்கோட்டை தாலூகாவையும் சேர்த்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹைவேஸ் சம்பந்தமாக, ரோட்-களில் பிரிட்ஜ் வேலைகள் நடக்கும்போது டைவர்ஷனு-க்கு சிறிய அளவுதான் தொகை ஒதுக்கப்படுகிறது. இது போதாது. சரியான முறையில் டைவர்ஷன் போட முடியாத நிலை இருப்பதால் அதிகமான புழுதி அடிக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே ஒரு பாலத்தை வேலைக்கு எடுத்துக் கொள்ளும்போது, டைவர்ஷனுக்குப் போதுமான அளவு தொகை ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மௌண்ட் ரோடிலும் கோட்டை பக்கமும் வரக்கூடிய ரோடுகளில் சில நேரங்களில் டிராஃபிக் நெருக்கடி ஏற்படுகிறது. இதற்கு "பாட்டில் நெக்"காக இருப்பது அங்குள்ள பாலங்கள். இதற்கு மௌண்ட் ரோட்டில் டிரான்ஸ்போர்ட் ஆபீஸ் பக்கம் இருக்கின்ற பாலத்தையும் கோட்டை பக்கத்தில் இருக்கின்ற பாலத்தையும் விரிவுபடுத்த வேண்டும். இப்போது இந்த இரண்டு இடத்திலும் டிராஃபிக் மிகவும் கஷ்டமாக இருக்கிறது. சில நேரங்களில் வண்டிகளை நீண்ட நேரம் நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே இந்த இரண்டு பாலங்களையும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* SRI M. WILLIAM: Mr. Speaker, Sir, in supporting the Demands of Irrigation and Public Works, I wish to say a few words. I am really happy that the Chittar Pattanamkal Scheme which has been pending for a long time, has been started in right earnest and the work is progressing well. But, in this connection, I wish to point out that the excavation of Pattanamkal channel from the left bank of the channel should be speeded up without giving any sort of room for complaint or delay. I also

wish to point out that some top priority should be given to one or two small items of work which will yield results very quickly, especially the extension of the right bank channel of the Tirup-parappu weir to the Mulliar channel and also the opening of a branch channel from that channel to Chitheral. The extension of the right bank channel to Mulliar would cost less than Rs. 20,000 to Rs. 25,000 and 500 to 700 acres would be saved from the failure of crops. There has been failure of crops in this extent of about 500 to 700 acres during the last one or two years. If this work is done without much delay, those areas can be saved from failure of crops.

Then, with regard to the Lift Irrigation Scheme at Bilathurai, on account of the dual control, the pumps are not working. The Electricity section is under the control of the Tiruchirappalli Electricity Engineer and the Civil works are under the control of the Executive Engineer, Nagercoil. On account of the dual control, the pumps are not functioning properly. Last year and in the year before, there was failure of crops in about 500 acres due to stoppage of two or three waterings. If the pumps are repaired

* * *

THE HON. SRI V. RAMAIAH : Are the people prepared to pay the betterment charges?

SRI M. WILLIAM : It is not purely an irrigation scheme. It is also a drinking water scheme. Of course, the people are willing to pay some betterment tax. They do not want the entire cost to be borne by the Government. Since it is a drinking water scheme, some concession has to be shown to the ryots. It was started as a drinking water scheme and the understanding was that no betterment tax would be levied. With regard to Neyyar Project, one or two branch channels are yet to be completed. On account of the delay in acquisition proceedings, the work has been stayed. I request the Hon. Minister to issue orders to expedite the acquisition proceedings.

With regard to Minor Irrigation works, there is a network of tanks, about thousand tanks, in Vilavancode taluk. All these tanks have been repaired, but desilting should be done in such a way that the tanks are deepened at least up to 5 feet below the sluice level. If this is done, there will be perennial supply of water due to the springs. That will afford scope for rearing fish also. I request that this aspect also may be considered.

(The time bell was rung.)

* **திரு. அ. ராகவ ரெட்டி :** கனம் சபாநாயகர் அவர்களே, நம்முடைய மாநிலத்திலே பி. டபிள்யு.டி., ஹைவேஸ் இலாகாக்கள் செய்து கொண்டு வரும் வேலைகளைப் பற்றி முக்கியமாக நம் அமைச்சர் அவர்களையும் சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரிகளையும் பாராட்டாமல் இருக்கவே முடியாது. என்னைப் பொறுத்த வரையில் அடிக்கடி நான் ஆந்திர மாகாணத்திற்குச் செல்லுகிறவன். அங்கு பார்த்துவிட்டு இங்கே பார்க்கும் போது இங்கே பெருமைப்படும் அளவுக்கு வேலைகளைச் செய்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. பெருமைப்படும்படியாக இருந்தாலும், செங்கற்பட்டு ஜில்லாவிலே—மற்ற மாவட்டங்களைப் பற்றி அவ்வளவு நன்றாக எனக்குத் தெரியாது; அது தெரியாவிட்டாலும்—செங்கற்பட்டு ஜில்லாவிலே நடக்





கும் வேலைகளைப் பார்க்கும்போது அங்கே அவ்வளவு கவனித்துச் செய்யவில்லை என்ற குற்றச் சாட்டைச் சொல்லாமல் இருக்க முடியாது. என்னுடைய தொகுதியாக இருக்கிற கும்மிடிபூண்டி ஆந்திராவுக்குப் போகுமா அல்லது தமிழ் நாட்டில் இருக்குமா என்று 1947-ம் ஆண்டிலிருந்து சந்தேகமாக இருந்த காரணத்தினால் ஒரு வேலையும் யாரும் செய்ய வேண்டும் என்று நினைத்தது இல்லை. செய்தது இல்லை. இரண்டு, மூன்று வருஷங்களாகத்தான் செய்ய வேண்டுமென்று நினைக்கிறார்கள். இருந்தாலும் ஒரு வேலை கூட உருப்படியாகச் செய்யவில்லை என்று பொதுவான குற்றச் சாட்டைச் சொல்லிக்கொள்கிறேன்.

கும்மிடிபூண்டி ரோடுகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் பஞ்சாயத்து யூனியனுக்கு கிடைக்கின்ற பணத்தை வைத்துக்கொண்டு செய்ய வேண்டுமானால் ஐந்து ஆண்டுகள் ஆனாலும் எதுவும் செய்ய முடியாது. என்னுடைய தொகுதியில் இருக்கின்ற ஊத்துக்கோட்டை பகுதியில் இருக்கின்ற அளவுக்குக் கொண்டு வர 50 வருஷம் ஆகும். இதற்காகத் தனியாக ஏதாவது தொகை கொடுத்து மற்ற பகுதிகளிலுள்ள நிலைமைக்கு வரும்படி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, ஆரணியாற்றில் ஒரு அணைக்கட்டு கட்ட ஸாங்க்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் 1965–66-ம் வருஷத்தில் நடக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் அங்கத்தினர் சுப்பையா முதலியார் சொன்ன மாதிரி நீர்ப்பாசன வசதி ஏற்படுத்தும் வேலை 5–6 இலாக்காக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பி.டபிள்யு.டி. தவிர மற்ற இலாகாக்களினால் திறமையாகச் செய்யப்படவில்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. முக்கியமாக சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் பஞ்சாயத்து யூனியனுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன. அவைகள் ஹைவேஸ் டிப்பார்ட்மெண்ட் என்ஜினியர்களால் மேற்பார்வை பார்க்கப்படுகின்றன. அந்த என்ஜினீயர்களுக்கு நீர்ப்பாசனத்தைப் பற்றி—தெரியாது என்று சொல்லவில்லை—அவைகளை கவனத்துடன் பார்ப்பதில்லை. செய்ய வேண்டிய வேலைகளைச் செய்வதில்லை. நான் வசிக்கும் பாலவாக்கம் பகுதியில் ஒரு ஏரி மழையில் உடைந்து விட்டது. அதை இன்று வரையில் சரி பார்க்கவில்லை. ரிப்பேர் செய்யவில்லை. என்ன என்று பஞ்சாயத்து யூனியன் கமிஷனரைக் கேட்டால் வேண்டிய பண வசதி இல்லை என்று சொல்லுகிறார்கள். இம்மாதிரி உணவுப் பற்றாக்குறை இருக்கும் நேரத்தில் ஏரி உடைந்து விட்டால் அதைப் பார்த்து உடனே செய்யாத இலாகாவிடம் இந்த வேலையைக் கொடுத்திருந்தால், அதன் கீழ் இருக்கும் ஆயக்கட்டில் எப்படி பயிர் ஆகும் என்று கேட்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பொன்னேரி, திருவள்ளூர் தாலூகாக்களில் ஏராளமான தண்ணீர் இருக்கிறது. போர் போட்டு, பி.டபிள்யு.டியில் இரண்டு மூன்று இடங்களில் தண்ணீர் சப்ளை செய்கிறார்கள். மற்ற இடங்களிலும் அம்மாதிரி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு........

(மணியடிக்கப்பட்டது.)

**திரு. கி. இரா. சம்பந்தம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பாசனத் திட்டங்களைப் பற்றிய, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற, மான்யக் கோரிக்கைய ஆதரித்து அதிலே சில குறிப்பான அம்சங்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தஞ்சை ஜில்லாவிலே விவசாயம் நல்ல முறையில் நடந்து அது பல மாகாணங்களுக்கு உணவு அளிக்கக்கூடிய முறையில் இருந்துகொண்டு வருகிறது. அங்கே இருக்கக்கூடிய திட்டங்களெல்லாம் வெகுநாட்களுக்கு முன் ஏற்படுத்தப்பட்ட பாசனத் திட்டங்கள். நாம் எதுவும் புதிதாக அங்கே செய்ய வேண்டிய நிலைமை இல்லாவிட்டாலும்கூட, அங்கே அவர்கள் இந்த மழைக் காலத்தில் படக்கூடிய கஷ்டங்களை நிவர்த்திக்க வடிகால் தான் அங்கு முக்கியமாகச் செய்துகொடுக்க வேண்டுமென்று

அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அமைச்சர் கனம் கே. எல். ராவ் அவர்கள் ஏற்கனவே தஞ்சை ஜில்லாவிலே என்ஜினீயராக இருந்திருக்கிறார். அந்த முறையில் தஞ்சை ஜில்லாவைச் சுற்றிப் பார்த்து அவர் கருத்துக்களை, எங்களையெல்லாம் கூட்டி, அங்கே அறிவுரை ஆற்றினார்கள். ஆனால் அவர்கள் சொன்ன விஷயங்களில் எது நிறைவேற்றுவதற்கு எடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி ஒரு குறிப்புக் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று தஞ்சை ஜில்லா வாசியாகிய நாங்கள் விரும்புகிறோம். ஏனென்றால் உடனடியாக அதைச் செய்யாவிட்டால் வருஷா வருஷம் வரக் கூடிய பருவ மழைகளால் எல்லா விவசாயிகளும் கஷ்டப்படக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. அதோடு அங்கு இருக்கக்கூடிய ஆறுகள் எல்லாம் பெட்டாம் கட்டி பாசனம் செய்ய தண்ணீரின் நிலையை உயர்த்த ஏற்பாடு செய்ததன் காரணமாக ஆறுகள் தூர்ந்து இருக்கின்றன. பெட்டாமுக்கு பதில் ஸ்க்ரு ஷட்டர்ஸ் ஆங்காங்கு ஏற்படுத்தினால், செலவு கொஞ்சம் அதிகம் ஆனாலும், வெள்ளக் காலத்தில் பலகையை எடுத்து விடுவதன் மூலமாக மேலே இருக்கிற வண்டல் சமுத்திரத்திற்கு அடித்துப் போகும் நிலைமை ஏற்படுகிறது. அமைச்சர் அவர்கள் கூட ஒத்துக்கொண்டார்கள். எந்த அளவுக்கு நிறைவேற்ற முன் வந்திருக்கிறார்கள் என்று சொல்லும்படி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கடலோரப் பகுதியாக இருக்கிற சீர்காழி, மாயூரம், திருத்துறைப்பூண்டி, அதிராம்பட்டணம் போன்ற தாலூகாக்களிலே பாசன ஆறும் வடிகாலும் ஒன்றாகவே இருந்து கொண்டு வருகிறது. அதுதான் தஞ்சை ஜில்லாவிலே இருக்கக்கூடிய நெருக்கடிக்கு முதற் காரணம், அதை மத்திய அமைச்சர் கனம் கே. எல். ராவ் அவர்களும் ஒத்து கொண்டார்கள். அமெரிக்காவிலிருந்து வந்த போர்ட் கமிஷன் கூட ஒத்துக்கொண்டது. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்த அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. உடனடியாக அதைச் செய்யாவிட்டால் இந்த நான்கு-ஐந்து தாலூகாக்களில் உணவு உற்பத்தி குறைந்து தான் போகும். அதனால் விவசாயிகளும் பாதிக்கப்படக் கூடிய நிலைமைதான் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதை என்ஜினீயர்கள் கூட சர்வே செய்தார்கள் என்று நினைக்கிறேன். அந்த சர்வேயில் என்ன முடிவாயிற்று, அது எந்த நிலைமையில் இருக்கிறது என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏ கிளாஸ் சானல்லை சர்க்கார் தூர் எடுப்பதற்காக, வாய்க்கால் எடுப்பதற்காக எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் பி கிளாஸ் சானல்லையும் எடுத்துக்கொண்டால் சௌகரியமாக இருக்கும். குடி மராமத்தில் உள்கண்ணிதான் வெட்டுகிறார்கள். இந்த மாதிரி பாசன வாய்க்காலை அவர்களால் எடுத்துக்கொள்ள முடியாது. அவர்களுக்கு இருக்கக்கூடிய நிதி நிலைமையில் அவர்களால் அதைச் செய்ய முடியாது. ஆகவே, ஏ கிளாஸ் சானல்லை எடுத்துக்கொண்டது போல், பி கிளாஸ் சானல்லையும் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு முன்பெல்லாம் அணையைச் சீர்படுத்துவதை மாத்திரம் என்ஜினியரிங் டிபார்ட்மெண்டு செய்துகொண்டிருந்தார்களே தவிர தூர் எடுப்பது என்பது கிடையவே கிடையாது. இப்பொழுது தான் அந்த மாதிரி தூர் எடுக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆகவே, பி கிளாஸ் சானல்லையும் தூர் எடுப்பதற்கு சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுது தஞ்சை ஜில்லாவிலே உணவு உற்பத்தியை அதிகமாகச் செய்ய வேண்டும் என்ற காரணத்தை உத்தேசித்து விலைகள் ஒரே நிதானமாக இருக்கிற காரணத்தினாலும், விவசாயிகள் அதிக நிலத்தை சாகுபடிக்கு கொண்டு வந்திருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான நிலங்களை சாகுபடிக்கு லாயக்கு இல்லாத நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள். எப்பொழுதோ போடப்பட்ட ஹெட் ஸ்லூயிஸ், இத்தனை க்யூஸெக்ஸ் என்ற அளவில் எந்தக் காலத்திலோ எழுதப்பட்ட அதே நிலையில்தான் இன்றும் இருந்துகொண்டிருக்கிறது. இப்பொழுது சாகு



படி நிலம் அதிகமாக இருப்பதற்குத் தகுந்தாற்போல் ஏகரேஜுக்குத் தகுந்தபடி, ஹெட் ஸ்லூயிஸை கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

* **திரு. தா. சின்னசாமி** :கனம் சபாநாயகர் அவர்களே, 1965–66-ம் ஆண்டுக்கான நீர்ப்பாசன மான்யக் கோரிக்கையின் மீது எங்கள் தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரேபணையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். எங்கள் தென் ஆற்காடு ஜில்லாவில், கடைசி பாகமான கள்ளக்குரிச்சி தாலூகாவில் நீர்ப்பாசனம் என்பதை சொர்ப்பனத்தில் கூட பார்க்க முடியாது. ஆகையினால், அந்த வட்டாரத்தில் கோமுக நதியிலிருந்து தண்ணீரை பயத்தம்துறை, செட்டியந்தூர் வழியாக கூகையூர் வரையில் கொண்டுபோகவேண்டும் ; வழியில் சின்ன சேலம் ஏரிக்குத் தண்ணீர் தேக்கினால் பலருக்கும் கனவு நினைவாக படும் என்று அமைச்சர் அவர்களிடம் கூறிக்கொள்கிறேன். அதே நேரத்தில் சூளாங்குரிச்சி அணைக்கட்டை கட்டினால் அந்த வட்டாரத்தில், தியாகதுர்கம், ரிஷிவந்தயம் வட்டாரத்தில் 1,000 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசனம் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். எங்கள் பகுதியிலுள்ள விவசாயிகள் அத்தனை பேர்களும் கேணி வெட்டி இறைத்தே பிழைக்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. ஆகையினால், முதல் அமைச்சர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும் மின்சார வசதியை அங்கு வெகு விரைவிலே ஏற்படுத்திக்கொடுத்தால் விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

காந்தியார் கொள்கைப்படி எல்லோரும் சமத்துவமாக வாழவேண்டும் என்று சொல்லக்கூடிய நமது அமைச்சர் அவை பரதேசி மடம் கட்டியது போல ஹரிஜன நல இலாகா என்று ஏற்படுத்திவிட்டு, ஹரிஜனங்கள் ஒரு பயனும் காணாமல் போகக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஹரிஜனங்களுக்கு கேணி வெட்டுவதற்கு, மாடு வாங்குவதற்கு இனாம் மான்யம் கொடுப்பதை விட, ஒரு ஏக்கர் இரண்டு ஏகர் இருந்தாலும், மின்சார வசதி செய்து கொடுத்து, பம்பு செட்டு வாங்குவதற்கும், மாடு வாங்குவதற்கும் 10 வருஷத் தவணையில் சர்க்கார் கடன் கொடுத்து உதவினால் நன்றாக இருக்கும். விவசாயத்திற்கு தகுதியுள்ளவர்களை பிச்சை எடுக்கும் நிலையில் விடாமல் வாங்கிச் சாப்பிடும் மனிதர்களாக ஆக்கவேண்டாம். எந்த மாவட்டமாயிருந்தாலும் விவசாயம் செய்யும் மனிதர் ஹரிஜன மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்துதர வேண்டுமென்று தங்கள் மூலமாக ஏழை மக்கள் சார்பாக கனம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் தென் ஆற்காடு ஜில்லாவில் ரோடு வசதி சரியான முறையில் செய்து தரப்படவில்லை. சின்ன சேலத்திலிருந்து ரோடு புறப்பட்டு, கூகையூர், பின்னுங்குளம் வழியாக, பெரம்பலூர் தாலூகா வரைக்கும் அதைக் கொண்டு வந்து சேர்க்கும் முறையில் ரோடு வசதி செய்து தரவேண்டும். ரோடு போட்டு அந்த மார்க்கத்தில் ஒரு பஸ் ரூட்டையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இடையிலே இரண்டு ஆறுகள், கூகையூர் ஆறு, தோட்டப்பட்டு ஆறு குறுக்கே இருக்கின்றன. அதனால் மக்களுக்கு மிகவும் இடையூறு ஏற்படுகிறது. ஆகவே, அங்கே ஒரு பாலம் கட்டி, பஸ் ரூட்டையும் ஏற்படுத்தி, ரோடு போட்டு வசதி செய்துதரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய வட்டாரத்தில் ஏழை ஹரிஜன மக்கள் . . . . (மணியடிக்ககப்பட்டது).

* **திரு. வி. ஆர். பெரியண்ணன் :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, என்னுடைய கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுப் பிரேரேபணைகளை ஒட்டி ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நீர்ப்பாசன திட்டங்களைப் பற்றி அமைச்சர் அவர்கள் வைத்திருக்கிற அறிக்கையைப் பார்க்கும்பொழுது, என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில் எந்த விதமான பாசன திட்டமும் இல்லை என்றுதான் தெரியவருகிறது. என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொரு ஆண்டும் இங்கே பேசுகிற நேரத்தில் என்னுடைய மாவட்டத்தில்

[திரு. [illegible]. ஆர். பெரியண்ணன்] [19th March 1965

ஒரு திட்டம் இருக்கிறது, அதாவது திருமணிமுத்தாறு திட்டம் ஒன்று தான் இருக்கிறது, அதை நிறைவேற்றுவதற்கு அமைச்சர் அவை முன் வரவேண்டும் என்று சட்டமன்றத்தில் எடுத்துக்கூறியிருக்கிறோம். வெளியிலும் விவசாயிகள் பல மகஜர்கள் மூலம் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைப்பற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏதாவது வசதி இருக்கிறதா, இல்லையா என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்யவேண்டும். பரிசீலனை செய்த பிறகு அதற்கான ஒரு முடிவு என்ன என்பதைப்பற்றி, நிறைவேற்றப்படுமா, நிறைவேற்றப்படமுடியாதா என்பதையாவது எங்களுக்குச் சொல்லவேண்டும். கடந்த ஆண்டு பேசுகிற நேரத்திலும் நான் இதைப்பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறேன். என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட இதை வற்புறுத்தியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இதைப்பற்றி எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதது, எனக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுக்கிறது.

அடுத்தப்படியாக, கொள்ளிமலை அடிவாரத்தில் ஈச்சம்பட்டி என்ற கிராமம் இருக்கிறது. அங்கே ஒரு எரி வெட்டவேண்டும். இம்மாதிரி குட்டை வெட்டவேண்டும் என்று கலெக்டர் அவர்களும் சிபார்சு செய்திருக்கிறார்கள். மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்திலும் இதைப்பற்றி சொல்லியிருக்கிறோம். இரண்டு ஆண்டு காலமாக இதைப்பற்றி கேட்டுக் கொண்டிருந்தும், அந்தக் குட்டையை வெட்டக்கூடிய நிலைமை இன்னும் இல்லை. கொள்ளிமலை அடிவாரத்தில் 90 ஏக்கர் நிலம் புறம்போக்கு இருக்கிறது. அங்கு ஏற்கெனவே ஒரு பழைய குட்டை இருந்தது. அதை ஒட்டியே ஒரு குட்டை வெட்டி, தண்ணீரை தேக்கினால், 100, 120 அடி ஆழம் தோண்டி கிணறுகள் வெட்டி விவசாய பம்பு செட்டுகளை வைத்திருக்கிறார்கள். அந்தக் கிணறுகளில் நல்ல முறையில் ஊற்று பெருகி, தண்ணீர் நிறைந்திருக்கும். ஒரு போகம் விவசாயம் செய்யக்கூடிய நிலைமையிலிருந்து, இரு போகம் விவசாயம் செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். மாவட்ட அபிவிருத்தி மன்றக் கூட்டத்தில் கேட்டதற்கு, கலெக்டர் அவர்கள் இந்தத் திட்டம் அரசாங்கத்திடம் இருக்கிறது என்று தெரிவித்தார். ஆகவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. ஆ. தங்கவேலு :** கனம் சட்டமன்றத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கொடுத்திருக்கும் வெட்டுப் பிரேரபணையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நான் மூன்று ஆண்டு காலமாக என்னுடைய திண்டிவனம் தொகுதி வறண்ட பகுதியாக இருக்கிறது, எரிகள் மராமத்து செய்யப்படவேண்டும், எரிகள் ஆழப்படுத்தப்படவேண்டும் என்று சொல்லியும் கூட, இதுவரையிலும் அது கவனிக்கப்படவில்லை. நான்காவது ஆண்டைப் பொறுத்த வரையிலும் பார்த்தாலும் கூட, நீர்ப்பாசனத் துறை என்னுடைய வட்டத்தை, அதிலும் குறிப்பாக வறண்ட பகுதியை கவனிக்காமல் இருக்கிறது என்பதைக் குறித்து நான் மிகவும் வருத்தமடைகிறேன். தென்பஸார் எரி கலிங்கல் மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்று சென்ற ஆண்டு சட்டமன்றத்தில் ஒரு கேள்வி கேட்டேன். அமைச்சர் அவர்கள் அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும்பொழுது, 1963-64-ல் வேலை துவங்கப்பட்டு அந்த ஆண்டு இறுதிக்குள் முடிக்கப்படும் என்று பதில் சொன்னார்கள். ஆனால், 1964-65 ஆகிற இந்த நேரம் வரை அந்த வேலை துவங்கப்பட
11-30 a.m. வில்லை. சென்ற ஆண்டே சொன்னேன். இன்னும் 10 நாட்கள் தான் இருக்கின்றன. 1963-64-ல் தொடங்கவில்லை என்று வருத்தத்துடன் சொன்ன போது, முடிந்துவிடும் என்று சொன்னார்கள். ஆனால், இந்த ஆண்டில் —1964-65—இன்னும் 10 நாட்கள்தான் இருக்கின்றன. அப்படி இருந்தும் அந்தக் கலிங்கல் மாற்றி அமைக்கும் வேலை எடுக்கப்படவில்லை. வேலையே ஆரம்பிக்கப்படவில்லை என்பதை இங்கே வருத்தத்துடன் தெரிவிக்க விரும்புகிறேன்.



19th March 1965] [திரு. ஆ. தங்கவேலு]

மேலும் கோனேரிக் குப்பம் சமீபத்தில் சாரம் ஆற்றிலிருந்து மூன்று நான்கு எரிகளுக்கு தண்ணீர் நிறப்பும் வகையில் கால்வாய் வெட்டி வசதி செய்து தர வேண்டும், என்று 1962-லிருந்து சுட்டிக்காட்டியும், கேட்டுக் கொண்டும், இது வரையிலும் அந்த முக்கியமான வசதி செய்து கொடுக்கப்படவில்லை. உள்ளபடியே நான் வருந்துகிறேன். இது பலகோடி ரூபாய் செலவில் செய்ய வேண்டிய திட்டம் இல்லை. சில லட்சம் இருந்தால் போதும். இந்த வேலையைக் கூட செய்யவில்லை என்று உள்ளபடியே மிக்க வருந்துகிறேன்.

கள்ளக்குறிச்சி வட்டம் மிகவும் மோசமாக இருக்கும் பகுதி, வறண்ட பகுதி. மணியாற்றில் குறும்பக் கவுண்டன் ஜாகீர் பகுதியில் அணை கட்டினால், 4,000 ஏக்கரா புஞ்சை நிலத்தை நஞ்சை நிலமாக மாற்ற முடியும். அதுபற்றி வெள்ளைக்காரன் காலத்திலேயே சர்வே செய்து இருந்தும், 20, 30 வருஷங்களுக்கு முன்பே சர்வே செய்திருந்தும், வேலை இன்னும் செய்யப்படவில்லை. ஆனால், அது திட்ட கமிஷனுக்கு அனுப்பப்பட்டிருப்பதாக கேள்விப்படுகிறேன். உடனடியாக அனுமதி பெற்று அணைக் கட்டிக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும்.

ரோடு பாலம் அகலப்படுத்தும் வேலையில் மிகவும் தாமதம் ஏற்படுகிறது. கடலூரிலிருந்து திருக்கோயிலூர் போகும் வழியில், பாலங்கள் அகலப்படுத்தும் வேலை, 1963-ல் ஆரம்பிக்கப்பட்டது. 12—3—63, 9—4—63, 13—4—63, 14—4—63 ஆகிய தேதிகளில் நாலு பாலங்கள் விரிவு படுத்த ஆரம்பிக்கப்பட்டன. இரண்டொரு வேலைகள் தான் முடித்திருக்கிறார்கள். இவ்வளவு தாமதம் இருந்தால் எவ்வளவு சிரமமாக இருக்கும் என்று யோசித்துப் பார்க்கவேண்டும்.

அங்கே இருப்பது ஒரு ஹைவேஸ் ரோடு. மழைகாலத்தில் ரோட்டில் லாரிகளுக்கும், கார்களுக்கும், ஆக்ஸிடெண்டுகள் ஏற்படுகின்றன. அங்கே டைவர்ஷன் ரோடு இடையாது. ஆகவே இந்த வேலைகளை மழைகாலத்தில் ஆரம்பிக்காமல், கோடைகாலத்தில், எப்ரல் மாதத்தில் வேலையை ஆரம்பித்து மழை காலத்திற்கு முன்பாகவே வேலையை முடித்து விட்டால் வசதியாக இருக்கும்.

கடைசியாக, திண்டிவனம் நகரத்திலுள்ள ஆஸ்பத்திரியில் 40 பெட்டுகள் தான் இருக்கின்றன. அது ஒரு பெரிய நகரமாக இருப்பதால், அங்கே இருக்கும் ஆஸ்பத்திரியை விரிவு படுத்த வேண்டும் என்று சென்ற ஆண்டே கோரிக்கையை எழுத்து மூலம் கொடுத்தேன். அடுத்த ஆண்டு பட்ஜெட்டில் கவனிப்பதாக பதில் கொடுத்தார்கள். ஆனால் இதுவரைக்கும் கவனிக்கப்படவில்லை என்று தெரிவித்து, அதை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

* **திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வந்து இருக்கக் கூடிய மானியம் சம்பந்தமாக சில விஷயங்களை சொல்லுவதற்கு ஆசைப்படுகிறேன். தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 15 லட்சம் ஏக்கர் விவசாயம் நடைபெறுகிறது. அப்படி 15 லட்சம் ஏக்கர் விவசாயம் செய்யும் அதே நேரத்திலே சுமார் 10 லட்சம் ஏக்கராவிற்கு வடிகால் வசதி இல்லாமல், வருஷா வருஷம் பாதிக்கப்படும் நிலைமை இருக்கிறது. அங்கெல்லாம் வடிகால் வசதி செய்து கொடுத்தால், நலமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது சம்பந்தமாக மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள், இரண்டு தடவைகள் அங்கே வந்து அங்கு இருக்கக் கூடிய ரயத்துகளையும், சட்ட மன்ற உறுப்பினர்களையும் அழைத்து மாநாடு கூட்டி, ஆலோசனை கேட்டு வந்திருக்கிறார். அப்படி ஆலோசனை கேட்ட பிறகும் இன்றைக்கு இந்த திட்டத்திலே, அப்படிப்பட்ட வடிகாலை நிறைவேற்ற ஏதாவது திட்டம் சேர்ப்பார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இந்த வரவு செலவு திட்டத்திலே அப்படி ஒரு திட்டமும் குறிப்பிடப்படவில்லை. இருந்தாலும், நான்காவது திட்டத்திலாவது, அந்த மாதிரியான

திட்டத்தை மேற்கொள்ளவேண்டும். அப்படி மேற்கொண்டு வடிகாலை நல்ல முறையில் அமைத்துக் கொடுத்தால், தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி சப்டிவிஷனை எடுத்துக்கொண்டால், ஆறுகள் பாசனமாகவும், வடிகாலாகவும் இருக்கிறது. அரிச்சந்திரா நதி, வேதாரணியம் கனல் வடிகாலாக இருக்கிறது; அதே போல, அடப்பாறு வடிகாலாக இருக்கிறது. வெள்ளாறும், மஞ்சளாறும், முள்ளியாறும், வளவனாறும், கந்த பரிச்சனாறும் வடிகால்களாகவே இருக்கின்றன. இம்மாதிரி ஒரே ஆறு வாய்க்காலாகவும், வடிகாலாகவும் இருப்பதால், காலத்தில் தண்ணீர் வடியாமல் நெருக்கடி ஏற்பட்டு விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வடிகால் வசதி செய்து கொடுக்க வேண்டியது அவசியமாகிறது. 1954-ல் கந்தபரிச்சனாறு வடிகால் திட்டம் வேலை துவங்கப்பட்டு, அதன் மூலமாக 6,000 ஏக்கராவிற்கு பலன் ஏற்படும் என்று வேலை எடுக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு 11 ஆண்டுகள் ஆகியும், அந்த திட்டம் பூர்த்தி ஆகாமல், இன்னும் விவசாயிகள் வேதனைக்கு உள்ளாகியிருக்கிறார்கள். தென்பரை வடிகால், தலைஞாயிறு வடிகால், எடையூர், உதயமதாண்டபுரம் வடிகால், தொழுதூர், சித்தாய்மூர் வடிகால் இவைகளுக்கு எஸ்டிமேட்டுகள் தயாரிக்கப்பட்டு, அரசாங்கத்தின் அனுமதி கொடுக்காமல் வேலையை செய்யாமல் போட்டு வைத்திருக்கிறார்கள்.

பாசன சிறு திட்டங்களின் கீழ், 197 திட்டங்கள் போட்டுப்பட்டு, 130 திட்டங்களை மட்டும் அங்கீகரித்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் திருத்துறைப்பூண்டி தாலூகாவில் உள்ள, பல ஆண்டு காலமாக கோரப்பட்டு வந்துள்ள ஓரணியம்பலம் பாசன திட்டம் நிறைவேற்றப்படவேண்டும் என்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

மற்ற மாவட்டங்களை எடுத்துக்கொண்டால், கிழக்கு ராமநாதபுரம் வரண்ட பிரதேசம் என்று அடிக்கடி குறிப்பிடுகிறார்கள். இம்மாதிரியாக இருக்கும் மாவட்டங்களுக்கு, செயற்கை மழையைக் கொண்டு பாசனவசதி செய்து கொடுக்க முடியுமா என்று ஆலோசனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிச் செய்தால் இந்த வரண்ட மாவட்டங்களுடைய பாசனப் பற்றாக்குறையை போக்க நடவடிக்கை எடுக்க முடியும்.

நெடுஞ்சாலையை எடுத்துக்கொண்டால், என்னுடைய தொகுதியில், பாமணி–கன்னிமேடு சாலை, தட்டான்கோவில்–தலைஞாயிறு சாலை இவற்றை நெடுஞ்சாலை இலாகா எடுத்துக்கொள்ளவேண்டும். இவற்றையெல்லாம் நெடுஞ்சாலை இலாகா மேற்கொள்ள வேண்டும். அதைப்பற்றி மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலே தீர்மானம் போட்டு, அது சர்க்காருக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்தச் சாலைகளை மேற்கொள்வதன் மூலம், அந்தப் பிரதேச மக்களுக்கு போக்கு வரத்து வசதி செய்துகொடுக்க முடியும். அந்த ரோடுகள் மூலம் அந்த பகுதி மக்களுக்கு பஸ் போக்குவரத்தும், மற்ற வாகன வசதிகளை உபயோகப்படுத்தவும் உதவியாக இருக்கும்.

கீழத் தஞ்சையைப் பொருத்தவரையில், 17 பாலங்கள் கட்டவேண்டும் என்று மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலே சிபாரிசு செய்திருக்கிறோம். இந்த அறிக்கையைப் பார்க்கும்போது அதில் அவற்றில் ஒரு பாலம்கூட கீழ்த் தஞ்சைக்கு எடுக்கப்படவில்லை என்கிற குறைபாட்டைச்சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தஞ்சை ஜில்லாவைப் பொருத்த வரையில் பெரிய பாரங்களை ஏற்றிச் செல்லும் போக்குவரத்துக்கு வசதியான பாலம் கட்டமுடியாவிட்டாலும் சாதாரண பாரங்களை கொண்டுச் செல்லும் வகையில், 35,000, 40,000 ரூபாய் அளவில் பாலங்களைக் கட்டிக் கொடுத்தால், பார வண்டிகள், சவாரி வண்டிகள், கார்கள், ஜீப்கள் முதலியவைகள் போகும் வண்ணம் பாலங்களைக் கட்டிக் கொடுத்தால், கிராம மக்களுக்கு, தங்கள் தங்கள் தானியங்களை கொண்டு செல்லவும், போக்குவரத்துக்கும் வசதியாக இருக்கும். அந்த வகையில் குறைந்த மதிப்புள்ள பாலங்களைக் கட்டிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.





*** திரு. பி. ஊர்க்காவலன் :** கனம் சபாநாயகர் அவர்களே, நீர்பாசன மானியத்தை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். நீர்பாசனம் பொருத்த மட்டில், குறிப்பாக திருநெல்வேலி ஜில்லாவில் பம்பையாறு திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று நீண்ட நெடு நாளாக, பலமுறை எடுத்துக் கூறியிருக்கிறேன், என்பது இந்தத் துறை முன்னாள் அமைச்சருக்குத் தெரியும். பம்பையாறு திட்டத்தை நிறைவேற்ற, கேரளாக்காரர்கள் மறுக்கிறார்கள், தண்ணீர் விடமாட்டேன் என்கிறார்கள் என்று சொல்கிறார்கள். கேரள ராச்சியத்திலே உள்ள தண்ணீரை விடமுடியாது என்றால், நம் ராச்சியத்திலிருந்து,

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

அதுவும் குறிப்பாக திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து, அவர்கள் பார்ட்டருக்கு அரிசி, நெல் முதலியவைகளைக் கொடுக்கிறோம். அந்தத் தலைவலியினால்தான் திருநெல்வேலி ஜில்லாவில் அரிசி கிடைக்காது, மக்கள் திண்டாட வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அதைக் கூறியாவது திருநெல்வேலிக்கு—குறிப்பாக சங்கரன்கோவில், கோவில்பட்டி தாலூகாக்களுக்கு நன்மை பயக்கக்கூடிய பம்பையாறு திட்டத்தைக் கொண்டுவர அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கீரியாறு திட்டம் என்ற ஒரு சிறிய திட்டம் இருந்தது. அதை நிறைவேற்றவேண்டும் என்று பல முறை கேட்டுக்கொண்டிருக்கிறோம். போதிய தண்ணீர் வசதி இல்லை என்ற காரணத்திற்காக அதை எடுத்துக்கொள்ள முடியவில்லை என்று கூறிவிட்டார்கள். சிறிய திட்டமாக இருந்தாலும், அந்தக் கீரியாறு திட்டத்தை எடுத்து நிறைவேற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். சிறிய திட்டமாயிருந்தாலும் கூட, பல ஆயிரக்கணக்கான ஏக்கருக்கு பாசன வசதி அளிக்கக்கூடிய திட்டம் அது. இந்த வருஷம் பருவ மழை இல்லாத காரணத்தால், பெரும்பாலும் நெல் விளையாத பகுதியாய்விட்டது. அதுவும் பஞ்சப் பகுதியாகிவிட்டது. பஞ்ச நிவாரண வேலை என்ற அளவிலேயாவது அதை எடுத்து, உடனடியாக நிறைவேற்ற ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

வயலி, மலையடிப்பட்டி குளங்களைப்பற்றி கனம் அமைச்சர்களுக்கு நன்றாகத் தெரியும். பிரதம இன்ஜினீர் கூட நேரடியாக வந்து பார்த்திருக்கிறார். முன்னாள் மராமத்து இலாகா அமைச்சராக இருந்தவரும் பார்த்திருக்கிறார். அந்தச் சிறிய வேலையைக்கூட செய்ய இவ்வளவு நாள் தாமதம் ஏனோ தெரியவில்லை. பெரிய திட்டமாக இல்லாவிட்டாலும்கூட, அதை உடனடியாக எடுத்து நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

சங்கரன்கோவில், கோவில்பட்டி தாலுக்காக்களில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் தரிசு நிலங்கள் சும்மா இருக்கின்றன. அந்தத் தரிசு நிலங்களில் கிணறுகளை வெட்டி, விவசாயத்திற்குக் கொண்டுவந்து உணவு உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன.

*** திரு. தோ. மு. நல்லசாமி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்தைச் சொல்ல நான் முற்படுகிறேன். கொடுக்கப்பட்டிருக்கின்ற குறுகிய நேரத்தில் என்னுடைய தொகுதி சம்பந்தமான சில முக்கிய வேலைகளைப்பற்றி மட்டும் குறிப்பிடலாம் என்று நான் கருதுகிறேன்.

என்னுடைய கரூர் தொகுதியில் நெடு நாட்களாக மிகவும் பயனுள்ள திட்டம் நொய்யல் நதித் திட்டமாகும். புதிதாக இப்பொழுது தான் கேட்கக்கூடிய கோரிக்கை அல்ல. கடந்த பத்து ஆண்டுகளாகவே இதைப் பற்றி நான் வலியுறுத்தி வருகிறேன். அரசாங்கத்திற்கு ஞாபகப்படுத்தும் நோக்கத்தோடுதான் இதனை இங்கே சொல்கிறேன். இதற்காக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைப்பற்றி அமைச்சர்

அவர்கள் தமது உரையில் தெளிவாகச் சொல்வார்களானால், எனக்கு மட்டுமல்ல, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மக்களுக்கும் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதிலே உள்ள சிரமங்களையும், அது எப்பொழுது நிறைவேற்றப்படமுடியும் என்பதையும் தெரிந்துகொள்ள முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

கரூர் தொகுதி சம்பந்தப்பட்டவரையில், அமராவதி நதியின் இளை வாய்க்காலுக்கு ரீ மாடெலிங் செய்ய ஒரு எஸ்டிமேட் வந்து அது நிறை வேறிவிட்டதாக இந்த அறிக்கையிலே பார்க்கிறேன். அது கோவையைப் பொறுத்துமட்டும் நின்றுவிடாமல், கரூருக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன். கரூருக்கும் பயனளிக்கக்கூடியதாக அது அமையு மானால், அதை நான் வரவேற்கிறேன். அதைச் சீக்கிரமாக நிறைவேற்று வதன் மூலமாக ஏற்கனவே பாசனத்தில் இருக்கும் நிலங்களுக்கு வசதி செய்துகொடுக்கவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

கரூர் வட்டத்தில் பாபுலர் முதலியார் வாய்க்கால் சமீப காலத்தில் வெட்டிக் கொடுக்கப்பட்டது. வருஷத்தில் ஏழு மாதங்களுக்குத்தான் பாச னம் என்று ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்டது என்றாலும், இப்பொழுது ஆண்டு பூராவுக்கும் தண்ணீர் விடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகின் றேன். .காரணம், அதற்காக அரசாங்கத்திற்குப் புதிய செலவு எதுவும் இல்லை. ஏற்கனவே இருக்கும் அமைப்பிலேயே தண்ணீர் கொடுக்க முடி யும். அப்படிச் செய்தால், அந்தப் பாசனத்தினால் பலன் பெறும் விவ சாயிகள் நல்ல மகசூலை எடுத்து, உணவு உற்பத்தியைப் பெருக்க ஏதுவாக இருக்கும்.

அமைச்சர் அவர்கள் கரூர் பக்கம் சுற்றுப் பிரயாணம் வந்தபோது, அங்குள்ள திட்டங்களைப்பற்றிக் குறிப்பிடும்போது, அவற்றைத் தொகுத்து ஒரு அறிக்கையாகக் கொடுக்கவேண்டும் என்று என்னிடம் கேட்டார்கள். அதற்காகப் பெரும் செலவு செய்து, அந்தத் திட்டங்களையெல்லாம் ஒன் ருகத் தொகுத்து நான் கொடுத்திருக்கிறேன். அதைப்பற்றி இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை. அதிலும் துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். கரூர் தாலுகா வரண்ட பிரதேசம் ; திருச்சி மாவட்டத்திலே அது ஒட்டிக்கொண்டிருப்பதால், திருச்சி மாவட்டம் செழுமையானது என்று சொல்லும்போது கரூர் தாலுகாவும் செழிப்பானது என்று எண்ணும்படியான சூழ்நிலை இருக்கிறது. கரூர் தாலுகா வரண்ட பகுதியாக இருப்பதைக் கருதி, அங்கே அந்தத் திட்டங் களையெல்லாம் நிறைவேற்றுவதற்கு உதவி செய்யவேண்டும் என்று அமைச் சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்தைப் பொறுத்த வரையிலும், பெரும் செலவு செய்து ரோடுகளையெல்லாம் பராமரிக்கிறோம். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நம்முடைய மாநிலத்திலுள்ள ரோடுகள் நல்ல முறையில் அமைந்து போக்கு வரத்து வசதி விஷயத்தில் மிகவும் சிறப்பாக இருப்பதாகப் பெருமைப்படுகிறோம். குறிப்பாக ஒரு நாடு முன்னேறி வர வேண்டுமானால், ரோடுகள் அபிவிருத்தியாக வேண்டும். அவற்றில் ஏராளமான வாகனங்கள் போகவேண்டும். பெரிய இயந்திரங்களை ஏற்றிச் செல்லக்கூடிய பெரிய வாகனங்கள் போகக்கூடிய அளவில் ரோடுகள் அமையவேண்டும் என்பது எல்லோருடைய ஒன்றுபட்ட கருத்தாகும். ஆனால், இன்றைக்கிருக்கும் ரோடுகளைப் பார்த்தால், எல்லா ரோடு ஓரங்களிலுமே என்க்ரோச்மெண்ட் ஏற்பட்டு, ரோடுகளின் அகலம் நெருங்கிக் கொண்டே வருகிறது. சட்டசபை உறுப்பினர்களும், அமைச்சரவையிலு ரும், அதிகாரிகளும் மற்றவர்களும் இந்த நிலைமையைத் தெரிந்துக் கொண்டிருந்தும், மாற்றியமைப்பதற்கு இல்லாமல் செயலற்று இருக்கிறோம் என்று நான் கருதுகிறேன். ஆனால், ரயில்வே இலாகாவுக்குச் சொந்த மான இடங்களில் என்க்ரோச்மெண்ட் செய்ய முடியாது. காரணம், அதற்கு தீவிரமான சட்டங்கள் இருக்கின்றன. மராமத்து இலாகாவினர் ரோடு என்க்ரோச்மென்டை நிறுத்த முடிவதில்லை. காரணம், அவர்கள் ரெவினியூ இலாகா மூலமாகத்தான் அதைச் செய்ய வேண்டும், அவர்கள் தான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.



புதிய ரோடு போடும் போது, 100 அடி வேண்டும் 120 அடி வேண்டும் என்று அங்குள்ள விவசாயிகள் நிலத்தை அக்வையர் செய்கிறார்கள். ஆனால், ஏற்கனவே பெரிய ரோடுகளாக இருக்கும் ரோடுகள் கொஞ்சங் கொஞ்சமாகக் குறுகலாகி லேன்கள் என்று சொல்லும் அளவிற்கு மாறிக்கொண்டிருக்கின்றன என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் வலி யுறுத்திச் சொல்கிறேன். இதில் அரசாங்கமும் சம்பந்தப்பட்ட அதிகாரி களும் கவனம் செலுத்தி, ரோடுகளை அகலப்படுத்தி, பெரிய இயந்திரங்களை ஏற்றிச் செல்லக்கூடிய பெரிய வாகனங்கள் போவதற்கு வசதியான நல்ல நிலைமையை உண்டாக்கினால் நம்முடைய நாடு முன்னேறி வர வாய்ப்பு இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இது ஒரு பெரிய பிரச்னை. இதில் தக்க கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சர்க்கரை ஆலைகள் வைக்க தென்னாடு மிகவும் தகுதியானது என்று சொல்லி, சர்க்கரை ஆலைகள் வைக்க ஏற்பாடு செய்கிறோம். சர்க்கரை ஆலைகள் இருக்கும் பகுதிகளில், கரும்புப் பயிரிடுவோரின் நன்மைக்காக சர்க்கரை ஆலைகள் நிர்வகிக்கக்கூடியவர்கள் ஸெஸ் பண்டுக்குப் பணம் கொடுக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு ஆலையிலிருந்தும் லட்சக்கணக்கான ரூபாய் வந்துக்கொண்டிருக்கிறது. அந்தத் தொகை தனியாக ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. சர்க்கரை ஆலைகளுக்கு வர நல்ல பாதைகள் அமைக்கப்படுவதற்கும் ஏற்கெனவே இருக்கும் பாதைகளைச் செப்பனிடு வதற்கும் அந்தத் தொகையைச் செலவிடலாம். அந்தக் காரியங்களெல்லாம் இப்பொழுது தேங்கிக் கிடக்கின்றன. ஆகவே, இந்த ஸெஸ் நிதியிலிருந்து செலவிட்டு புதிய ரோடுகளைப் போடவும், ஏற்கெனவே இருக்கும் ரோடுகளைப் பராமரிக்கவும் நடவடிக்கை எடுக்கலாம். தற்போது இந்தத் திட்டங்கள் தூங்கிக்கொண்டிருக்கின்றன. அதிலும் கவனம் செலுத்தவேண்டும்.

என்னுடைய பிராந்தியத்தில் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. அதற்கு முன்னால், நான்கு மைல் நீளம் நாஷனல் ஹைவே ரோடு இருக்கிறது. அதிலே கரும்பு வண்டிகளும், லாரிகளும், டிராக்டர்களும் ஏராளமாகப் போய்கொண்டிருக்கின்றன. எவ்வளவு செலவு செய்து ரோடு போட்டாலும் இரண்டு மூன்று மாதங்களிலேயே கெட்டு விடுகிறது. அதற்காக "பைபாஸ்" போடவேண்டுமென்று ப்ரொபோஸல் இருக்கிறது. அது ஆரம்பிக்கப்பட வில்லை. ஏற்கெனவே இருக்கும் ரோடும் சரியாகப் பராமரிக்கப்படவில்லை. காரணம், அதிகமாக செலவு செய்யும் நிலையில் மத்திய சர்க்கார் விருப்பம் தெரிவிக்கவில்லை. அந்த ரோடு சீர்கெட்டிருக்கிறது. அதை உடனடியாக சீர்திருத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அதிக நேரம் இல்லாத காரணத்தால், உரையை இத்துடன் முடிக்கின்றேன். வணக்கம்.

*** புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, பாசனத் துறை மீது உண்டான இந்த விவாதத்தில் நம்முடைய அமைச்சர் அவர்கள், "தமிழ்நாட்டில் இருக்கின்ற ஒரு துளித் தண்ணீரைக்கூட வீணாக்காமல் பயன் படுத்திக்கொண்டோம்" என்ற கருத்தைக் கூறியிருக்கிறார்கள். அது ஓரளவுக்கு உண்மைதான். என்றாலும், "என்னுடைய தொகுதியில் இன்னும் கொஞ்சம் தண்ணீர் இருக்கிறது, அதைப் பயன்படுத்திக்கொள்ளக் கூடத் தவறிவிட்டிருக்கிறது அரசாங்கம்" என்று நான் கூறி வந்திருக் கிறேன். நான் மட்டுமல்ல, இந்த மன்றத்தில் முன்னாள் எதிர் கட்சித் தலைவராக இருந்த திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் அந்தக் குறையைப் பல முறை இந்த மன்றத்தில் கூறியிருக்கிறார்கள். அதையொட்டி, செய்யாற்றில் தண்டரைக் கருகில் அணைகட்டும் திட்டம் சர்க்காரால் பரிசீலிக்கப்பட்டு, 77 லட்ச ரூபாய் அதற்காக மதிப்பீடு போடப்பட்டு, 1963–64-ம் ஆண்டில் 20 லட்சம் ரூபாயும் 1964–65-ம் ஆண்டில் 40 லட்சம் ரூபாயும், 1965–66-ம் ஆண்டில் 17 லட்சம் ரூபாயும் செலவு செய்து முடிக்கவேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டு, அது மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட வரையிலும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால், எந்தக் காரணத்தினாலோ கைவிடப்

[புலவர் கா. கோவிந்தன்] [19th March 1965

பட்டது. நான் அதைத் தலைமை பொறியர் அவர்களிடம் வற்புறுத்திக் கூறிய காரணத்தினாலும், நம்முடைய அமைச்சர் அவர்களிடத்திலும் பல முறை எடுத்துக் கூறிய காரணத்தினாலும், அது மீண்டும் பரிசீலிக்கப்பட்டது.

இப்போது அண்மையில் சூபரின்டெண்டிங் எஞ்சினியர் அவர்கள் வந்து பார்த்து தண்ணீர் இருக்கிறது என்று சொன்ன பிற்பாடு, தலைமைப் பொறியாளரும்கூட அதை ஆராய்ந்து தண்ணீர் இருக்கிறது என்ற அளவில் முடிவு எடுத்திருக்கிறார்கள். அங்கே நீரைத் தேக்கினால் ஆலியாபாத், ஆவணியாபுரம் அணைக்கட்டுக்குக் கீழ் இருக்கிற ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் போக, உத்திரமேரூர் அணைக்கட்டு ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் போக, பாக்கித் தண்ணீர் ஏராளமாக இருக்கிறது. ஆயினும் அது சமவெளிப் பிரதேசமாக இருப்பதனால் பெரிய அணையைக் கட்ட வசதி இல்லை. தண்ணீரைத் தேக்க சிறிய அணையைக் கட்டினாலும் மழைகாலங்களில் ஓடிவருகிற தண்ணீரைத் தேக்கி பக்கத்தில் உள்ள ஏரிகளுக்குப் பாய்ச்சி வைத்துக்கொள்ளலாம் என்பதாக எஸ்.இ. கூறியிருக்கிறார்கள். அதை கனம் அமைச்சர் அவர்கள் கவனித்து அந்தத் திட்டத்தை முடித்துத் தருமாறு வேண்டிக் கொள்கிறேன்.

மாமண்டூர் ஏரியின் கீழ் உள்ள இரண்டு மூன்று கிராமங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக ஆயக்கட்டு கட்டியிருக்கிறார்கள். வாழவண்டலுக்குத் தனிக் கால்வாய் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதற்கு 12,100 ரூபாய் ஆகும் என்று மதிப்பிட்டார்கள். அதன் பாதித் தொகையாகிய 6,050 ரூபாயை இந்த ஊர்ப் பொதுமக்களிடம் இருந்து 1955-ம் ஆண்டிலேயே வசூலித்துவிட்டார்கள். ஆயினும் அது நிறைவேற்றப்படவில்லை. பிறகு நான் கனம் அமைச்சர் அவர்களையும், தலைமைப் பொறியாளரையும் சந்தித்து இந்த விஷயத்தை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். அதன் பிறகு மீண்டும் அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு முதலில் 20 ஆயிரமாக மதிப்பிடப்பட்டு அந்த மதிப்பீடு இப்போது திருத்தப்பட்ட மதிப்பீடாக 40 ஆயிரம் வந்திருக்கிறது. ஆகவே இன்றுள்ள மதிப்பீட்டின்படி அந்த ஊர்ப் பொது மக்கள் இதில் பாதியைக் கட்டவேண்டும் என்று மேற்கொண்டும் பணம் கட்டும்படியாகச் சொல்லக் கூடாது. அவர்கள் ஏற்கெனவே கட்டியுள்ள 6,050 ரூபாய் சர்க்காரிடம் கடந்த பத்து வருஷங்களாக இருக்கிறது. அதற்கு வட்டி என்று போட்டாலே இந்தப் பத்து ஆண்டுகளில் அது பத்தாயிரமாக இருக்கும். ஆகவே மேற்கொண்டும் அந்த ஊர் மக்களிடம் பணம் கேட்காமல் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மாமண்டூர் ஏரியின் சர்ப்பளஸ் கோர்சில் இன்னொரு கால்வாய் வெட்டுவதற்கும் திட்டமிடப்பட்டது. அதற்கு அணைக்கட்ட ஆகும் செலவில் பொதுமக்களுடைய பங்குத்தொகையை வசூலித்துக் கட்டிவிட்டார்கள். முன்னாள் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், ஆளும் கட்சியைச் சேர்ந்த பிரதம கொரடாவும் எனது நண்பருமாகிய திரு. ராமச்சந்திரன் அவர்கள் மூலமாக இது விஷயமாய் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு இருந்தாலும் நடைமுறைக்கு வரவில்லை, அதையும் விரைவில் முடித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து காகணம் என்ற இடத்தில் பாசனத்திற்கு ஒரு குண்டம் கட்ட வேண்டுமென்று பலநாட்களாகக் கேட்கப்பட்டு வருகிறது. அந்த குண்டத்தையும் கட்டி முடிக்காத குறையை நீக்கி, அதைக்கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்கள் பகுதியில் பாலாற்றில் இருந்து வருகிற தூசிக்கால்வாய் பலகாலமாக மேடிட்டு இருந்தது. அதை எடுத்து நாங்கள் சொன்னோம்; அதன்பேரில் சூபரின்டெண்டிங் எஞ்சினீயர் அவர்கள் வந்து பார்த்து அதைச் செப்பனிட்ட காரணத்தினால்—ஐம்பது ஆண்டு காலமாக ஓடிப் பார்த்திராத அந்தக் கால்வாயில் இன்று தண்ணீர் ஓடி ஏரிகள் நிரம்பியிருக்கிற காட்சியை நாங்கள் பார்த்து மகிழ்கிறோம். அதற்காக



19th March 1965] [புலவர் கா. கோவிந்தன்]

கனம் அமைச்சர் அவர்களுக்கும், தலைமைப் பொறியாளருக்கும், மற்றவர்களுக்கும் நன்றியைக் கூறி, எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. டி. பி. ஏழுமலை :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நீர்ப்பாசன வசதி அதிகம் வேண்டும்; ஏன் வேண்டும் என்று பலர் கேட்கிற இந்த மானியத்தை, இருந்த நீர்ப்பாசன வசதியையும் இழந்துவிட்ட நிலையில் இருக்கிற நான் சர்க்கார் மானியத்தை ஆதரித்து என் அபிப்பிராயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியும், கனம் ஆர். கோவிந்தராஜுலு நாயுடு தொகுதியும் சேர்ந்து ஏழாயிரம் ஏக்கரா நஞ்சை நிலத்தை—சென்னைவாசிகளுடைய குடிதண்ணீர் வசதிக்காக புஞ்சை நிலம் ஆக்கிவிட்டார்கள். அந்த நிலையில் மக்களுக்கு மிகவும் உற்சாகம் குறைந்திருக்கிற அந்தப் பகுதி மக்களுக்கு மாற்று திட்டம் ஏதாவது அமைத்துக்கொடுப்பதோடு பாக்கியுள்ள நிலத்திற்காவது தட்டாமல் நீர்வசதியை செய்து கொடுக்க இந்த அரசாங்கம் கடமைப்பட்டு இருக்கிறது. கனம் அமைச்சர் அவர்கள் கடமைப்பட்டு இருக்கிறார்கள் என்பதை மிக்க பணிவோடும், வேதனையோடும் தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் ஏழாயிரம் ஏக்கரா பாசன வசதியை இழந்திருக்கிற நிலையில் அந்த பகுதி மக்களுடைய மன நிலை எப்படி இருக்கும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். பலருக்கு இன்றையதினம் விவசாயத்தில் ஆர்வமே கிடையாது. இதுவரையில் அந்தப் பகுதியில் விவசாயத்திற்கு மிகவும் பயன்பட்டு வந்தது இரண்டே இரண்டுஏரிகள்தான். ஒன்று புழலேரி. மற்றொன்று சோழவரம் ஏரி. அதை விட்டால் வேறு பெரிய ஏரி கிடையாது. குழாய்க் கிணறுகள் போட்டால் நல்ல ஜலம் கிடைக்கிறது. ஆகவே உடனடியாக அந்தப் பகுதியில் குழாய்க் கிணறுகளை போட்டுக் கொடுத்தாவது அந்த பகுதி மக்களை ஆதரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். சென்ற மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அந்தப் பகுதியில் அதிகமாகக் குழாய்க் கிணறுகள் போட்டுக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படும் என்று சொல்லப்பட்டு இருந்தது. ஆனால் எந்தவிதமான முயற்சியும் எடுக்கப்படவில்லை. இந்த வருஷத்திலாவது அந்தப் பகுதியில் குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுக்கவேண்டும் என்பதாக கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடத்தலையாறு ஆற்றில் நாகபாளையம் என்ற இடத்திலே அணைகட்டித் தரவேண்டுமென்று போன சட்டமன்றத்திலேயே பேசி இருக்கிறேன். அதன் பிறகு அதிகாரிகள் வந்து பரிசீலனை செய்தார்கள். ஆனால் இதுவரையில் எந்த ஏற்பாடும் செய்யவில்லை. அவசியம் நாகபாளையம் என்ற இடத்தில் அணை கட்டிக் கொடுத்து அந்தப் பகுதி மக்களை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டும் அல்ல. ஆரணி ஆற்றிலே வருகிற ஜலம் வீணாகக் கடலில் போய்ச் சேர்ந்துவிடுகிறது. அதைப்பற்றியும் ஒரு அங்கத்தினர் குறிப்பிட்டார். அந்த நீரைத் தடுத்துத் தேக்கினால் அந்தப் பகுதியில் விவசாயத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள முடியும். அதற்கும் ஏற்பாடு செய்து அந்தப் பகுதி மக்களை ஆதரிக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு தேசத்தின் பொருளாதாரம் அதிகரிக்கவேண்டுமென்றால் வாணிபத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. வாணிபம் நல்லமுறையில் நடைபெறவேண்டுமென்றால் போக்குவரத்து வசதிகள் நல்லமுறையில் இருக்கவேண்டும். போக்குவரத்துக்கு மிகவும் அடிப்படையாக இருப்பது நல்ல ரோடுகள்தான். நான் பலமுறையும் சொல்லி வந்திருக்கிறேன். பொன்னேரி தாலூகாவில் மெதூர் கிராமத்திலிருந்து தேவம்பட்டு கிராமம் வரையில் ரோடு போடவேண்டும். மேலும் பொன்னேரி ரயில் நிலையத்தின் சமீபத்திலிருந்து ரெட்டிப்பாளையம் கிராமம் வரை; தவிர, திருப்பாலை கிராமத்திலிருந்து கள்ளூர் கிராமம் வரை ரோடு போடவேண்டும். இந்த ரோடுகளைப் பஞ்சாயத்துக்கள் போட முடியாது. காரணம் வருமானம் இல்லாத பஞ்சாயத்துக்கள். ஆகவே சர்க்காரே இந்த ரோடுகளை ஹைவேஸ் இலாகா மூலமாகப் போட்டுத்தரவேண்டும்.

அடுத்து சென்னையில் இருந்து பல மைல்கள் தூரம் பக்கிங்ஹாம் கால்வாய் போகிறது. போக்கு வரத்து நெருக்கடியைக் குறைக்க இந்தக் கால்வாயில் ஸ்டீம் போட்டுகள் போட்டு போக்கு வரத்து நெரிசலைக் குறைக்கலாம் என்று முன்பே கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் பற்றியும் கவனித்து இந்த ஆண்டு ஆவன செய்ய வேண்டும் என்பதாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கொண்டு சொல்வதற்குப் பல விஷயங்கள் இருக்கின்றன. என்றாலும், உதவி சபாநாயகர் மணி அடிப்பதற்குள்ளாக முடித்துக்கொண்டு விட வேண்டும் என்பதனால் இத்துடன் என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*** திரு. கோ. சி. மணி :** மாமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் எங்கள் தரப்பில் கொடுக்கப்பட்டுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து நான் இந்த மானியக் கோரிக்கையின் மீது நடைபெறுகிற விவாதத்தில் இரண்டொன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக மனிதர்கள் வாழ வேண்டுமென்றால் குடிக்கத் தண்ணீர் வசதியும், சுவாசிக்கக் காற்றும், உண்ண உணவும்தான் முக்கியமான தேவை என்பதை ஒவ்வொரு தரப்பினரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டும். உணவு தேவை என்றால்—உணவு உற்பத்தியைப் பெருக்குகின்ற விவசாயம் வளர்ச்சி அடைய வேண்டும். இந்த நாட்டில் விவசாயம் வளர்ச்சி அடைய வேண்டுமென்றால் அதற்கு மூலாதாரம் நீர்ப்பாசனம். நீர்ப்பாசனத் திட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்றால் முக்கியத் தேவை பணம். இன்றைக்கு நீர்ப்பாசனத் துறையை நிர்வகித்து வருகிறவர் எல்லா வசதிகளையும் ஒன்று திரட்டும் ஆற்றலுடையவர் என்று நாங்கள் கருதுகிறோம். அறிக்கையும் அந்த நம்பிக்கையை ஊட்டுகிறது. என்னைப் பொறுத்த வரையில் சென்ற முறை இந்த மாமன்றத்தில் பேசியபோது குறிப்பிட்டேன். தஞ்சை மாவட்டத்தில் பதினைந்து ஆண்டு காலமாக சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களிலே கவனம் செலுத்தாமல் விட்டுவிட்டீர்களே என்று கேட்டேன். உண்மைதான். அண்டை மாவட்டங்களில் பெரிய பெரிய திட்டங்களில் கவனம் செலுத்திக் கொண்டிருப்பதால் சிறிய பாசனத் திட்டங்களைப் பொறுத்தவரையில்
12-00 noon. தஞ்சை மாவட்டத்தில் சிறிதும் கவனம் செலுத்தாமல் இருந்துவிட்டோம் என்று குறிப்பிட்டார்கள். அவர்கள் அதிக விரைவில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறோம் என்பதையும் இந்த மன்றத்தில் சொன்னார்கள். இந்த முறை அவர்கள் நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் மீது வைத்திருக்கிற கருத்துக்களில், சிறு பாசனத் திட்டத்தின்கீழ் எட்டுக் கோடி ரூபாய் செலவழிக்க இருக்கிறோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலும் ரூ. 15 லட்சத்திற்கு மேற்படாத தொகையுள்ள வேலைகளை இந்தச் சிறு பாசன வேலைகளின் திட்டத்துக்குள் ஒதுக்கப்படும் என்று புள்ளி விவரம் தந்திருக்கிறார்கள். அதைக் குறித்து நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். நான் பணிவன்போடு ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். செய்ய வேண்டிய வேலைகளைச் செய்யத்தான் இருக்கிறீர்கள். அதைச் சீக்கிரமாகச் செய்யுங்கள்; காலத்தோடு செய்யுங்கள். குறிப்பாக புள்ளி விவரங்கள் தயாரிக்க ஆரம்பிக்கின்ற நேரத்திலே நீங்கள் காண்பிக்கின்ற வேகம் எவ்வளவோ, அந்த அளவு வேகத்தைச் செயலிலும் காட்டுங்கள் நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதற்காக ஏட்டிலே எழுதுவதற்கு எவ்வளவு தூரம் அக்கறையும், சுறுசுறுப்பும் காண்பிக்கிறீர்களோ, அதே சுறுசுறுப்பையும், வேகத்தையும், அக்கறையையும் நடைமுறையிலும் காட்ட வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாவட்ட தலைமை அலுவலகத்தில் சுறுசுறுப்பாக வேலைகள் நடைபெறுகின்ற நேரத்திலே, மாநிலத் தலைமையகத்தில் வேலைகள் சுறுசுறுப்பாக நடைபெறுவது இல்லை. மாநிலத் தலைமையகத்தில் சுறுசுறுப்பாக இருக்கும்போது மாவட்டத் தலைமையகத்தில் சுறுசுறுப்பாக இருப்பதில் தவறிவிடுகிறார்கள். ஏதாவது சிறப்பாகச் சொல்ல வேண்டுமானால், ஒரு எஸ்டிமேட்டை மாவட்ட சூப்பிரெண்டெண்டிங் எஞ்ஜினீயர் அங்கேயிருந்து அனுப்பினால், அது மாநிலத் தலைமையகத்தில் காலதாமதம் ஏற்படுகிறது. மாநிலத் தலைமை அலுவலகத்தில் நாம் வந்து அதிகாரிகளிடம் சொல்லி தூண்டச் செய்யவேண்டுமென்றால், அங்கிருந்து வருவதற்கு காலதாமதம் ஆகிறது. இப்படிப்பட்ட குறைபாடுகள் தஞ்சை மாவட்டத்திலே ஏற்பட்டதால் அங்கு கோடைக் காலத்தில் செய்யப்பட வேண்டிய வேலைகள் செய்யப்படாமல் போகின்றன. உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமானால், என்னுடைய தொகுதியிலே வெண்ணூரில் பழவாறு என்று ஒரு ஆறு ஓடுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பெரு மழை பெய்ததின் காரணமாக அந்த ஆற்றின் கரைக்குச் சேதம் ஏற்பட்டு சுத்தமாக உடைந்தே போயிற்று. அதை சூப்பிரென்டெண்டிங் என்ஜினீயர் மற்றும் எக்ஸிக்யூடிவ் என்ஜினீயர் முதலியவர்கள் வந்து பார்த்து எஸ்டிமேட் போட்டு தற்காலிகமாக ஒரு ஏற்பாடு செய்தார்கள். அங்கே இப்பொழுது நிலைமை எப்படியிருக்கிறது என்று பார்த்தால், பாதிக் கிணறு தாண்டிய கதையாக இருக்கிறது. அதாவது ஒரு பாதிதான் அடைத்து இருக்கிறார்கள். மற்றொரு பாதி அடைக்கப்படாமல் இருக்கிறது. அடைக்கப்பட்ட பகுதியும் பாதிக்கப்பட்டு அழியக்கூடிய நிலையில் இருக்கிறது. ஆகவே, உடனடியாக, இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, பாசனத்திற்காக மொத்தம் ரூ. 17,57,20,900 ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலே மூலதனம் என்பதன்கீழ் ரூ. 10,98,99,600 ஒதுக்கப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையில் நான் பணிவன்போடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த வேலைகள் எல்லாம் அவசியமாகவும், அவசரமாகவும் செய்யப்பட வேண்டிய வேலைகள். ஆகவே மூலதனத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை போதாது. அது யானைப் பசிக்குச் சோளப் பொறி என்ற கதையாகத்தான் இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த வேலைகள் எல்லாம் வருவாயை எதிர்பார்த்து, வளத்தை எதிர்பார்த்துச் செய்யப்படுகிற திட்டங்கள். ஆகவே சீக்கிரமாகச் செய்யப்பட்டால்தான் வருவாயும் இருக்கும், வளமும் இருக்கும்.

அடுத்தபடியாக, ரெவின்யூ இலாகாவுக்கும், நீர்ப்பாசன இலாகாவுக்கும் உள்ள தொடர்பு பற்றிச் சொல்லித் தீரவேண்டும். அமைச்சர் அவர்கள் இந்த இரண்டு இலாகாக்களையும் வைத்திருக்கிறார்கள். உதாரணமாக, ஒரு என்க்ரோச்மென்ட் செய்ய வேண்டுமென்றால், அதாவது ஒரு ஆற்றின் கரையிலிருந்து எவிக்ஷன் செய்ய வேண்டுமென்றால், பி.டபிள்யூ.டி. இலாகாவினர் ரெவின்யூ இலாகாக் கர்ணங்களிடமிருந்து கணக்குகளைப் பெற வேண்டியிருக்கிறது. அப்பொழுது அந்த இலாகாவினர் இந்த இலாகாவினரிடம் படும் தொல்லைக்கு அளவே இல்லை. கீழ்மட்டத்தில் இந்தத் தொல்லைகள் மிகவும் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இந்த இரண்டு இலாகாக்களும் விருவிருப்பாக, சுறுசுறுப்பாகச் செயல்படக்கூடிய அளவிலே அமைச்சர் அவர்கள் ஆக்கத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*** திரு. ஏடி. ஏ. பி. சவுந்திரவேல் சேர்வை :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இன்று நீர்ப்பாசன மானியக் கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்று நீர்ப்பாசன திட்டங்களைப் பொறுத்தவறையில் தமிழ்நாட்டிலே நல்ல முன்னேற்றத்தைக் கண்டிருக்கிறோம். பல அணைகளைக் கட்டியிருக்கிறோம். இலட்சக்கணக்கான நஞ்சை நிலங்களில் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு நல்ல முயற்சிகளை எடுத்திருக்கிறோம்.

குறிப்பாக, சிறு பாசனத் திட்டம் என்ற வகையிலே இப்பொழுது நடைமுறையிலே வேலைகள் எல்லாம் நடந்துமுடிந்துவிட்டன. இருந்தாலும் அந்த வேலைகளெல்லாம் திருப்திகரமாக நடந்திருக்கின்றன என்று நான் சொல்வதற்கில்லை. சிறு பாசனத் திட்டத்தில் பல இடங்களில் பல பிரிவுகள் பிரிக்கப்பட்டு அஸிஸ்டெண்ட் என்ஜினீயர்களைப் போட்டு

பல சிறு குளங்களை எல்லாம் பராமரித்து வருகிறோம். ஆனால் இதுவரையில் செய்யப்பட்ட சிறு குளங்கள் மராமத்து வேலைகள் முடிந்துவிட்டாலும் திரும்பவும் அவைகளை மராமத்துச் செய்ய வேண்டுமென்ற நிலையில்தான் இருக்கின்றன. அத்தனையும் அந்த நிலையில்தான் இருக்கின்றன. இதை சர்க்கார் மறுபடியும் பரிசீலனை செய்து, இந்தச் சிறு பாசனத் திட்டத்தின் கீழ் இயங்குகின்ற வேலைகளை எல்லாம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, பல சிறு சிறு குளங்களில் தண்ணீரைக் கொண்டுபோய்ப் பெருக்குவதைக் காட்டிலும், ஒரே இடத்தில் ஒரு பெரிய குளமாக வெட்டி. அங்கு கொண்டு போய்த் தண்ணீரைப் பெருக்கி அதன் மூலம் அங்குள்ள ஆயக்கட்டுகளுக்கு தண்ணீர் கிடைக்கச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆற்று ஓரங்களிலே சிறு சிறு கிணறுகள் வைத்து, நிறைய ஏழை விவசாயிகள் விவசாயம் செய்து வருகிறார்கள். ஆற்றுக் கரைகளிலே இருக்கும் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுப்பதற்கு பி.டபிள்யூ. டி. என்ஜினீயர்கள் அனுமதி தர மறுக்கிறார்கள்; தண்ணீர் எடுப்பதை தடுத்து நிறுத்திவிடுகிறார்கள். அதனால் உணவு உற்பத்தியாகக் கூடிய நிலங்கள் அனைத்தும் பாதிக்கப்படுகிறது. அந்தக் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுக்க இயலவில்லை. இதைப் பற்றித் தண்ணீர் எடுத்துக்கொள்ளலாம் என்று ஒரு ஜி.ஓ. போடப்பட்டு இருப்பதாகத் தெரிகிறது. அப்படிப் போடப்பட்டிருந்தால் அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்களுடைய மதுரை ஜில்லாவில் கொட்டகுடி என்று ஒரு ஆறு ஓடுகிறது. இது பல வருஷங்களாகப் பெரிய ஆறாக ஓடிக் கொண்டிருக்கிறது. அதில் சிறிய சிறிய ஆறுகள் வந்து சேர்ந்துகொண்டிருக்கின்றன. இதைப் பற்றி அமைச்சர் அவர்களுக்கும், என்ஜினீயரிங் இலாகாவிற்கும் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் எந்த விதமான நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. ஆகவே, இந்த கொட்டகுடி ஆற்றிலே ஒரு சிறு அணை கட்டி 20 குளங்களுக்குக் கிடைக்கும் தண்ணீரை அந்த அணையில் நிறுத்தி வைத்து அங்குள்ள ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீரைக் கொடுக்கலாம். வைகையில் தண்ணீர் இல்லாத சமயங்களில் அங்கிருந்து தண்ணீர் எடுத்துச் செல்வதற்கும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த ரோடு மராமத்தைப் பொறுத்த வரையிலே எங்களுடைய ஜில்லாவிலே தேவாரத்திலிருந்து சாக்குலுத்தம்பெட்டு வரை ரோடு போடுவதற்கு ஏற்கெனவே திட்டம் போடப்பட்டது. ஆனால் அது நடைமுறைக்கு வரவில்லை. அதை அமைச்சர் அவர்கள் நான்காவது திட்டத்தில் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, போடியிலிருந்து அகமலை வரை ரோடு போடவேண்டுமென்று மூன்றாவது திட்டத்திலேயே அது சேர்க்கப்பட்டிருக்கிறது. அந்த வேலை இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. அதையும் நான்காவது திட்டத்தில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அகமலையில் ஆதிவாசிகள் வாழ்கின்றார்கள். அவர்கள், காஃபி, வாழை, இலவு பயிரிடும் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்கு உதவியாக இருக்கின்ற வகையிலே இதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

அடுத்தபடியாக, குளத்திலும், பெரியாற்றுப் பாசனத்திலே தெண்டந் தீர்வை என் தொகுதியில் போடப்பட்டு வருகிறது. அங்குள்ளவர்களுக்குத் தெண்டந் தீர்வை விதிக்காது, அவர்களுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. என். துரைபாண்டி: தலைவர் அவர்களே, மந்திரியவர்கள் கொண்டு வந்திருக்கும் மானியக் கோரிக்கைகளை ஆதரித்து சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். பருவ மழை தவறியதன் காரணமாக





எனது தொகுதியில் குறிப்பாக நாங்குநேரி தாலூகாவில் பட்டினி ஓடிக் கொண்டு வருகிறது என்பதை மறுக்க முடியாது. பொதுவாக எங்கள் தாலூகாவில் உள்ள நான்கு குளங்கள் நிரம்பிவிட்டால் பஞ்சம் இருக்காது. வள்ளியூர் குளம், திருக்குறுங்குடி குளம், வீரநாராயண குளம், நாங்குநேரி குளம் என்று நான்கு குளங்கள் இருக்கின்றன. மண்ணரிப்பின் காரணமாக திருக்குறுங்குடி குளம், வள்ளியூர் குளம் ஆகிய இரண்டிலும் மண் மேடிட்டு விட்டது. பஞ்ச நிவாரண வேலையாக இந்த இரண்டு குளங்களையும் ஆழப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மணிமுத்தாறோடு சேர்ந்திருக்கிற வீரநாராயண குளத்தின் கரை சரியாக இல்லாததால் மழை பெய்யும் காலத்திலே தண்ணீரைத் தேக்கி வைக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்தக் குளத்தின் கரையைக் கல்லால் கட்டிப் பலப்படுத்த வேண்டும். "நல்லக்கண்" என்ற பெயருடைய ஒருவனைக் கிட்டே நெருங்கிப் பார்த்தால் அவன் குருடனாக இருப்பான். அதே போன்று நாங்குநேரி என்ற கண்மாய் இருக்கிறது. நாங்குநேரி குளத்திற்கு மணிமுத்தாறால் எந்தவித பிரயோசனமும் இல்லை. அந்தக் குளத்திற்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக டில்லி நிதியமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அவர்களும், நமது அமைச்சர் அவர்களும் அந்தப் பகுதியில் சுற்றிப் பார்த்து பச்சையாற்றிலிருந்து அதற்குத் தண்ணீர் கொண்டு வர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று முடிவு செய்தார்கள். அதற்கான பூர்வாங்க வேலைகளும் முடிந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். அது இதுவரை தொடங்கப்படவில்லை யென்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். இதை நான்காவது திட்டத்திலாவது சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ரோடுகளை எடுத்துக் கொண்டால், கன்னியாகுமரி ஜில்லாவையும் இராமநாதபுரம் ஜில்லாவையும் இணைக்கக்கூடிய வகையில் திருநெல்வேலி வழியாக கடற்கரை ஓரமாக ஒரு ரோட்டைப் புதிதாக அமைத்திருக்கிறார்கள். அந்த ரோட்டோடு உவரி, ஊட்டுப்பனை, குட்டம் ஆகியவற்றை இணைக்கும் வகையில் உவரி-குட்டம் ரோட்டை கடற்கரை ரோட்டுடன் இணைக்க வேண்டுமென்பதற்காக பேப்பர்கள்கூட எஞ்சினியர் அலுவலகத்திற்குப் பரிசீலனைக்கு வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இதை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும். மராமத்தை எடுத்துக் கொண்டால் பெரிய ரோடுகளில் எல்லாம் கல் எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த ரோட்டைப் போட மணல் இல்லையென்று சொல்கிறார்கள். தண்ணீர் வசதி இல்லாத இடங்களிலுள்ள பெரிய ரோடுகளில் எல்லாம் தார் போட்டு விட்டால் செலவு குறைவாகும். அதிக மெயின்டனன்ஸ் செலவு ஏற்படாது. தண்ணீர் இல்லாத இடங்களில் தார் ரோடு போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாய்க்கால் ஓரங்களிலும், ஆற்றங்கரை ஓரங்களிலும் உள்ள கிணறுகளில் பம்ப் செட் வைக்க அனுமதி இல்லையென்று இருந்தது. ஆனால் பத்திரிகையில் பார்க்கும்போது அனுமதி கொடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது. மணிமுத்தாறு நதி ஓரங்களில் உள்ள கிணறுகளில் பம்ப் செட் வைக்க வேண்டுமென்றால் அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. அ. தியாகராஜன்: மாமன்ற உதவி சபாநாயகர் அவர்களே, நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சிக்காரர்கள் கொடுத்துள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். எங்களுடைய புதுக்கோட்டைப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி என்பது அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அமைச்சர் அவர்கள் புதுக்கோட்டைப் பகுதியில் பிறந்து, அங்கே வளர்ந்து, படித்து, பட்டம் பெற்று, அங்கேயே தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கே இப்போது அமைச்சராக வீற்றிருக்கிறார்கள். அவர்கள் அமைச்சராக வந்ததற்குப் பிறகு எங்களுடைய பகுதி செழிப்பான பகுதியாக ஆகிவிடும் என்று நினைத்தோம். சென்ற தடவை மின்சார அமைச்சராக இருந்தார். இந்தத் தடவை அவர் நீர்ப்பாசனத்திற்கும், மராமத்துக்கும் அமைச்சராக இருக்கிற காரணத்தால் புதுக்கோட்டைப் பகுதிக்குக் காவிரி ஆற்று நீரைக் கொண்டு வர வேண்டுமென்று இங்கே பல முறை எடுத்துச் சொன்னதைக் கேட்டு

அதற்கான வழிவகைகளைக் காணுவார் என்று எதிர்பார்த்தோம். அதற்கான ஒரு திட்டத்தைப் பல லட்சம் ரூபாய் செலவில் தயாரித்திருப்பதாகவும் அறிகிறேன். ஆனால் இன்னும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. தயவு செய்து உங்களுடைய பகுதியாகிய புதுக்கோட்டைப் பகுதிக்குக் காவிரி ஆற்று நீரைக்கொண்டு வாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டையில் பல கண்மாய்கள் இருக்கின்றன. அவற்றை தூர் எடுத்து விரிவுபடுத்தும் திட்டம் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும் என்று அறிக்கையில் காணப்படுகிறது. அந்தக் கண்மாய்கள் எல்லாம் தூர் எடுக்கப்படாத நிலையிலேதான் இருக்கின்றன என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். புதுக்கோட்டையில் ஒவ்வொரு கண்மாயிலும் எவ்வளவு வரத்து இருக்கிறது, அங்கிருந்து எந்தெந்த ஆயக்கட்டுகளுக்குத் தண்ணீர் போகவேண்டும் என்பதற்காக "சி" ரிஜிஸ்டர் மெயின்டெயின் செய்யப்படுகிறது. அதன் காரணமாக எல்லா ஆயக்கட்டுகளிலும் தண்ணீர் தகராறு இல்லாமல் கிடைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் "சி" ரிஜிஸ்டர் இருந்த போதிலும் கூட என்னுடைய கிராமத்திலே என்னுடைய வயலுக்கே தண்ணீர் வருவது தகராறு ஆகிவிட்டது. "சி" ரிஜிஸ்டர் காப்பியைக் கலெக்டர் அவர்களிடத்தில் கொடுத்தும் கூட தண்ணீர் முறை கொடுக்க மறுக்கிறார்கள். நல்ல முறையில் இதைப்பற்றிப் பரிசீலித்துப் பார்த்து புதுக்கோட்டையில் உள்ள விவசாயிகளுக்கு "சி" ரிஜிஸ்டர்படி தண்ணீர் கொடுக்கும் முறைப் பிரகாரம் தண்ணீர் விட ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சிக்குப் பல சாலைகளைப் போடுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். சூரியூர் சாலையை மேம்படுத்துவது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். களமாவூரிலிருந்து விராலிமலை செல்லும் பாதையில் கோரையாறு குறுக்கிடுகிறது. அங்கே ஒரு பாலம் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

***திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம் மராமத்து இலாக்கா அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பாசன வசதி சம்பந்தப்பட்டமட்டில் நம் அரசாங்கம் நல்ல முறையில் பணியாற்றி வருகிறது. ஆனால் சில இடங்களில் பராமுகமாக இருப்பதால் அங்குள்ள மக்கள் வேதனைப்படுகிறார்கள். நிலக்கோட்டை தாலூகா திருமங்கலம் கால்வாயிலிருந்து— 10,000 ஏக்கர் ஏற்கெனவே எக்ரிமெண்ட் எல்லாம் இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன்—இப்போது கிட்டத்தட்ட 15,000 ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அங்கு போவது பற்றி நான் தடை சொல்லவில்லை. நிலக்கோட்டைப் பகுதியில் குருவித்துறை, மன்னாடிமங்கலம், காடுபட்டி, விக்ரமங்கலம் இந்த மாதிரி ஊர்களில் உள்ளவர்கள், முக்குலத்தோர்கள் தங்கள் நிலத்தைக் கொடுத்துவிட்டு நஞ்சை, புஞ்சை விவசாயம் செய்ய முடியாத நிலை இருக்கிறது. லைனிங் வேலை எல்லாம் முடிந்தாகி விட்டது. ஆகவே உபரித் தண்ணீரிலிருந்து ஒரு ஆயிரம் ஏக்கருக்கு இந்தப் பகுதி மக்களுக்குப் பாசன வசதி செய்து கொடுத்தால் நிச்சயமாக இந்தப் பகுதி மக்களின் வாழ்க்கைத்தரம் உயருவதோடு உணவு உற்பத்தியும் பெருகுவதற்குள்ள சூழ்நிலை அமையும். தனிச்சியம் என்ற பகுதியில் இந்த ஆறு வந்ததில் இருந்து அந்த ஊர் உற்பத்தியானதில் இருந்து அங்குள்ள மக்கள் இரண்டு போகம் சாகுபடி செய்து வருகிறார்கள். ரிக்கார்ட் பிரகாரம் இல்லாமல் செய்கிறார்கள். அப்படி அவர்கள் பாசன வசதி செய்து கொண்டுவரக் கூடிய சூழ்நிலையில் சில சமயங்களில் அவர்களுக்குப் பிந்தி தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படி அவர்கள் இரு போக சாகுபடி செய்வதால், அதை இரு போக சாகுபடியாக மாற்றி, காலாகாலத்தில் தண்ணீர் கொடுத்தால் உணவு உற்பத்தியைப் பெருக்க வாய்ப்பாக இருக்கும். குடகனாறு ஸ்கீம் கிட்டத்தட்ட ஒரு லட்சம் செலவில் முடிந்தாகி





விட்டது. அப்படி முடிந்தும் கூட கால்வாயில் தண்ணீர் வர முடியாத நிலை இருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் அதை மறு பரிசீலனை செய்து போட்ட திட்டத்தை நல்ல முறையில் வெற்றிகரமாக நடத்த அந்தக் கால்வாயில் தண்ணீர் வரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். நிலக்கோட்டை தாலுகாவில், வடகரை கண்மாய்க்கு போடிநாயக்கன்பட்டி மெயின் கனல் வழியாக மழைத் தண்ணீர் போகும். அந்த வழியைத் தனிப்பட்டவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டபடியால் வாய்க்காலில் போகும் தண்ணீர் கண்மாயில் போய் விழாமல் அப்படியே நிலத்தின் பகுதியில் திரும்பி விடுகின்றது. அம்மாதிரி நிலத்தில் திரும்பி விடும் தண்ணீரானது, நாச்சிகுளம், கருப்பட்டி கரட்டுப்பட்டி ஆகிய சிறிய நிலச்சுவான்தார்களின் நிலங்கள், 300 ஏக்கரில் விவசாயம் செய்து அறுவடை ஆகும் சமயத்தில் தண்ணீரால் மூழ்கடித்துவிடப் படுகிறது. ஆகவே, அதையும் பரிசீலனை செய்து அந்தக் கால்வாயை அகலப்படுத்தி வேண்டிய உதவிகளை செய்ய வேண்டும். இன்று பாலமேடு பகுதியில் சாத்தியாறு திட்டம் நிறைவேறிக் கொண்டிருக்கிறது. மஞ்சமா நதி திட்டமும், பழனியாண்டவர் ஓடை ஸ்கீமும், இன்னும் சாங்க்ஷனாகவில்லை. ஆகவே, அத்திட்டங்களை சீக்கிரம் சாங்க்ஷன் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிறுமலையைச் சுற்றிலும் பல காட்டாறுகள் ஓடுகின்றன. அதனால் மழை பெய்தால் அந்தப் பகுதி மக்களுக்கு, சிறு சிறு விவசாயிகளுக்கு மிகவும் பாதகம் ஏற்படுகிறது. நிலத்தில் மண் அடிப்பதும், கரைகளை உடைத்துப் போவதுமாக இருக்கிறது. ரெயில் விபத்து ஏற்படும்போது அன்னசமுத்திரம் கண்மாய் உடைந்திருக்கிறது. ஆகவே சிறு சிறு காட்டாறுகளைத் தடுத்து அணைக்கட்டுகள் கட்டினால் உணவு உற்பத்தி பெருகுவதற்குள்ள நல்ல சூழ்நிலை ஏற்படும். பெரியாறு ராஜா வாய்க்கால் போகும் பகுதியில் இது வருவதற்கு முன்பு கிணறு வெட்டியவர்களுக்குப் பம்ப் செட்ஸ் வைத்துப் பாசன வசதி இல்லாத சமயம் விவசாயம் செய்ய வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ரெங்கப்பநாயக்கன்பட்டி—ராமய நாயக்கன்பட்டி இரண்டையும் இணைக்கும் வகையில் வைகை நதிக்குக் குறுக்கே ஒரு பாலம் கட்டிக் கொடுக்க வேண்டும். இப்போது அங்கு போக்குவரத்துக்குத் தடை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதை நல்ல முறையில் செய்து கொடுக்க வேண்டும். நிலக்கோட்டை சோழவந்தான் ரோடு இருக்கிறது. அதில் ஓர் ஆயிரம் வளைசல்கள் இருக்கின்றன. ரோடு குறுகிக் கொண்டே இருக்கிறது. அதை வொய்டன் செய்ய வேண்டும். பல பகுதிகளில் எங்கள் தாலுகாவில் ஹைவேஸினால் எடுக்கப்பட்டிருக்கிற ரோடுகள் மோசமாக இருக்கின்றன. அவற்றை உடனடி செப்பனிட்டுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. வீ. ராமநாதன் :** கனம் சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, உணவு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கும் பொதுப்பணித் துறை மான்யக் கோரிக்கையை ஆதரித்து என் கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். பொதுப்பணித் துறையைப் பொறுத்தமட்டில் இந்தியாவில் பல துறைகளில் நம் மாநிலம் முன்னோடியாக இருப்பது போல் பொதுப்பணித் துறையும் முன்னோடியாக இருப்பது கண்டு பொதுப்பணித் துறை அலுவலாளர்களுக்கும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சாலைகளைப் பொறுத்த மட்டில் என் தொகுதி பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். திருச்சியிலிருந்து கரூர் செல்கிற சாலை குறுகலாக இருப்பதால் அங்கு நிறைய விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே அந்த ரோடை அகலப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சியிலிருந்து கரூர் செல்லும் சாலையில் மணவாசியிலிருந்து திருச்சி போகிறபோது "மங்கம்மா சாலை" என்ற பழைய சாலை ஒன்று இருக்கிறது. அங்கு ரோடு போட எஸ்டிமேட் எல்லாம் தயாராக இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். அந்த மங்கம்மா சாலையை விரைவில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதனால் மங்கம்மா சாலையில் நிறைய விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பதோடு கூட பேட்டவாய்த்தலை ஷுகர் பாக்டரிக்கும் அது வசதியாக இருக்கும். கரூரிலிருந்து குளித்தலை ம்பாரை

வழியாக திண்டுக்கல் போகும் பாதை திருச்சி லிமிட் தாண்டி மதுரை லிமிட்டிற்குச் சென்றால் அங்கு பல ஓடைகள், ஆறுகள் குறுக்கே செல்கின்றன. அந்த ஓடைகளுக்கெல்லாம் பாலம் இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. ஆகவே கரூரில் இருந்து திண்டுக்கல் செல்கிற ரோடின் இடையில் உள்ள ஆறுகளில் எல்லாம் அவசியம் பாலம் கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நீர்ப்பாசனத் துறை பற்றி அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிற அறிக்கையில் பல திட்டங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன. குளித்தலை தொகுதிக்கு, எங்கள் பகுதிக்கு மிகவும் தேவையான குடகனாறுத் திட்டம் இதில் இல்லை என்று பார்க்கும்போது நான் உண்மையில் வேதனையடைகிறேன். அந்தத் திட்டம் பல ஆண்டு காலமாக அப்பகுதிமக்களால் கேட்டுக் கொள்ளப்பட்டு வருகிறது. ஆகவே அத்திட்டத்தை விரைவில் நிறைவேற்றித் தருமாறு இந்த சந்தர்ப்பத்தில் நான் அமைச்சர் அவர்களைப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். குடகனாறுத் திட்டம் எல்லாம் பரிசீலனை செய்யப்பட்டு முடிவு செய்யப்பட்டு அதன் வருவாய் மிகவும் குறைவு என்பதினால் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அப்படி வருமாய் குறைவாக இருந்தாலும் அந்தப் பகுதி மக்கள் பிற்பட்ட நிலையில் இருப்பதால் அதைச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். திருச்சி ஜில்லாவில் வெள்ளியணை பிர்க்கா, மதுரையில் பாளயம் பிர்க்கா இவ்விரண்டும் பிற்பட்ட நிலையில் இருப்பதால் எங்கள் பகுதியில் உள்ள மக்கள் எல்லோரும் வறுமைக் கொடுமை காரணமாக மைசூர் மாநிலத்திற்குக் குடியேற இருப்பதால் அந்தப் பகுதி மக்கள் வாழ்வு வளம் பெறவும் உணவு உற்பத்தியைப் பெருக்கவும் நிச்சயமாக அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

***திரு. எம். கொளந்தைசாமி கவுண்டர் :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, என் தொகுதி சேலம் ஏற்காடு. சேர்வராயன்மலை மலை ஜாதியினர் வாழும் இடம். அங்கு தண்ணீர் வசதி இல்லை என்ற காரணத்தினால் பம்ப் செட்ஸ் வைத்து குடி தண்ணீர் கொடுக்க வேண்டும். அங்கு டாங்கு கட்டி ஐந்து வருடங்களாகியும் கூட தண்ணீர் இல்லாமல் ஜனங்கள் ஓடை ஓடையாகப் போய் தண்ணீர் எடுத்து வருகிறார்கள் குடிப்பதற்கு. கலெக்டரை மீட்டிங்கில் கேட்டால் அப்போதுதான் அவர் என்ஜினியரைக் கேட்கிறார். அப்போது அவர்கள், இப்போதுதான் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். மீட்டிங் கழிந்து போனால் யாரும் கவனிப்பதில்லை. ஆக, ஏற்காட்டிற்குப் போனால் குடி தண்ணீர் இல்லையே என்று அவர்கள் என்னை ரொம்பவும் கஷ்டப் படுத்துகிறார்கள். பம்ப் செட்ஸ்க்கு சர்வீஸ் கொடுத்து ஜனங்களுக்கு குடி தண்ணீர் கொடுக்கவில்லை என்றால் அந்தக் கிராமத்தில் பஞ்சாயத்து இருக்கிறதா, யூனியன் இருக்கிறதா, என்ன வேலை செய்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆகவே அங்குள்ள மக்களுக்கு குடி தண்ணீர் வசதியை உடன் செய்து கொடுக்க வேண்டும். காடயாம்பட்டி டேனிஸ் பேட்டை பக்கத்தில் ரெயில்வே ஸ்டேஷன் பக்கத்தில் ஒரு ஆறு போகிறது. மழை வந்துவிட்டால் வடகம்பட்டியிலிருந்து ரெயிலுக்கு வருவது கஷ்டம். அப்படி கஷ்டப்பட்டு வருவதற்குள் ரெயில் போய்விடுகிறது. ரெயிலிலிருந்து இறங்கி மக்கள் வரவும் கஷ்டப்படுகிறார்கள். 1960-லேயே நான் கேட்டிருக்கிறேன். அங்கு ஒரு சிறிய பாலம் கட்டி தண்ணீர் அடியில் போகும்படி விட்டால் மாட்டு வண்டி போக முடியும். மக்களுக்கும் ரெயிலுக்கு வர வசதியாக இருக்கும். ஆகவே அந்தப் பாலத்தைக் கட்டித் தரவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு ஓமலூர் தொகுதியில் முதலமைச்சர் அவர்கள் வந்திருந்
12-30 p.m. தார்கள். அவர்கள் மட்டுமல்ல; மேலும் இரண்டு அமைச்சர்களும் வந்திருந்தார்கள். திரு. மஜீத் அவர்கள், பழையக்கோட்டை பட்டகார் அவர்கள், திரு. பக்தவத்சலம் அவர்கள் இப்படி மூன்று அமைச்சர்களும் எங்கள் தொகுதிக்கு வந்திருந்தார்கள். என் தொகுதி மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அங்கு ஒரு கோவாப்ரட்டிவ் சொஸைட்டியை திறந்து வைப்பதற்காக வந்திருந்தார்கள். அந்த இடத்தில் அங்குள்ள பொது மக்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு பெண் டாக்டர் வேண்டும் என்று



கேட்டுக்கொண்டார்கள். இதைப்பற்றி மூன்று வருடமாக சொல்லிக்கொண்டிருக்கிறேன். அமைச்சர் ஜோதி வெங்கடாசலம் அவர்களிடமும் சொன்னேன். இங்கேயும் இரண்டு தடவையாக சொல்லிக்கொண்டு வந்தேன், எங்கள் பக்கத்துக்கு ஒரு பெண் டாக்டர் வேண்டும் என்று. எங்கள் பக்கத்திலுள்ள மக்கள் எல்லாம் வந்து அமைச்சர்களிடமும் முறையிட்டார்கள். எப்படி ஒரு பெண், ஆண் டாக்டரிடத்தில் பிரசவத்திற்குப் போவது என்றெல்லாம் இருக்கின்ற கஷ்டத்தை சொன்னார்கள். இப்போது ஒரு பெண் டாக்டர் அங்கு வந்து விட்டார்கள். அங்குள்ள ஜனங்களுக்குப் பெரிய சந்தோஷம். அதைப்போல் ஓமலூர் தாலுகாவில் குடி தண்ணீரையும் கொடுத்துவிட்டால் நன்றாக இருக்கும். பனைமரத்துப் பட்டி ஏரியில் தண்ணீர் மிகவும் குறைவாக இருக்கிறது. இங்கிருந்து ராசிபுரத்துக்கு தண்ணீர் கொண்டு போவதற்கு பைப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். தண்ணீரை அதிகமாகக் கொண்டு வரவேண்டுமென்றால் பக்கத்திலுள்ள சல்லூத்து ஆற்றிலிருந்து புதூர் ஆற்றுக்குக் கொண்டுவரலாம். அது மூன்று பர்லாங் தூரம்தான் இருக்கும். அப்படித் தண்ணீரை கொண்டு வந்து விட்டால் பனைமரத்துப்பட்டி ஏரிக்கும் கஷ்டம் இருக்காது. ராசிபுரத்திற்கும் தண்ணீர் கொண்டு போகலாம், சேலத்திற்கும் தண்ணீர் கொண்டு போகலாம். ஆகவே இதில் சர்க்கார் தலையிட்டு, இதற்கு வேண்டிய கால்வாய்களை ஆழப்படுத்தி வெட்டி தண்ணீர் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. இரா. நெடுஞ்செழியன் :** மதிப்பிற்குரிய துணைத்தலைவர் அவர்
களே, நீர்ப்பாசனம் பற்றிய கோரிக்கைகளும் பொதுப்பணித்துறை பற்றிய
கோரிக்கைகளும் கனம் உணவு அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தின்
ஆய்வுக்காக வைக்கப்பட்டுள்ளன. அவற்றையொட்டி எதிர்க்கட்சித் தரப்
பினர் கொடுத்திருக்கின்ற வெட்டுப் பிரேரணைகளை ஆதரிக்கும் வகையில்
சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இம்மாநிலம் நீர்ப்பாசனத் துறையில் மேலும் மேலும் வளர வேண்டும்
என்ற நல்ல ஆர்வம் கொண்ட கனம் அமைச்சர் அவர்களையும் இந்த
துறையில் பணியாற்றுகின்ற எல்லா அதிகாரிகளையும் நான் பாராட்டு
கின்றேன். இந்த மாநிலத்தினுடைய நீர்ப்பாசனத் தேவைகள் எந்த
அளவிற்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன, எந்த அளவிற்கு நிறைவேற்ற
பட இருக்கின்றன என்பதைப் பற்றி எல்லாம் விளக்கம் கனம் அமைச்ச
அவர்களால் தரப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தில் கூறப்படும் ஆ
வுரைகள், கருத்துக்கள் எல்லாம் எதிர்காலத்தில் உருவான பலனை
கொடுக்கும் என்ற எண்ணத்தில் கருத்துக்கள் பலவற்றைக் கனம் உறு
பினர்கள் தெரிவித்துள்ளார்கள். கனம் அமைச்சர் அவர்கள் கொடு
திருக்கும் விளக்கவுரையில், இந்த மாநிலத்தில் இருக்கின்ற நீர்ப்பாச
வசதிகளை எல்லாம் நாம் உபயோகித்துக் கொண்டு விட்டோம், இனிமே
எடுக்கப்படுகின்ற முயற்சிகளெல்லாம் கடுமையானவையாகவே அமைந்திரு
கின்றன என்கின்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆறுகள் மூ
மாகவும், ஏரிகளின் மூலமாகவும், இனிமேல் தண்ணீர் பெறுவதற்கா
வாய்ப்புக் கூறுகள் இல்லை. பாசனத்திட்டத்தைப் பெருக்குவதற்கா
முறையில் பெரிய பெரிய அணைக்கட்டுகளையும் கட்டி, முடித்தாகிவிட்ட
மேலும் பாசன வசதிகளைப் பெருக்குவதற்கு வழிவகை செய்தல் வேண்டு
நீர்ப்பாசனத்தைப் பெருக்கி, அதன்மூலம் விளைவைப் பெருக்கி, அத
மூலம் உணவுப் பற்றாக்குறையை நீக்கி, இந்த மாநிலத்தில் இருக்கின்
பற்றாக்குறை நிலைமையைப் போக்கவேண்டும், அதற்கான முயற்சிகளில் அ
பெரிதும் ஈடுபடவேண்டும். துறைமுகங்களில் எல்லாம் உணவுக் கப்பல்க
வந்து நின்றவண்ணம் இருக்கின்றன. உணவுப்பொருட்களை ஏராளமா
அளவில் இறக்குமதி செய்கின்ற நிலைமையில், நாடு இருக்கிறது. ஏரா
மான அந்நிய செலாவணி இதற்காக செலவு செய்யப்படுகின்ற
ஆண்டுக்காண்டு நிலைமை கவலை தரும் வகையில் போய்க்கொண்டிரு
கிறது. இந்த நாட்டிலுள்ள வாய்ப்புக்கூறுகளையெல்லாம் உபயோகித்
விட்டோம் என்றாலும், மேலும் பாசன வசதி பெறுவதற்கான வழிகள்
முயற்சி எடுக்கிறோம் என்றாலும், கவலைத்தரக்கூடியக் நிலைமையைச் ச
மானவரை போக்குவதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அ

வகையில் சிறிய சிறிய நீர்ப்பாசன வசதிகளை இன்றும் பெருக்கவும்,
இருக்கின்ற நீர்ப்பாசனங்கள் மூலம் விளைவுகளைப் பெருக்கவும், வழிவகை
காணவேண்டிய அவசியத்தில் இருக்கிறோம்.

பாசனக் கோரிக்கைக்காக 6 கோடி 58 லட்சம் ரூபாயும், பாசன முத
லீட்டுக்காக 10 கோடி 99 லட்சம் ரூபாயும், ஆக 17 கோடி 57 லட்சம்
ரூபாய் செலவு செய்வதற்கான கோரிக்கையை அமைச்சர் அவர்கள் கேட்டி
ருக்கிறார்கள். இருக்கின்ற நீர்ப்பாசனத் திட்டங்களைச் செம்மைப்படுத்துவதின்
மூலமாகவும், தற்போதிருக்கின்ற பாசனத்திட்டங்களில் இருக்கின்ற குறை
பாடுகளை நீக்குவதின் மூலமாகவும், இதற்கான செலவினத்தைக் குறைப்
பதின் மூலமாகவும், கிடைக்கின்ற பயனைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்
வதின் மூலமாகவும், இந்த மாநிலத்திலுள்ள நீர்ப்பாசனங்கள் மூலமாக
எதிர்பார்க்கக்கூடிய பலனை நாம் விரிவுபடுத்த வேண்டிய நிலைமையில்
இருக்கிறோம்.

இந்த மாநிலத்தைப் பொறுத்தவரை, நீர்ப்பாசனத்தில் நிறைவேற்றக்
கூடிய அளவுக்கு வசதிகள் இருக்கின்றனவா என்பதைப் பற்றிக் குறிப்
பிடுகின்ற வகையில் அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில், கீழ்
நீரோட்டங்களைப் பயன்படுத்தி அதை வெளியே கொண்டுவருவதின் மூலமாக
நீர்ப்பாசனத்தைப் பெருக்க முடியும் என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.
நிலக்கூறு வல்லுனர்கள் கூறுகின்ற கருத்துக்களின் படி கீழ் நீரோட்டங்
களின் மூலம் பாசன வசதி பெறுவதற்கான வாய்ப்புகள் நமது மாநிலத்
தில் பல இடங்களில் அமைந்திருக்கின்றன. இந்தியாவில் இருக்கின்ற
மற்ற மாநிலங்களை விடவும், தென்னகத்தில் பாறைகளுக்கிடையில் இருந்து
தண்ணீர் பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அவைகளை
வெளியே கொண்டுவருவதற்கான முயற்சிகளைச் செய்வதன் மூலமாக,
ஆற்றின் மூலமாகவும், மழையின் மூலமாகவும், நீர் கிடைக்காத நேரத்தில்
இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்கின்ற கருத்து சொல்லப்படு
கிறது. இதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் முயற்சிகள்
எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கின்றேன். இப்படிப்பட்ட கீழ் நீரோட்டங்
களை முக்கியமாகப் பயன்படுத்திக்கொள்வதின் மூலம் நீர்ப்பாசன வசதி
களைப் பெருக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த மாநிலத்தில் பாசன வசதியைப் பெருக்குவதற்கான
வாய்ப்புக்கூறுகளாக இருக்கின்ற பிற மாநிலங்களிலிருந்து நீரைப் பெறு
கின்ற முயற்சியில் அரசு ஈடுபடவேண்டும் என்பதை மன்றத்தில் நான்
அடிக்கடி நினைவுப்படுத்தி வந்திருக்கிறேன். மீண்டும் நினைவுப்படுத்த
விரும்புகிறேன். அவ்விதம் கூறுகின்ற நேரத்தில் எல்லாம் இதற்காக
தக்க நடவடிக்கை எடுத்துவருகிறோம் என்கின்ற வாக்குறுதியைத்தான்
ஆண்டுதோறும் பாசனக் கோரிக்கையின்போது அமைச்சர்கள் தெரிவித்துக்
கொண்டிருக்கிறார்கள். இதே வாக்குறுதியைத் தருகின்ற நிலையில் இந்த
ஆண்டு நிர்ப்பாசன கோரிக்கையிலும் கூட, வெளி மாநிலங்களிலிருந்து
அங்கேயுள்ள நீரை அவர்கள் பயன்படுத்தியது போக, வீணாகக் கடலில்
சென்று கலக்கின்ற நீரை நாம் இழுத்துக்கொள்வதற்கான வாய்ப்பு
இருக்கிறது. அவர்களுக்குப் பயன்படாமல் இருக்கின்ற நீரை நமது
நிலத்திற்குத் திருப்பி விடுவதின் மூலமாக வறண்டிருக்கின்ற மா
மாவட்டங்களுக்கு ஆக்கம் தருகின்ற வகையில் இந்த நீரைப் பயன்படுத்திக்
கொள்ளலாம் என்கின்ற கருத்தையும் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்
கிறார்கள். அமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையில் மேலும் குறிப்
பிடுக்கையில்—

"சம்பந்தப்பட்ட மாநிலங்களின் பரஸ்பர நல்லெண்ணத்தைப் பெற்று
பொறுமையுடன் பக்குவமாகப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டியிருப்பதால்
இந்த விஷயத்தை இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன்."

என்று கூறி நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள். இதே பதில்தான் ஆண்டுக்
காண்டு எடுத்துச்சொல்லப்பட்டு வருகிறது. சம்பந்தப்பட்ட மாநிலங்களின்
நல்லெண்ணத்தைப் பெறவேண்டும் என்பது தான் தொடர்ந்து சொல்லப்





படுகிறது, மிகவும் பொறுமையுடன் இருந்து பார்க்கவேண்டும் என்ற
கருத்துத்தான் ஆண்டுக்காண்டு சொல்லப்படுகிறது. பக்குவமாகப் பேச
வேண்டியிருக்கிறது என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பக்குவமாக
மட்டுமில்லாமல், திறம்படவும் பேசி, குறுகிய கால அளவுக்குள் நல்ல
தொரு முடிவை எடுக்கவேண்டும் என்று தான் நான் வற்புறுத்துகிறேன்.
அதற்கு ஊக்கமும் ஆக்கமும் தருகின்ற வகையில் எதிர்க்கட்சியைச் சார்ந்
திருக்கின்றவர்கள் இந்த மன்றத்தில் தங்கள் கருத்துக்களைத் தந்துள்ளார்
கள். எல்லா முயற்சிகளையும் முறையோடு எடுத்துக்கொள்ளவேண்டும்.
பக்குவத்தோடு தான் பிற மாநிலங்களிலிருந்து நீரைப் பெற முடியும்,
பகைத்துக்கொண்டு நீரை வாங்கமுடியாது என்பதையும் உறுப்பினர்கள்
நன்கு உணர்கிறார்கள். கனம் அமைச்சர் அவர்கள் பக்குவமாய், பொறு
மையாய், பேச்சு வார்த்தைகள் நடத்தவேண்டியிருக்கிறது என்பதைச்
சொல்லியிருக்கிறார்கள். பக்குவமாகவும், பொறுமையாகவும்,
பேசுகின்ற தன்மையை நமது அமைச்சர் அவர்கள் பெற்றிருக்
கிறார்கள். அதை இன்னும் மிக்க நல்ல முறையில் பயன்படுத்துவதின்
மூலம், நம்பிக்கை தரக்கூடிய வகையில், அதற்கான முயற்சியில் விரைவில்
அமைச்சர் அவர்கள் ஈடுபடுதல் வேண்டும் என்று இந்த வாய்ப்பில் கூறிக்
கொள்ள விரும்புகிறேன். அடுத்து, நீர்ப்பாசனத்தைப் பெருக்கு
வதற்குப் பல திட்டங்களை மேற்கொண்டு நிறைவேற்ற வேண்டியவர்களாக
இருக்கிறோம். பல அணைக்கட்டுத் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம்.
இவ்வாறு நிறைவேற்றப்பட்டிருக்கும் திட்டங்களைப் பார்க்கும்போது,
இதற்காகச் செலவழித்த பணத்தையும், இதன் மூலம் கிடைக்கின்ற
பலனையும் கணக்கிட்டுப் பார்க்கும்போது, செலவு ஏராளமாகவும், கிடைக்
கின்ற பலன் குறைவாகவும் இருப்பதையும் நாம் காண்கின்றோம். ஆக,
திட்டங்களை லாப நோக்கத்தின் அடிப்படையில் நிறைவேற்றவில்லை, அது
தருகின்ற பலனின் அடிப்படையில்தான் நிறைவேற்றி வரு
கிறோம் என்கின்ற கருத்தையும் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்
கள். செலவழிக்கப்படுகின்ற தொகையைப் பற்றியும் அதிலிருந்து கிடைக்
கின்ற பலனைப் பற்றியும், தணிக்கை செய்யப்படுகின்ற நேரத்தில், இந்த
அரசின் நோக்கத்தையும், குறிக்கோளையும் அடிப்படையாகக் கொண்டு
தணிக்கையாளர்கள் கணக்கைப் பார்வையிடும்போது, பல குறைபாடுகளைச்
சுட்டிக்காட்டியுள்ளார்கள். சுட்டிக்காட்டப்படும் குறைபாடுகளையும், குற்றங்
களையும் கவனித்து குறைபாடுகளை நீக்குவதற்கான முயற்சிகளை
எடுக்கவேண்டிய கடமையில் இந்த அரசு இருக்கிறது. முதலில்
திட்டங்களை நிறைவேற்றுகிற காலத்தில், ஏற்படுகிற குறைபாடுகளை நீக்கு
வதற்கு முழு முயற்சி எடுக்கவேண்டும். அவ்வப்போது தணிக்கையாளர்
கள் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படுகிற குறைபாடுகளைப் பற்றியும்,
ஏற்படுகிற ஒழுங்கீனங்களைப் பற்றியும் சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.
துவக்கத்தில் குறைந்த மதிப்பீடு காரணமாகவும், காலத் தாழ்வோடு
துவக்குவதன் காரணமாகவும், சாமான்களின் விலையேற்றம் காரணமாக
வும், காலம் நீண்டுகொண்டு போகின்ற காரணத்தினால் ஏற்படக்கூடிய
கூலி உயர்வு காரணமாகவும், போக்குவரத்துக் கட்டண உயர்வு காரண
மாகவும், பராமரிப்புச் செலவு ஏறுவதன் காரணமாகவும், இயக்கும்
செலவு காரணமாகவும், காலத் தாழ்வோடு முடித்தல் காரணமாகவும்,
—இவைகளைப் பற்றி ஒவ்வொன்றாக விரிவாகச் சொல்ல நேரம் இல்லை என்று
விடுகிறேன்—திட்டங்களுக்கு ஆகும் செலவு ஏராளமாக ஆகின்றது. குறிப்
பிட்டிருக்கிற குறைபாடுகளை நீக்கி, போக்கி, அப்படி நீக்குவதன் மூலமாக
நல்ல பலன்கள் ஏற்படக்கூடிய முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும்
என்று கூறிக்கொள்ளுகிறேன். இந்திய அரசால் நியமிக்கப்பட்டிருக்
கின்ற தணிக்கையாளர்கள் இந்த ஆண்டிலும் பல குற்றச் சாட்டுகளையும்
குறைபாடுகளையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அந்தக் குறைகளையும்
குற்றங்களையும் கவனித்து, உடனடியாக, அதற்காக எடுக்கவேண்டிய
நடவடிக்கைகளை நாம் விரைவில் எடுக்கவேண்டும்.

நமது மாநிலத்தில் லாப நோக்கு அடிப்படையில் நீர்ப்பாசனத் திட்டங்
கள் எடுக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.
பிரிட்டிஷார் ஆண்ட காலத்தில் லாப நோக்கு அடிப்படையில் தான்
திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஏன் அந்தக் கொள்கையில்

இருந்தது அந்த அரசு என்பதற்குக் காரணமும் சொல்லப்பட்டிருக்கிறது. 1879-ம் ஆண்டு கொள்கை அடிப்படையில் சட்டம் வகுக்கப்பட்டது. திட்டங்களுக்குப் பணம் செலவழிக்கின்ற நேரத்தில், செலவழிக்கின்ற அளவுக்கு அந்தத் திட்டங்களினால் பலன் வருமா, செலவழிக்கப்பட்ட பணத்திற்கு வட்டி வருமா என்ற அடிப்படையில் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்பது கொள்கையாகக் கொள்ளப்பட்டது. திட்டங்களை நிறைவேற்ற, திட்டங்களுக்காகப் பணத்தைக் கடனாக இங்கிலாந்திலிருந்து வாங்க வேண்டிய அவசியமும், கடனுக்கு வட்டி கட்ட வேண்டிய அவசியமும் இருந்தன. திட்டங்கள் மூலம் கட்டவேண்டிய வட்டி கிடைக்குமா? என்ற அளவில் அந்த நோக்கம் கடைப்பிடிக்கப்பட்டது என்றுசொல்லப்படுகிறது. ஆனால் இப்போது போடப்படுகிற திட்டங்கள் பலன்களை அடிப்படையாகக் கொண்டு தான்—லாப நோக்கு அடிப்படையில் இல்லாமல்—போடப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. லாப நோக்கு அடிப்படையில் திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை என்றாலும், பலன்களைப் பொறுத்து, எத்தகைய பலன் எதிர்பார்க்கப்பட்டன? எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்குப் பாயும் என்று எதிர்பார்க்கப்பட்டது ? எவ்வளவு செலவு ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது ? எவ்வளவு நிலங்களுக்குப் புதிய பாசனம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது ? மொத்தத்தில் எவ்வளவு பலன் கிடைத்தது ? எவ்வளவு உற்பத்தி பெருகும் என்று எதிர்பார்க்கப்பட்டது ? எவ்வளவு உற்பத்தி பெருகியது ? எதிர்பார்த்த அளவு கிடைத்ததா ? திட்டம் வெற்றி பெறுமா ? அல்லது பெறாமல் போகுமா ? என்று இந்த அரசினுடைய கொள்கைப்படி அளந்து பார்க்க வேண்டுமென்றாலும், அமைச்சர் அவர்களுடைய உரையில் விளக்கமாகத் தரப்பட்டிருந்தால் அதைப் பற்றித் தெளிவு பெற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். அத்தகைய விளக்கங்கள் இல்லாத நிலையில் தணிக்கையாளர் கொடுக்கும் கணக்கு அடிப்படையில் பார்க்கவேண்டியவர்களாக இருக்கிறோம். பலனைப் பொறுத்து, எதிர்பார்க்கப்பட்ட பலன் என்ன ? பொது மக்களுக்கும் நாட்டுக்கும் உதவி செய்வதாக இருக்கிற திட்டங்களுக்காகச் செலவழிக்கும் தொகை அதிகமா? அல்லது குறைவா ? அரசின் நோக்கம் நிறைவேறிற்றா ? அந்த அளவுக்குத் தெளிவாகப் புள்ளி விவரம் தரப்பட்டிருந்தால் நலமாக இருக்கும். அடுத்த ஆண்டிலாவது இது பற்றி விளக்கமான அறிக்கை தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் தணிக்கையாளர்கள் குறிப்பிடுகிற குறைபாடுகளை நீக்குவதற்குத் தக்க முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி வரையில் ஏற்றுக்கொண்டிருக்கிற மொத்தத் திட்டங்களின் அளவைப் பொறுத்த வரையில் 44. முதலீடு, மற்றும் ரெவின்யூ கணக்குகள் அடிப்படையில் போடப்பட்டிருக்கிற முதல் 66.80 கோடி ரூபாய். 40 திட்டங்கள் வருமானம் தருகின்ற நிலைமையை அடைந்திருக்கின்றன என்றும், மூன்று திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிற நிலையில் இருக்கின்றன என்றும், ஒரு திட்டம் தீர்க்கப்பட முடியாத நிலைமையில் இருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆரணியாறுத் திட்டத்திற்குச் செலவழிக்கப்பட்ட தொகை 99 லட்சம் ரூபாய் ஆந்திர அரசுக்கும் இந்த அரசுக்கும் இடையே அந்தப் பிரச்னையைப் பொறுத்து முடிவு ஏற்படாத நிலையில் இருப்பதாகவும், தொடர்ந்து அது குறித்து முடிவு கட்ட இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். தக்க கவனம் செலுத்தி அமைச்சர் அவர்கள் ஆரணியாறுத் திட்டத்தைப் பொறுத்து இருக்கிற பிரச்னையைத் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 40 திட்டங்களை நிறைவேற்றுகிற முறையிலே 1962–63-ம் ஆண்டில் ஆய்வாளர்கள் கணக்குப்படி நஷ்டம் 35 திட்டங்களில் 3.10 கோடி ரூபாய் என்றும், 1963–64-ம் ஆண்டில் 38 திட்டங்களில் 2.66 கோடி ரூபாய் என்றும், சொல்லப்பட்டுள்ளது. அகில இந்தியாவின் கணக்குகளைப் பார்த்தால், ஆண்டுதோறும் 30 கோடி ரூபாய் பாசனத் திட்டங்களால் நஷ்டம் ஏற்படுகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எப்படிப்பட்ட கணக்கு முறைகளை மேற்கொள்ளவேண்டும் என்ற ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் அரசினர் கணக்குப்படி, அவர்கள் மேற்கொண்டிருந்த முறையைக் கையாளவேண்டுமென்று சொல்லவில்லையென்றாலும், அதன் நோக்கத்தையும் ஆராயவேண்டும். எந்த முறையைக்





கையாளவேண்டும் என்பதில் திரு. நிஜலிங்கப்பா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட குழு தன்னுடைய அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறது. இந்திய அரசால் 1964-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில் அமைக்கப்பட்ட அந்தக் குழு தன்னுடைய ஆழ்ந்த கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறது. அவர்கள் தெரிவித்திருக்கிற கருத்து

"The economic benefits of the Irrigation Projects should be the main criterion for going ahead with them." என்பதாகும். அதன்படி பொருளாதார பலன்கள் எந்த அளவுக்கு இருக்கின்றன என்று திட்டவட்டமாகக் கவனித்து, அப்படிப்பட்ட திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டுமென்று கூறியிருக்கிறார்கள். மேலும் சொல்லும்போது—"A project should be judged not by the direct returns to the Government but by the overall benefits to the national economy" என்ற கருத்தும் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி நேரடியாக அரசுக்கு என்ன வருமானம் வருகிறது என்பதைப் பொறுத்து அல்லாமல், மக்களுக்கும் நாட்டுக்கும் என்ன நன்மை ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கணக்கிட வேண்டும் என்று

"Another point to be considered is the amount of revenues derived by the Central and State Governments as a result of the irrigation projects. For a Project to be considered worthwhile, the Committee recommends that the ratio of benefit to cost should be $1\frac{1}{2}:1$, i.e., for every Rs. 100 invested, the value of annual benefits to the national economy should be Rs. 150."

என்ற கருத்துக்களையும் அந்தக் குழுவினர் தெரிவித்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் அரசினர் நிர்ணயித்த கருத்து அடிப்படையில் நாம் கணக்குப் போட்டுப் பார்க்காவிட்டாலும் இந்தக் குழுவினுடைய கருத்து அடிப்படையில் கணக்குப் போட்டு, எடுத்திருக்கிற திட்டங்கள் எந்த அளவுக்கு நிறைவேறியிருக்கின்றன ? திட்டங்கள் எந்த அளவுக்குப் பலன் தந்திருக்கின்றன? என்று விளக்கமாக, இப்போது உடனடியாகத் தரா விட்டாலும், இந்த மன்றம் அறிந்து கொள்ளும் முறையில் விளக்கி அறிக்கை தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பலன்களைப் பொறுத்தும் கூறுகிறபோது அரசாங்க ரெவின்யூ போர்டார் 1958-ம் ஆண்டிலே குறிப்பிட்ட ஒரு திட்டத்திலே 10,000 ஏக்கர்களுக்கு நீர்ப்பாசனம் ஏற்படவேண்டும் என்று திட்டமிட்டும், 10,000 ஏக்கர்களுக்குத் திட்டமிட்டபடி பயன்படவில்லை, 4,250 ஏக்கர்களுக்குத்தான் பாய்ந்திருக்கின்றன என்று ஆய்வாளர்கள் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் குறைபாடு எதன் காரணமாக ஏற்பட்டது ? அதைத் தடுக்க வழி என்ன ? என்று ஆராயவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

ஏரிகளை மராமத்து செய்து, செப்பனிட்டு, சீர்படுத்திப் பாசன வசதி பெறுவதன் மூலமாக உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு வழி காண முடியும் என்ற அடிப்படையில் வகுக்கப்பட்ட திட்டத்தில் ஏப்ரல் 1951-லிருந்து மார்ச் 1964 முடிய 7,112 பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 14.10 கோடி ரூபாய் செலவில் அவைகள் முடிக்கப்பட்டிருக்கின்றன. ஏரிகள் மராமத்து மூலம் 7,112 பணிகளை 14.10 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளுவதன் மூலமாக எதிர்பார்க்கப்பட்ட பலன், 10,20,954 ஏக்கர்களுக்குப் பாசனம் ஏற்படும் என்பதாகும். ஏற்பட்டிருக்கிற பலன் அடிப்படையில் பார்க்கும்போது 1,64,361 ஏக்கர்கள் தான் அதனால் விளைவு ஏற்பட்டிருக்கிறது. எதிர்பார்க்கப்பட்ட பலன் ஏற்படாமல் இருக்கக் காரணம் என்ன ? எந்தக் குறை அல்லது குற்றத்தின் காரணமாக ஏற்பட்டது ? எதிர்பார்க்கப்பட்டது 10 லட்சம் ஏக்கராக இருந்தும் கிடைத்தது 1,64,000 ஏக்கர் தான். இதற்குக் காரணம் என்ன ? திட்டங்கள் போட்டதில் தவறா ? எதிர்பார்த்ததில் தவறா ? நிறைவேற்றியதில் தவறா ?—

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [19th March 1965

என்று பார்த்துத் தவறுகளைப் போக்கவும் குறைகளுக்குக் காரணமானவர்களைத் தண்டிக்கவும் முயலவேண்டும் என்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திட்டங்களின் மூலம், ஏற்பட்ட உணவு உற்பத்தி என்ன ? எதிர் பார்க்கப்பட்ட உணவு உற்பத்தி என்ன ? இந்தப் பணிகளைப் பொதுப் பணித் துறை எந்த அளவுக்கு நிறைவேற்றியிருக்கிறது ? என்று கணக்கிட்டு நோக்கம் நிறைவேருத காரணம் என்ன ? என்று கண்டுபிடிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதிதாக நீர்ப்பாசனம் செய்யப்பட்ட நிலத்தில், ஒரு எக்கர் புதிதாக நீர்ப்பாசனத்திற்கு வருமாலுல் ½ டன் அரிசியாவது கூடக் கிடைக்கிறதா என்று பார்க்கவேண்டுமென்றும், ஏற்கெனவே பாசனத்தில் இருக்கும் நிலத்திலே ஒரு எக்கர் நிலத்தில் எட்டில் ஒரு பகுதி டன் அளவுக்காவது அரிசி கூடக் கிடைக்க வாய்ப்பு இருக்கிறதா என்று கணக்கிட்டுச் செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிருர்கள். புதியதாக அணைக்கட்டுகள் கட்டுவதற்கு திட்டம் தீட்டப்படும்பொழுது, ஒரு டன் உணவு தானியம் கிடைக்கின்ற அளவுக்கு, ரூ. 2,000 செலவழிக்கலாம், என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் மூலம் அந்தத் திட்டம் இவ்வளவு பலன் தரக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டும் என்ற அளவுகோல் விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவு கோலை மதிப்பீட்டுக் குழு அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்திருக்கிறது. அந்த அளவு கோலினுடைய அடிப்படையில் வைத்துப் பார்த்துத் திட்டங்கள் எந்த அளவுக்கு நிறைவேற்றப்பட்டிருக்கின்றன ? என்பதைக் கண்டறியவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1956-57-க்கும்,1963-64-க்கும் இடையிலே ரிவர் பம்பிங் ஸ்கீம் என்ற அளவில் 5 திட்டங்கள் போடப்பட்டு, அதற்காக ரூ. 1,59,000 ஒதுக்கப்பட்டது. அதிலிருந்து 1,444 எக்கர் நிலங்களை விளைவுக்குக் கொண்டு வரமுடியும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனல், 744 எக்கர் தான் விளைவுக்கு வந்திருக்கிறது. அதற்குக் காரணம் சொல்லுகிறபொழுது, விவசாயிகள் அவற்றைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்று சொல்லப்படுகிறது. விவசாயிகள் அவற்றை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளாததற்குக் காரணம், அவர்கள் தேவையில்லை என்று கருதுகிருர்களா ? இவற்றின் விவரம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதா? இல்லையா ? என்பதை அரசு கண்டறிந்ததா ? திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியை அரசு தீவிரமாக மேற்கொள்ளுதல் வேண்டும்.

டிராக்டர்கள் பயன்படுத்தத் தொடங்கிய காலத்திலிருந்து தொடர்ந்து நட்டம் ஏற்பட்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஐந்தாண்டு கால முடிவில், 1962-ம் ஆண்டு மார்ச்சில் அந்த வகையிலே ஏற்பட்ட நட்டம் மட்டும் ரூ. 24,98,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 1962-63-ல் இலாபம் ரூ. 2,17,000·33 புதிய டிராக்டர்கள் நடைமுறைக்கு வந்ததன் காரணமாக இது என்றும் கணக்கு காட்டப்பட்டிருக்கிறது. பழைய டிராக்டர்கள் மூலம் போதுமான இலாபம் கிடைக்கவில்லை. பழுதுபட்ட காரணத்தில் பயன்படுத்தப்பட முடியாத நிலைமையிலே பழைய டிராக்டர்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளுக்குத் தேவைப்படுகின்ற கருவிகள் வரவழைக்கப்படவில்லை. வரவழைக்கப்படாததன் காரணமாக, அவைகள் பழுதுபார்க்கப்பட்டு, சீர்திருத்தப்பட்டு, செம்மையாகப் பயன்படுத்தப்படவில்லை. இதன் காரணமாகத் தான் நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்று கூறப்படுகிறது. 1960-61-ல் டிராக்டர்கள் வேலை செய்த நேரம் 53,643 மணி நேரம். 1963-64-ல் அவைகள் வேலை செய்த நேரம் 45,197 மணி நேரம் தான். அந்த அளவுக்குத் தான் டிராக்டர்கள் வேலை செய்யக்கூடிய நிலைமையில் இருந்திருக்கின்றன. அதற்காகப் போடப்பட்ட முதலீட்டை நல்ல வகையில் பயன் படுத்திக்கொள்கிற அளவுக்கு இன்னும் அதிக கவனம் செலுத்தி, அவைகளை சீர்படுத்தவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஸாயில் கன்ஸர்வேஷன் பொறுத்தவரையில் 1964-ம் ஆண்டு மார்ச்சு முடிய மூன்று ஆண்டுகளில் செலவு செய்த தொகை ரூ. 1 கோடி



19th March 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

20 லட்சம். 1962-63-ல் அந்தத் திட்டம் தந்த பலன் 57 சதம். 1963-64-ல் 37 சதம் தான் பலன் தரக்கூடிய அளவுக்கு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இதிலே ஏற்பட்டிருக்கிற குறைபாடுகளுக்கான காரணங்கள் என்னவென்பதைக் கண்டறிந்து, இதனுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சியை மேற்கொள்ளுதல் வேண்டும்.

பெருவழித் துறையைப் பொறுத்தவரையில் பொதுப் பணித் துறைக்கு ரூ. 6 கோடி 60 லட்சம், முதலீடு ரூ. 2 கோடி 25 லட்சம், ஆக ரூ. 8 கோடி 85 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. பொதுப்பணி வகையில் மூன்ருவது திட்டத்தில் ரூ. 11 கோடியும், நான்காவது திட்டத்தில் ரூ. 37 கோடியும் செலவழிக்கக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன என்பது வரவேற்கத்தக்க ஒன்று. இந்தத் துறைகளிலே அதிகமாகச் செய்யப்படவேண்டிய பணிகள் இருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேசிய நெடுஞ்சாலைகளுக்காக ரூ. 30 கோடி 25 லட்சம் மத்திய சர்க்கார் உதவியின் மூலம் இந்த மாநிலத்துக்குக் கிடைக்கக்கூடும் என்று கூறப்பட்டிருக்கிறது. கடற்கரை ஓரத்தில் இருக்கிற தேசிய நெடுஞ்சாலை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலாவது எடுத்துக்கொள்ளப்படவேண்டுமென்பதை மீண்டும் வலியுறுத்திக்கூற விரும்புகிறேன். இந்த மாநிலத்திலுள்ள போக்குவரத்து நெருக்கடியை தளர்த்துவதற்கும், விரிவான போக்குவரத்தை மேற்கொள்ளுவதற்கும், வாணிபப் பண்டங்களை வட பகுதியிலிருந்து தென் பகுதிக்கு அகற்றுவதற்கும், விரைவாகச் செல்வதற்கும், தேசிய நெடுஞ்சாலைகள் மிகவும் பயன்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அது எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கிறேன்.

திட்டக் குழுவிடம் முறையீடு செய்து, சாலைகளுக்காக ஒதுக்கப்படும் தொகையை இன்னும் அதிகமாக உயர்த்திக் கொடுப்பதற்கான முயற்சிகளை எடுத்திருக்கிருேம் என்று கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்ருகும் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். 11 இடங்களில் மேல் பாலங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. மேலும் இதற்காகத் தேவைப்படுகிற தொகையை முறையீட்டின் மூலம் அதிகமாகப் பெறுகிற முயற்சியில் வெற்றி பெற்று, அதன் மூலம் அதிகமாகப் பெறுகின்ற தொகையை வைத்துக்கொண்டு, மேலும் புதிய பாலங்களை மேற்கொண்டு கட்டி முடிப்பதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இதுவரையில் சாதனைகள் என்ற அளவிலே சிமெண்டு கான்கிரீட், தார் கான்கிரீட் சாலைகளைப் பொறுத்தவரையிலே 12 மைல் 2 பர்லாங் அளவுக்குத் தான் போடப்பட்டிருக்கிறது இதனுடைய அளவை மற்றவைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது மூன்று ஆண்டு சாதனைகளில் செய்யப்பட்டிருப்பது மிகமிகக் குறைவு. கான்கிரீட் சாலையின் தேவைகள் பல இடங்களில் இருக்கின்றன. அதுவும் நகரப் புறங்களில், நகரப் புறங்களையொட்டி நெருங்கியிருக்கின்ற பகுதிகளில், கான்கிரீட் சிமெண்ட் சாலைகள் தேவைப்படுகின்றன. நகரங்களில் தார் சாலைகள் போட்டால், ஆங்காங்கு போக்குவரத்தை எளிதாகவும், விரைவாகவும் நடத்துவதற்கு வழிவகைகள் ஏற்படும். போக்குவரத்தை பெருக்குவதற்கான முறையில் கடலோர நெடுஞ்சாலைகள் அமைப்பது மட்டுமல்ல, கடல் வழியாகக் கப்பல் போக்குவரத்து மூலமும், படகுப் போக்குவரத்து மூலமும் பண்டங்களை அகற்றுவதற்கும், பயணத்தை வசதியாக ஏற்படுத்துவதற்கும் முயற்சிகள் காணவேண்டும். சாலைகள் போடுவதற்கு அடிப்படை முயற்சிகள் பல எடுத்து, அதற்குப் பிறகு கான்கிரீட் சாலை, தார் சாலை போட்டு, போக்குவரத்து வசதியை அதிகரித்தாகவேண்டும். அதே மாதிரி ரயில் வசதியைப் பெருக்குவதானாலும், பெரிய அகன்ற ரயில் பாதைகளாக ஆக்குவதானாலும், பெரிய அளவுக்கு முதலீடு செய்யவேண்டும். ஆனல், கடலில் கப்பல் போக்குவரத்துப் பாதைள், அமைப்பதற்காக முதலீடு செய்யவேண்டிய அவசியமில்லை. 3 பெரிய துறைமுகங்கள் இருக்கின்றன. 8 சிறிய துறைமுகங்கள் இருக்கின்றன. இவற்றை ஒன்றுபடுத்தும் முறையில், கடற்கரை ஓரமாக கடலில் கப்பல

போக்குவரத்து, படகுப் போக்குவரத்து ஏற்படுத்தினால், பல இடங்களை அகற்றுவதற்கும், பயணங்களை வசதியாக நிறைவேற்றுவதற்கும் பயனுறும். இந்தக் குறை இந்த அரசினுடைய கையில் இல்லாவிட்டாலும், இந்த அரசு பரிந்துரையாளர்கள் மூலம், மத்திய சர்க்காரைத் தூண்டிவிடுவதன் மூலம், இந்த வசதியை இங்கே கொண்டுவருவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடிக்கடி சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் செய்யப்பட வேண்டிய பல சீர்திருத்தங்களைச் சுட்டிக்காட்டியிருக்கிறேன். போக்கு வரத்தை விஸ்தரிப்பதற்கு, போக்குவரத்திற்கு பயன்படுத்திக்கொள்வதற்கு, பக்கிங்ஹாம் கால்வாய் திட்டத்தை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறியிருக்கிறேன். கூவம் ஆறு, பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றை சீர்படுத்துவதற்கான திட்டம், 10 கோடி ரூபாயில் ஒரு திட்டம் போடப் பட்டிருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் முன்பு தெரிவித்தார்கள். அடிக்கடி சென்னை மாநகரத்தின் சுகாதார நிலையைப்பற்றி பேசும் போதும் சரி, இன்னும் இங்கே இருக்கிற வசதிகளைப் பெருக்குவதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துகிறபோதும் சரி, போக்குவரத்து வசதியை அதிகப்படுத்த வேண்டும் என்று கூறும் போதும் சரி, பக்கிங்ஹாம் கால்வாயைச் சீர்படுத்துதல் வேண்டும், கூவம் ஆற்றைச் சீர்படுத்துதல் வேண்டும் என்று கருத்துக்கள் வற்புறுத்தி எடுத்துவைக்கப்பட்டிருக்கின்றன. அதன் மூலம் சென்னையில் சுகாதார நிலையை காப்பாற்ற முடியும், போக்குவரத்து வசதியைப் பெருக்க முடியும், படகுப் போக்குவரத்தை மேற்கொள்வதன் மூலம் சாலைகளில் லாரிகள் செல்லுகின்ற நெருக்கடியைக் குறைத்து, போக்குவரத்தை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு ஏற்படும். அதை நினைவு படுத்துகின்ற முறையில், இதிலே மேலும் கவனம் செலுத்தவேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டு பொதுப் பணித் துறையிலே வேலை பார்க்கின்ற நிமித்த ஊழியர்களின் குறைகள் பற்றி இந்த மன்றத்தில் அடிக்கடி எடுத்துத் தெரிவித்திருக்கிறேன். மீண்டும் நினைவு படுத்த விரும்புகிறேன். ஆரம்ப காலத்திலிருந்து அவர்கள் பணிசெய்துவந்தாலும், அவர்கள் பணிகள் தேவைப்படுகின்ற நிலைமைகள் இருந்தாலும், பல ஆண்டு காலமாக அவர்கள் நிரந்தரமாக ஆக்கப்படாமல் பணிபுரிந்துகொண்டுவருகிறார்கள். அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கவேண்டும் என்று வேண்டுகோள் இந்த மன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு நானும் அம்மாதிரி வேண்டுகோளை வைத்திருக்கிறேன். அவர்களுக்கு வேலை வாய்ப்பு, சம்பளம், ஊதிய நிர்ணயம் ஆகியவைகளுக்குத் தக்க முயற்சி எடுக்கவேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களுக்கு ஈட்டிய விடுப்பு (earned leave), மருத்துவ விடுப்பு (medical leave) வழங்கப்படாத நிலைமை இருக்கிறது என்ற குறைகள் கூறப்படுகின்றன. அந்தக் குறைகளை அகற்றுதல் வேண்டும். 10—7—1960 தேதியிட்ட அரசுக் கட்டளை எண் 710, 24—7—1962 தேதியிட்ட அரசுக் கட்டளை எண் 822 11—5—1964 தேதியிட்ட அரசுக் கட்டளை எண் 623, 10—9—1964 தேதியிட்ட அரசுக்கட்டளை எண் 1161 ஆகிய அரசுக் கட்டளைகளில் உயர்த்தப்பட்டிருக்கிற பஞ்சப்படி வசதிகள் தங்களுக்குக் கிடைக்கவில்லை, குறிப்பாக பெரியாறு–வைகைக் கோட்டம், வைகை அணைக்கட்டுப் பகுதி, கன்னியாகுமரி உணவு உற்பத்திக் கோட்டம் ஆகிய பகுதிகளில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு இந்தப் பஞ்சப்படி உயர்வு கிடைக்கவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. இதிலே கவனம் செலுத்தி, இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மற்ற துறைகளிலே பணியாளர்களைப் பொறுக்குவதற்கு என்ன முறைகள் கையாளப்படுகின்றனவோ, அதே போன்று நிமித்த ஊழியர்களைப் பொறுத்தவரையிலும் நீண்டகாலமாகப் பணிபுரிகிறவர்களை திறமையின் அடிப்படையில் தேர்வு மூலம் தேர்ந்தெடுத்து, பதவி உயர்வு தருவதற்கு, பதவிகளில் அவர்களை ஈடு படுத்துவதற்குமான முயற்சிகளை மேற்கொள்ளுதல் வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





அரசாங்க ஊழியர்கள் போன்றே நிமித்த ஊழியர்களுக்கும் பிரயாணப் படி அனுமதிக்கப்படுவதில்லை என்ற குறையும் கூறப்படுகிறது. பல இடங்களுக்கு அவர்கள் வேலைக்கு அனுப்பப்படுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு பயணப்படி தரப்படவில்லை என்ற குறைபாடு இருந்து கொண்டிருக்கிறது. அமைச்சர் அவர்கள், அவர்களுடைய இந்தக் குறைகளைப் போக்கி, நீண்ட காலமாக இருந்து பணிபுரிகிற தற்காலிக ஊழியர்களை நிரந்தர ஊழியர்களாக மாற்றுவதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

தஞ்சை மாவட்டத்தில் அமெரிக்க வல்லுனர்கள் சுற்றிப்பார்த்து, விவசாயத்தைப் பொறுத்தும், பாசன திட்டங்களைப் பொறுத்தும் சில குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியுள்ளார்கள். கனம் முதல் அமைச்சர் அவர்கள் அந்த நிபுணர்கள் இங்கே இருக்கிற நிலைமைகளை அறிந்து கொள்ளாமல் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள் என்று கூறியிருக்கிறார்கள். இந்திய அமைச்சர் டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் உயர்தர அதிகாரிகளைக் கொண்ட ஒரு மகாநாடு கூட்டி, ஒரு அறிக்கை தயாரித்திருப்பதாகக் கூறப்படுகிறது. அந்த அறிக்கையின் விவரங்களை இந்த மன்ற உறுப்பினர்கள் அறிந்து கொள்கிற அளவுக்கு எற்பாடுகள் செய்யவேண்டும். அமெரிக்க வல்லுனர்கள் கூறிய குற்றச்சாட்டுகளில் நியாயம் இருக்கிறதா, இல்லையா உள்ளபடியே அவர்கள் எடுத்துக்காட்டிய குறைபாடுகள் இருந்தால் அவற்றைப் போக்கிக்கொள்வதற்கு எடுக்க இருக்கும் நடவடிக்கை என்ன? இங்கே இருக்கிற நிபுணர்களும், வல்லுனர்களும் அவற்றை ஆராய்ந்தார்களா? அதைப்பற்றி டாக்டர் ராவ் அவர்கள் வெளியிட்டிருக்கிற அறிக்கையில் விளக்கப்பட்டிருக்கிறதா? என்ற நிலைமைகளை அறிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த அறிக்கையின் விளக்கம் இந்த மன்ற உறுப்பினர்களுக்குத் தரப்படாத காரணத்தினால், அந்த அறிக்கை தரப்படுவதற்கான முயற்சியை மேற்கொள்ளவேண்டும். அவற்றை மன்ற உறுப்பினர்கள் தெளிவுபட அறிந்து கொள்வதற்கு உடனடியாக வசதி ஏற்படுத்தித்தர இயலுமா? என்பதை அறிய விரும்புகிறேன்.

கடைசியாக, தூரு வாருவதைப்பற்றி ஒரே ஒரு கருத்தைக் கூறி முடித்துக்கொள்கிறேன். ஆங்காங்குள்ள ஏரிகளிலும், மற்ற நீர் நிலைகளிலும் தூரு வாரி கரையிலே போடப்படுகிறது. மழை பெய்தவுடன் மறுபடியும் மழை நீர் அதை அடித்துக்கொண்டு போய் ஏரியிலேயே சேர்த்து விடக்கூடிய நிலைமை இருக்கிறது. வாருகின்ற தூரை நீண்ட தூரத்திற்கு அல்லது வேறு இடத்திற்கு, தேவைப்படுகின்ற வேறு இடத்திற்கு, அகற்றும் அளவுக்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். கரையின் மீதே தூரு வாரி எரியப்படுவதால், மழை பெய்தால் மீண்டும் அது கரைந்து ஏரியிலேயே போய்ச் சேரக்கூடிய நிலைமை சில இடங்களில் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. அந்தக் குறைபாட்டை போக்குவதற்கான முயற்சி எடுத்துக்கொள்ளுதல் வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்தைப் பெருக்குவதற்கான முயற்சி எடுத்துக்கொண்டு, ஆங்காங்கு சிறு சிறு நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். ஆங்காங்கு தேவைப்படுகின்ற அளவுக்கு அந்தத் திட்டங்களை நிறைவேற்றி வைக்கவேண்டும். மன்ற உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதியைப் பற்றி எடுத்துத் தெரிவித்த கருத்துக்களை நிறைவேற்றுவதற்கு முழு முயற்சி மேற்கொள்ளுதல் வேண்டும். அதற்காக ரூ. 8 கோடி அளவில் திட்டம் தீட்டியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்தக் குறைபாடுகளை யெல்லாம் நீக்குவதன் மூலம், நீர்ப்பாசனத் துறையில் நல்லதொரு நிலைமையை ஏற்படுத்தவேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு, கூறப்பட்ட கருத்துக்களில் அதிகமாக கவனம் செலுத்தி, நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை கனம் பொதுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொள்ளுதல் வேண்டுமென்று கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, 1-( p.m
இன்றைய தினம் இரண்டு முக்கியமான இலாக்காக்களை பற்றிய மானியக் கோரிக்கைகள் மீது, 37 கனம் அங்கத்தினர்கள் பேசியிருக்கிறார்கள்.

ஒவ்வொரு அங்கத்தினரும் நீண்ட நேரம் பேச வேண்டும் என்று விரும்பினாலும் கூட, போதுமான நேரம் இல்லாததால், மிகச் சுருக்கமாக, அவரவர்கள் பகுதித் தேவைகளையும், இன்னும் பொதுவாக இந்த இலாகாக்கள் திறமையாகச் செயல்பட ஆலோசனைகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு அங்கத்தினரும் சொன்ன ஆலோசனைகளுக்குப் பதில் சொல்ல முயற்சிக்கும் முன்பு, மொத்தமாக இந்த இலாகாக்கள் செயல்படும் முறையையும், வரும் நான்காவது திட்டத்தில் இந்த இலாக்காக்களுடைய லட்சியங்களையும், சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த வருஷம் மிக முக்கியமான வருஷம், காரணம், மூன்றாவது திட்டத்தை முடித்து, நான்காவது திட்டத்தில் எப்படிச் செயல்படப்போகிறோம் என்பதற்காக, அந்த முறையில் இலாகாக்கள் சிந்திக்கும் என்பதை எடுத்துக்காட்டச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறது. பேசின அங்கத்தினர்கள், கிட்டத்தட்ட எல்லா அங்கத்தினர்களும், நீர்ப்பாசனத் துறையைப் பற்றி மிக அதிகமாகப் பேசினார்கள். அதே நேரத்திலே, இரண்டொரு அங்கத்தினர்கள் இந்த நெடுஞ்சாலை பராமரிப்புப் பற்றி, மைனர் போர்ட் சம்பந்தமாக, தங்கள் தங்களுடைய கருத்துக்களையும் சொல்லியிருக்கிறார்கள். நீர்ப்பாசன சம்பந்தமாகச் சொன்ன கருத்துக்களுக்குப் பதில் சொல்லுவதற்கு முன்பு, இந்தச் சாலைப் பராமரிப்பு, இன்னும் சிறு துறைமுகங்கள், இவைகள் சம்பந்தமான நிலையைக் கொஞ்சம் விவரமாக முன்கூட்டியே சொல்ல விரும்புகிறேன். நமது ராஜ்யத்தைப் பொருத்த வரையில், சாலைப் பராமரிப்பு, சாலை அமைப்பு இவையெல்லாம் மற்ற ராஜ்யங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இங்கே நல்ல முறையிலேயே இருக்கிறது என்று, நம் ராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமல்லாமல், மற்ற ராஜ்யங்களைச் சேர்ந்தவர்களும் அடிக்கடி சொல்வதைப் பார்க்கிறோம். அதைப் பார்த்து விட்டு, சந்தோஷத்துடன், நாம் செய்தது போதும், என்றால் நாம் முன்னேற்றம் அடைய முடியாது. இன்றைக்குச்சபையிலே பேசினவர்களும் சரி, பல வழிகளில் இருப்பவர்கள் சொல்வதைக் கேட்பதிலும் சரி, அவற்றைப் பார்க்கும் போது, நமது சாலை அமைப்பு, சாலைப் பராமரிப்பு வேலைகள் இன்னும் வெகுதூரம் போக வேண்டிய கட்டத்தில் இருக்கிறது.

இந்தச் சாலை பராமரிப்பு வேலையை எடுத்துக்கொண்டால், மிக நீண்ட காலத்திற்கு முன்கூட்டியே, ஏதாவதொரு இலாகாவில் திட்டம் என்று சிந்தித்தார்கள் என்றால், அது சாலை பராமரிப்புக்குத்தான். நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்கூட்டியே, சாலை பராமரிப்புப் பற்றி எஞ்ஜினியர்கள் நாக்பூரில் கூடி, நாக்பூர் திட்டம் என்று ஒரு திட்டத்தை உருவாக்கினார்கள். அந்தத் திட்டத்தின் லட்சியம், ஒவ்வொரு கிராமத்திற்கும் ரோடு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதும், அதன் மூலம் விவசாயிகள் தங்கள் தானியங்களைச் சந்தைகளுக்குக் கொண்டுபோகக் கூடிய சூழ்நிலை ஏற்படுத்த வேண்டும் என்பதும் தான். அந்தத் திட்டத்தை நிறைவேற்றிவிட்டால், கிராமங்களோடு, போதுமான தொடர்பு ஏற்பட்டுவிடும் என்கிற சூழ்நிலை ஏற்படும். அதைத் தொடர்ந்து பரிசீலனை செய்து எஞ்ஜினியர்கள் கூடி, முடிவு எடுக்கும் போது, திரும்பவும் அக்ரிகல்சுரல் டெவலப்மெண்டுக்காகவே அதைச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தும் முறையில், திரும்பவும் அது திருத்தப்பட்டது.

சமீபத்தில் நாம் பார்த்தது என்ன ? இரண்டாவது திட்டம் முடிந்து மூன்றாவது திட்டம் ஆரம்பம் ஆனவுடனேயே, நிலைமை . என்னவென்றால், ராஜ்யத்தில் ஏற்படக்கூடிய ஏராளமான தொழில் வளர்ச்சிக்கு ரோடுகள் அமைத்தாக வேண்டும் என்பது. உண்மையாகவே நெருக்கடி ஏற்பட்டது. ஏனென்றால், தொழிற் வளர்ச்சிக்கு ரோடுகள் இல்லாத பட்சத்தில், நாம் எத்தனை தொழில் கூடங்களைக் கட்டினாலும், நாம் எத்தனை உற்பத்தியைப் பெருக்கினாலும், உற்பத்தியான பண்டங்கள் வெளியிடங்களுக்குப் போகாமல், தேக்கம் ஏற்படும் என்ற நிர்ப்பந்தம் உண்டாகும். ஆகவே, நாம் மூன்றாவது திட்டத்திலே, பழைய நாக்பூர் திட்ட அடிப்படையிலும், அதற்குப் பிறகு ஏற்பட்ட டெல்லி திட்ட அடிப்படையிலும், ரோடு வசதிகளுக்கு என்று





நிதியை ஒதுக்கினாலும், தொடர்ந்து ஏற்பட்ட நெருக்கடி காரணமாக நாம் நவீனமாகச் செய்ய வேண்டிய, அவசரமாக வேலையைத் துவங்க வேண்டிய, தொழில் வளர்ச்சிக்குக் குந்தகம் இல்லாமல் ரோடுகளை அமைக்க முக்கிய கவனம் செலுத்தவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மூன்றாவது திட்டத்திலே பார்த்தால், மொத்தமாகத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ரோடுகளை, தொழில் வளர்ச்சிக்கு அதிகக் கவனம் செலுத்தப்பட்ட பகுதிகளில், போதுமான, புதிய, அகலமான, பலமுள்ள ரோடுகளை அமைக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது; அந்த நெருக்கடியைப் பார்ப்பதில், இன்றையதினம், கிராமப் பகுதி அங்கத்தினர்கள், எங்கள் பகுதியில் போதுமான ரோடுகள், பஸ்கள் ஓடத் தகுதி உள்ள ரோடுகள் இல்லை என்று சொல்வதைப் பார்க்கிறோம்.

பஞ்சாயத்து யூனியன் சட்டத்தை ஏற்றுக் கொண்டபோது, மூன்றாவது திட்டத்திற்கு முன்பு, நான்காவது திட்ட மத்தியில் பஸ் ரோடுகள் எல்லாவற்றையும் அரசாங்கம் சர்க்கார் ரோடுகளாக மாற்றுவதற்கு வேண்டிய லட்சியத்தை நோக்கிச் செல்லுகிறோம். இப்பொழுது ஏற்பட்ட நிலை காரணமாக, அதற்குத் தேவையான கவனம் செலுத்தப்படாவிட்டாலும், இப்பொழுது ஏற்படக்கூடிய தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ரஸ்தாக்கள், கிராம முன்னேற்றத்திற்குத் தேவையான ரஸ்தாக்கள், விவசாய வளர்ச்சிக்குத் தேவையான ரஸ்தாக்கள், இவைகளை அமைக்கும் முறையில், நான்காவது திட்டத்தின் லட்சியம் அமைய வேண்டும், மூன்றாவது திட்டத்திற்கும், நான்காவது திட்டத்திற்கும், தொடர்பு இல்லாத முறையில் அதிகமான பணத்தை ஒதுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். நான்காவது திட்டத்திலே, கிராமப்புற ரோடுகள், ஜில்லா ரோடுகள், தொழில் வளர்ச்சிக்குத் தேவையான ரோடுகள், இவை அதிகமாக, நல்ல முறையிலே, மாநில முன்னேற்றத்திற்குத் தகுந்த முறையிலே, அமையும் என்பதில் என்னைப் பொறுத்தவரையில் சந்தேகம் இல்லை.

இன்றைக்கு இருக்கும் பிரச்சினையைக் கவனத்தில் கொண்டு டெல்லியில் கூடிய கமிட்டிக்குப் பிறகு, ரோடு போக்குவரத்துக்கும், ரெயில் போக்குவரத்துக்கும் உள்ள முக்கியத்துவங்களை ஆராய வேண்டும் என்று, மஸானிக் கமிட்டி என்று ஒரு கமிட்டியை ஏற்படுத்தினார்கள்.

அவர்கள் ரோடு போக்குவரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று ஒரு தீர்ப்பைச் சொன்னார்கள். அதோடு நின்று விடாமல், அதற்கு அடுத்தபடியாக, போக்குவரத்தை ஒழுங்குபடுத்த வேண்டும் என்ற காரணத்திற்காக இந்தக் கமிட்டி அறிக்கை வந்தவுடனே நியோகி கமிட்டி அமைக்கப்பட்டது. போக்குவரத்து எந்த இடத்தில் அதிகப்பட்டுப் போயிருக்கிறது, எந்த இடத்தில் தேங்கியிருக்கிறது என்பதை ஆராய்ந்து, தேங்கிவிடாமல் இருக்கும் சூழ்நிலையைக் குறித்து ஒரு அறிக்கை வர வேண்டும் என்பதற்காக அந்த நியோகி கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டி வேலை செய்வதற்கு முன்பே திரு. நியோகி அவர்கள் அந்தக் கமிட்டிப் பொறுப்பிலிருந்து விலகிக் கொண்டார்கள். இப்பொழுது ப்ளானிங் கமிட்டியிலுள்ள திரு. சிங் அவர்கள் இந்தக் கமிட்டிக்குத் தலைமை தாங்கி அறிக்கையைத் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுதிருக்கும் நிலையில், ராஜ்யத்திலோ அல்லது தேசத்திலோ போக்குவரத்து என்று சொன்னால், ரோடு போக்குவரத்தாக மட்டுமோ, அல்லது ரயில் போக்குவரத்தாக மட்டுமோ அமைந்துவிட்டால் போதாது. கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சற்று முன்பு கூறியபடி, கடல் போக்குவரத்தையும் பயன்படுத்த வேண்டும் என்ற அடிப்படையிலேயே மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் சிந்தித்துக் கொண்டிருக்கின்றன. இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பெல்லாம் கடல் போக்குவரத்து (கோஸ்டல் ட்ராஃபிக்) என்று சொன்னால், அது நடக்கக்கூடிய காரியமா என்ற சந்தேகம் பலருக்கு இருந்தது. அதுவும், இந்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில், இதற்கு அதிகமான கவனம் காட்டாமல் கூட விட்டு விட்டார்களோ என்ற சந்தேகம் எனக்கு இருந்தது. ஆனால், சமீபத்திலே மத்திய அமைச்சர் திரு. ராஜ் பகதூர் அவர்கள்

அதிகத் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டு, கோஸ்டல் ட்ராஃபிக்கைப் பலப் படுத்துவதற்கு வேண்டிய அதிக உற்சாகத்தைக் காட்டிக் கொண்டிருக் கிறார்கள்.

அந்த அடிப்படையிலேதான் நமது ராஜ்யத்தைப் பொறுத்த வரை யில், கோஸ்டல் ட்ராஃபிக்கை அதிகப்படுத்த வேண்டும் என்று நீண்ட காலமாக ஆலோசனை செய்யப்பட்டு, ஏதோ ஒரு காரணத்தினால் தள்ளிப் போடப்பட்டுக்கொண்டே வந்த கடலூர் துறைமுக அபிவிருத்தித் திட்டத்தை இந்த வருஷம் நாம் வேலைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம். வேலை யைத் தொடங்கிவிட்டோம். அந்த வகையில் தான் நாகப்பட்டினம் துறை முக அபிவிருத்தியும், தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தியும். தமிழ் நாட்டில் சிறு துறைமுகங்கள் என்று சொன்னால், கடலூர், நாகப்பட்டி னம், தூத்துக்குடி இந்த மூன்றும் தான் நமக்குத் தெரிந்தது. இதற்கு அடுத்த கட்டத்தில் இருக்கும் சிறு சிறு துறைமுகங்களைப் பற்றி யாருமே சிந்திப்பதில்லை. ஆனால், சிறு துறைமுக அபிவிருத்தி சம்பந்தமாக ஸ்டேட் போர்ட் ஆபீசர்கள் எல்லாம் தீவிர கவனம் செலுத்தக் கூடிய நான்கு ஐந்து சிறு துறைமுகங்கள் மிக அவசியமாக அமைய வேண்டும்.

கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், கனம் உறுப்பினர் திரு. ஹாஜா ஷெரீப் அவர்களும் சொன்னது போல, "பல்க் ட்ராஃபிக்" பூராவும் ரோடு போக்குவரத்து மூலமாகவோ, ரயில் போக்குவரத்து மூல மாகவோ அமைவதற்குப் பதிலாக சிறு துறைமுகங்களை முறையாக அமைக் கக்கூடிய காரணத்தால், உணவுத் தானியம், உரங்கள் (ஃபெர்ட்டிலைசர்ஸ்) போன்ற பொருள்களெல்லாம் ஆங்காங்குள்ள சிறு துறைமுகங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து உள் ஜில்லாக்களுக்குச் சுலபமாக ரோடு மூலமாகவோ ரயில் மூலமாகவோ எடுத்துச் செல்லக்கூடிய சூழ் நிலையை ஏற்படுத்த வேண்டும். அதோடல்லாமல், நமது கடற்கரையைப் பொறுத்த வரையில், ஏராளமான மக்கள் கடலிலே சுலபமாகப் போய் வரக்கூடிய தகுதி படைத்தவர்கள் கடற்கரையோரங்களில் இருக்கக்கூடிய காரணத்தால், இவர்களையும் பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்ற ஒரு பலமான முயற்சி இருக்க வேண்டும் என்ற அடிப்படையிலே சிறு துறைமுகங்களின் அபிவிருத்தியோடு நின்று விடாமல் நேற்று முன் தினம் தொழில் அமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்ன கப்பல் கார்ப்ப ரேஷனும் இந்தத் துறையில் பயன்படும் என்பதில் சந்தேகம் இல்லை. போக்குவரத்து என்று சொல்லும்போது, ரயில் போக்குவரத்து, நெடுஞ் சாலைப் போக்குவரத்து என்பதோடு நின்று விடாமல் கோஸ்டல் ட்ராஃபிக் கும் அதிக விரிவடைய வேண்டும் என்ற முறையிலும் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல, தூத்துக்குடி துறைமுகத்தைப் பெரிய துறைமுகமாக ஆக்குவதற்கு வேண்டிய முழு வேலை இப்பொழுது நடந்து கொண்டிருக் கும்போது, அதை இன்னும் அதிக அளவிற்குப் பயன்படுத்தக்கூடிய முறையில், இந்தத் துறைமுகம் நாடு பூராவிற்கும் நன்மை பயக்க வேண் டும் என்ற காரணத்தினால் சேதுசமுத்திரத் திட்டமும் இதோடு இணைந்த திட்டமாக இருக்கவேண்டும் என்று முன்கூட்டி ஆலோசனை நடத்தினார்கள். உடனடியாக தூத்துக்குடி துறைமுகத்தை எடுத்துக்கொண்டு, பிறகு நான் காவது ஐந்தாண்டுத் திட்டத்திலே சேது சமுத்திரத் திட்டத்தை எடுக்கலாம் என்ற பரிசீலனை இருக்கும்போது, இந்தத் திட்டத்தையும் மிகத் தீவிர மாகப் பரிசீலனை செய்து, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் காத்திருக்காமல், முடிந்தால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே எடுக்கவேண்டும் என்ற முயற்சியிலே சென்னை ராஜ்ய அரசாங்கம் இதற்கு வேண்டிய புள்ளி விவரங்களை முறையாகச் சேகரித்து மத்திய அரசாங்கத் திடம் கொடுத்து, இப்பொழுது அவர்களும் இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டு, இதற்கு வேண்டிய முன் வேலை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திலேயே நடக்கவேண்டும் என்ற ஒரு முடிவுக்கு அவர்கள் வந்திருக் கிறார்கள்.



கனம் உறுப்பினர் திரு. சிமைச்சாமி அவர்கள், "இராமேஸ்வரத்தில் புயல் அடித்ததால்தான் சேது சமுத்திரத் திட்டத்திற்கு ஒரு உறுதி ஏற் பட்டது" என்று சொன்னார்கள். சேது சமுத்திரத் திட்டத்திற்கு உறுதி ஏற்படுவதற்கு இராமேஸ்வரப் புயல் காரணம் அல்ல. சேதுசமுத்திரத் திட்டம் கண்டிப்பாக வரும் என்ற உறுதி இந்த அரசாங்கத்திற்கு எப் போதுமே இருந்தது. ஆனால், இந்த வேலையை முன்கூட்டி எடுப்பதற்கு நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டது. புயலினால் ஏற்பட்ட சேதத்தைப் பார்க்க வந்த மத்திய நிதி அமைச்சர் திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்களும், மத்திய ரயில்வே அமைச்சர் திரு. எஸ். கே. பாட்டீல் அவர் களும், இந்தப் புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கக் கூடிய அளவிற்கு, கண்டிப்பாக வரக்கூடிய இந்த சேது சமுத்திரத் திட் டத்தை நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் காத்திருக்காமல், இதற்கு வேண்டிய முன் வேலையை உடனடியாக ஆரம்பிக்கக் கூடாதா என்ற கருத்தைச் சொல்லி, அதை இந்திய அரசாங்கமும் ஒப்புக்கொண்டு சமீபத்திலே அவர்களுடைய முடிவைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து கவனித்துக் கொள்வதற்காக ஒரு ஸ்பெஷல் ஸர்க் கிள் ஏற்படுத்த ஒரு சூபரின்டெண்டிங் இன்ஜினீர் உடனடியாகப் போட வேண்டும், அதற்கு சென்னை ராஜ்ய அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சூபரின்டெண்டிங் இன்ஜினீர் ஒருவரைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல், தீவிரமாக இதில் இருக்கும் பல்வேறு பிரச்னைகளை அலசிப் பார்க்க ஸ்தலத்திலேயே ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியும் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் மிகக் குறுகிய காலத்திலேயே நியமிக்கப்பட்டு விடுவார்கள் என்ற நம் பிக்கை எனக்கு ஏற்பட்டிருக்கிறது. உண்மையிலேயே, புயலினால் ஏற்பட்ட சேதத்தைப் பார்வையிட வந்த மத்திய அரசாங்க அமைச்சர்களை நான் மனமாரப் பாராட்டுகிறேன். சேது சமுத்திரத் திட்டம் இந்த வருஷத்தில் வந்து விட்டது என்று பார்க்கும்போது உண்மையிலேயே தமிழ்நாட்டு மக்கள் மிக மகிழ்ச்சி அடைவார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

போக்குவரத்து, சிறு துறைமுகங்களைப் பற்றி இதோடு விட்டுவிட்டு, மிக முக்கியமாகப் பேசப்பட்ட நீர்ப்பாசன இலாக்காவைக் குறித்த விஷயங் களுக்குப் பதினைந்து நிமிடங்களில் பதில் சொல்லலாம் என்று நான் நினைக்கிறேன். சொல்லிக்கொண்டே போனால், அதிக நேரம் ஆகிவிடும் என்பதற்காக இனி நீர்ப்பாசனத்திற்கு வருகிறேன்.

நீர்ப்பாசனத் திட்டத்தைக் குறித்து, ராஜ்ய அரசாங்கம் இந்த வருஷம் எந்த முறையிலே தங்களுடைய கவனத்தைத் திருப்பியிருக்கிறது என் பதை மிக விரிவாக என்னுடைய அறிக்கையில் நான் கொடுத்திருக்கிறேன். சென்ற வருஷம் நான் பேசி முடிக்கும்போது, எப்படி மின்சார இலாக்கா விலே ஒரு "க்ரிட்" ஏற்படுத்தியிருக்கிறோமோ அதுபோல, நீர்ப்பாசனம் சம்பந்தமாகவும் ஏன் செய்யக் கூடாது, ஒரு நீர்ப்பாசனத் திட்டத்திற்கும் மற்றொரு நீர்ப்பாசனத் திட்டத்திற்கும் ஏன் ஒரு இணைப்பு ஏற்படுத்தக் கூடாது. இந்த ராஜ்யத்தில் உள்ள நீர்ப்பாசன ஆதாரங்களைப் பொறுத்து ஒரு "க்ரிட்" ஏற்படுத்திவிட்டு, அது போலவே மற்ற ராஜ்யங்களில் இருக்கக் கூடிய உபரித் தண்ணீரை இந்த ராஜ்யத்திற்கும் ஏன் எடுக்க முயற்சி எடுக்கக்கூடாது என்ற முறையிலே என்னுடைய கருத்தைச் சொன்னேன். அந்தக் கருத்தைச் சொன்னதோடு நின்றுவிடவில்லை. கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "மற்ற ராஜ்யங்களிலிருந்து உபரித் தண்ணீரைப் பெறுவதற்கு ஏதோ நிதானமாகப் பேசி, சாதுரியமாகப் பேசி முயற்சி எடுப்பதோடு, அந்த வார்த்தையோடு, நின்று விடுமோ அரசாங்கம்" என்று சொன்னார்கள். வார்த்தைகளைப் பேசும் அளவிற்கு இதோடு நின்று விட்டால் போதும். அதிகமாகப் பேசி அதனால் பல்வேறு சிக்கல்களை ஏற் படுத்தி, இன்றும் பல வருஷங்கள் இதைத் தாமதப்படுத்திவிடக் கூடாதே என்பது தான் என்னுடைய கவலை. ஏனென்றால், இதில் எல்லோருக்கும் ஒரு ஆசை இருக்கிறது. சட்ட சபையிலே கூட கனம் உறுப்பினர் ஒருவர் பேசும் போது "மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து வருகிற தண்ணீரைக் கொடுக்க மறுக்கிறவர்களுக்கு ஏன் அரிசி கொடுக்க வேண்டும்" என்ற வகை யிலே கேள்வி கேட்டு விட்டார்கள். இதுபோன்ற வார்த்தையினால், உண்

[ திரு. வெ. ராமைய்யா ] [19th March 1965

மையிலேயே நடக்கக்கூடிய காரியம் கூட நடக்காமல் போய்விடும். இம் மாதிரி முன்பு வேகமாகப் பேசின காரணமாகத் தானோ என்னவோ, கேரள அரசாங்கம் நம்மோடு பேசவே தயக்கம் காட்டினார்கள். நமது ராஜ்ய முதல் அமைச்சர் அவர்கள் அந்த ராஜ்ய முதலமைச்சரோடு பேசி, "இந்தப் பேச்சு வார்த்தை நடத்துவதனால் எந்த விதமான தீங்கும் வந்து விடாது, உபரி இருந்தால் தானே நீங்கள் கொடுக்க வேண்டும்" என்று எடுத்துச் சொல்லியதன் பேரில், அப்பொழுது கேரள ராஜ்ய முதலமைச்ச ராக இருந்த திரு. சங்கர் அவர்கள் நமது ராஜ்ய முதல் அமைச்சருடைய கருத்தை ஏற்றுக் கொண்டார்கள். அதன்படி இந்தப் பிரச்னை சம்பந்தப் பட்ட இரு ராஜ்ய மந்திரிகளும் திருவனந்தபுரத்திலே கூடிப் பேசி, இருக் கும் சந்தேகங்களைப் போக்கி, "உபரியாகத் தண்ணீர் இருந்தால் தமிழ் நாட்டுக்குக் கொடுப்பதிலே எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை" என்று அவர்கள் சொன்னார்கள். அந்த வகையில் உபரியாகத் தண்ணீர் இருக்கிறதா என்பதை இரண்டு இராஜ்யப் பிரதம இஞ்ஜினீயர்களும் பரி சீலித்துப் பார்க்க வேண்டுமென்று சொல்லி, அதற்கு வேண்டிய எல்லா விவரங்களையும் கொடுத்து, அவர்களும் பரிசீலனை செய்து ஒரு அறிக்கை கொடுத்தார்கள்.

மீண்டும் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்த முடியாத வகையில் ராஜ்யத்தில் பல கஷ்டங்களும், சிக்கல்களும், வந்தன. அனைத்துக் கனம் அங்கத்தினர்கள் நன்றாக அறிவார்கள். ஆகவே அதை நான் விரிவாக எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. இந்தப் பேச்சு வார்த்தைகள் சுமூக மாகத் தொடர்ந்து நடக்க வேண்டும். எந்த விதமான சிக்கலும், நம் முடைய நம்பிக்கையற்ற பேச்சினால் ஏற்பட்டுவிடக் கூடாது என்று தெரி வித்துக் கொள்கிறேன்.

இதைப் பற்றிச் சொல்லும்போதே நான் இன்னொன்றையும் தெரி வித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக நம்முடைய பரம்பிக்குளம் திட்டம் வெற்றிகரமாக முடிவுற்று இருக்கிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் கேரள அரசாங்கம் நமக்குப் பெரும் உதவி அளித்திருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைத் தண்ணீரை உபயோகப்படுத்திக் கொள்ள நமக்கு அவர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டியிருக்கிறது என்று லும், கேரள ராஜ்யத்தின் பரிபூரண ஒத்துழைப்பினால் தான் பரம்பிக் குளம் திட்டத்தை நிறைவேற்ற முடிந்தது. அதற்காக நான் என்னுடைய மனப்பூர்வமான நன்றியை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறு சிறு சந்தேகங்களை இடையில் அவர்கள் எழுப்பிக் கொண்டிருந்தால் திட்டத்தை நாம் நினைத்தபடி நிறைவேற்றுவது சங்கடமாகப் போய் இருக் கும். கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்களே, அது போல "இவ்வளவு மூலதனத்தைப் போட்டும் என் இத்தனை காலதாமதம், நஷ்டம் எல்லாம் வந்தது" என்பதாகக் கனம் அங்கத்தினர்கள் கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்லும்படியாக வந்திருக்கும். அப்படியின்றி அவர்கள் நம்மோடு மனப்பூர்வமாக ஒத்துழைத்தார்கள். அதற்காக நன்றி சொல்ல விரும்புகிறேன்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை இந்தச் சபையில் எழுந்தது எதிர்க்கட்சித் தலைவரும், மற்றவர்களும் கூட குறிப்பிட்டுச்சொன்னார்கள் தஞ்சை ஜில்லாவில் குழாய்க்கிணறுகள் வைப்பது பற்றிச் சொன்னார்கள் நமது முதல் அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டதின் பேரில் டாக்டர் கே. எல். ராவ் அவர்கள் நம்முடைய ராஜ்ஜியத்திற்கு வந்து தஞ்சை டெல்டா பகுதியைப்பார்வையிட்டார்கள். பாசன ஆதாரங்களை பெருக்க நாம் செய்திருக்கும்படியான முயற்சியைப் பரிசீலனை செய்து அவற்றைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் நமக்கு ஆர்வமூட்டினார்கள். எடுத்தவுடன் பெரிய திட்டங்களாக வகுத்துக்கொண்டுவிட்டால் அதனால் ஏற்படும் சங்கடங்களைச் சமாளிப்பது கஷ்டமாகிவிடும். ஆகவே, ஒரு பைலட் ஸ்கீம் எடுத்துப் பாருங்கள் என்றும் சொன்னார். அதன் பேரில் ஒன்று அல்லது இரண்டு பைலட் ஸ்கீமை எடுத்து நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. அமெரிக்க ஃபோர்டு ஸ்தாபனக் குழுவும் இந்தப் பிரதேசத் திற்கு வந்து பார்வையிட்டு நம்முடைய முயற்சியைப் பாராட்டினார்கள்— கனம் எதிர்க் கட்சித் தலைவர் வேறு ஏதோ ஒரு கமிட்டியை நினைத்து



9th March 1965] [திரு. வெ. ராமைய்யா ]

சொல்லியிருப்பார் என்று நினைக்கிறேன்—இந்தக் குழுவினர் நம்முடைய முயற்சியைப் பாராட்டினார்கள். நிலத்திற்கு அடியில் இருக்கக்கூடிய தண்ணீரை மேலே கொணர்ந்து இந்தப் பிரதேசத்தில் அதிக அளவு விவசாயம் செய்ய முடியும். காரணம் பூமிக்கு அடியில் நிறையத் தண்ணீர் இருக்கிறது, இதற்கு உதவி செய்ய ஒரு 'செல்லை' அமைத்தால் தங்கள் நாட்டு நிபுணர்களுடைய ஒத்துழைப்பையும் கொடுக்கத் தயாராய் இருப்ப தாகச் சொன்னார்கள். இதற்கிடையில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எங்கெங்கே அதிகமாக உணவு தானியம் உற்பத்தி செய்ய முடியுமோ அங்கெல்லாம் உற்பத்தி செய்ய முயற்சி எடுத்தால்—காஷ் ப்ரோக்கிராம் கீழ்—பண உதவி அளிப்பதாக மத்திய அரசாங்கத்தினர் சொன்னார்கள். நானும், தலைமை என்ஜினியரும், இலாகா காரியதரிசியும் இதுபற்றிப் பேசிக்கொண்டிருந்தபோது—என் தஞ்சை ஜில்லாவில் ஒரு முயற்சி செய்து இந்த காஷ் ப்ரோக்கிராம் கீழ் பண உதவி பெறக்கூடாது என்று யோசித்தோம். அதன் கீழ் தான் 2 ஆயிரம் கிணறுகள் அந்த மாவட்டத் தில் எடுத்து விவசாயம் செய்ய உதவி செய்வது என்று முடிவு செய்தோம். கிணற்றுப் பாசனம் என்பது தஞ்சை மாவட்டக்காரர்களுக்கு ஆச்சரியமாக இருக்கலாம். பொதுவாக நம்முடைய ராஜ்யத்தில் வடஆற்காடு, தென்னாற் காடு, கோயம்புத்தூர் இன்னும் இதுபோன்ற பலமாவட்டங்களில்—உழைத்து உழைப்பினால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற ஊக்கம் உள்ள இடங்களில் எல்லாம் கிணற்றுப்பாசனம் நடைபெறுகிறது. இன்றைக்குச் சொல்ல முடியும்—எட்டு லட்சம் பாசனக் கிணறுகள் இருக்கின்றன. அந்த எட்டு லட்சம் கிணறுகளில் மின்சாரம் பொறுத்தப்பட்டது $2\frac{1}{2}$ லட்சம் கிண றுகள் இருக்கும். கிணற்றுப் பாசனம் சென்னை ராஜ்யத்திற்குப் புதிது அல்ல. அன்றைக்கு நாங்கள் காஷ் ப்ரோக்ராம் கீழ் பண உதவி பெற லாம் என்பதாக நினைத்து தஞ்சை மாவட்டத்தில் கிணறுகளின் மூலம் நிலத்திற்கு அடியில் உள்ள தண்ணீரை மேலே கொண்டுவந்து தண்ணீர் அங்கே இயற்கையாக இல்லாத காலங்களில் விவசாயம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதாக எடுத்துக்கொண்ட முயற்சி—காஷ் ப்ரோக்ராம் வந்தாலும் வராவிட்டாலும்—இன்று அரசாங்கம் ஒப்புக்கொண்ட ஒரு முக்கியமான திட்டமாகவே ஆகிவிட்டது. இன்றைக்கு அந்த ஜில்லாவில் இதுவரை நடைபெற்று வந்துள்ள விவசாய முறையையே மாற்றிவிடக் கூடிய திட்டமாக அமைந்திருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பற்றி ஆலோ சித்துக் கொண்டிருந்தபோது தான் டாக்டர் கே. எல். ராவ் அவர்களும் வந்தார்கள். ஃபோர்ட் ஸ்தாபன குழுவும் வந்தார்கள். அவர்கள் இது பற்றி எந்தவிதமான குற்றச் சாட்டையும் இந்த அரசாங்கத்தின் மீது திணிக்கவில்லை. மாறாக நம்முடைய முயற்சியைப் பலவாகப் பாராட்டினார் கள். அடுத்து சென்னை நகரத்தின் குடி தண்ணீர் அபிவிருத்தியை யு. என். டீம் ஆராய வந்தபோது இதுபற்றியும் அவர்களிடம் கலந்தோம். அவர்களும் இந்த முயற்சியைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்றே வற்புறுத்தினார்கள். நல்ல பலன் கிடைக்கும் சாத்தியக் கூறுகள் இருப் பதையும் எடுத்துச் சொன்னார்கள். இப்போது நாம் இதற்காக சூப்பிரண் டென்டிங் என்ஜினியரை நியமனம் செய்திருக்கிறோம். இந்தக் காரியத்தில் நமக்கு வெற்றி ஏற்படும். ஒரு மகத்தான சாதனையை நிறைவேற்றியவர் களாக ஆவோம் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறது. இதில் சிறிதளவு கூட எனக்குச் சந்தேகம் இல்லை. தஞ்சை ஜில்லாவில் இருக் கிற சம்பா சாகுபடி நிலம் 15 லட்சம் ஏக்கரில்—பத்து லட்சம் ஏக்கர் இரு போக சாகுபடியானாலேகூடப் போதும். நான்காவது திட்ட காலத் திற்குள் நாம் தன்னிறைவு அடைவதோடு கூட—கப்பல்களில் இல்லா விட்டாலும்—ரெயில்கள் மூலமாகப் பிற ராஜ்யங்களுக்கு உணவு தானியங் களை அனுப்பி வைக்கக் கூடிய நிலையை அடைந்துவிடுவோம். முன்பு இருந்த நினைப்பு வேறு. இப்போதுள்ள நினைப்பு வேறு. முன்பு போல லாப நஷ்டக் கணக்கைப் பார்த்து—வெள்ளைக்காரர் காலத்தில் இருந்த 5 சதவிகிதம் அல்ல இப்போது 1 சதவிகிதம் கூட வராது—நாம் ஒரு திட்டத்தை எடுத்துக் கொள்வதோ நிராகரிப்பதோ இல்லை. ராஜ்ய விவசாய மக்களுடைய உழைப்பில் நம்பிக்கை வைத்து, அவர்களுடைய ஆர்வத்தில், ஊக்கத்தில் நம்பிக்கை வைத்து பல பல பெரிய திட்டங்களை மேற்கொண்டு வருகிறோம். வெறியும் காணமுடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**Mr. DEPUTY SPEAKER :** I think the House has no objection to sit till the Hon. Minister finishes his reply and the Demands are disposed of.

1-30 p.m. **கனம் திரு. வெ. ராமையா :** குறிப்பாக நம்முடைய சென்னை இராஜ்யத்தில் உள்ள ஒவ்வொரு பகுதியினுடைய விவசாயப் பழக்கத்தையும் நாம் பார்க்கும் பட்சத்திலே வெளிநாடுகளுக்குச் சென்று படிப்பதைவிட இங்கே விவசாயத்திலே எடுத்துக்கொள்ளப்படுகிற எல்லா முயற்சிகளையும் உணர முடியும். கோயம்புத்தூர் ஜில்லாவிலே இருப்பவர்கள் தஞ்சை ஜில்லாவிலே உள்ள விவசாயப் பழக்கத்தைப் பார்த்தால் தமிழ்நாட்டில் எவ்வளவு அற்புதமாக விவசாயம் செய்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள முடியும். அதுபோலத் தஞ்சையில் இருக்கக் கூடியவர்கள் வட ஆற்காடு மாவட்டத்திற்குச் சென்று அங்குள்ள விவசாயப் பழக்கத்தைப் பார்க்கும் பட்சத்திலே அங்கு விவசாயம் எப்படி நடத்தப்படுகிறது என்பதைப் பார்க்க முடியும். அதேபோல் சேலம் ஜில்லாவில் எப்படி விவசாயம் நடக்கிறது என்பதை திரு. சீமைச்சாமி போன்றவர்கள் போய்ப் பார்த்தால் அங்குள்ள விவசாயப் பழக்கத்தைப் புரிந்துகொள்ள முடியும். ஏனென்றால் அவர்கள் சேலஞ் செய்தார்கள் ; 2,000 பவுண்டாகியிருந்தது திடீரென்று எப்படி 4,000 பவுண்டாக ஆகமுடியும் என்று கேட்டார்கள். அவர் இருக்கக்கூடிய ஆடுதுறையைப் போய்ப் பார்த்தால் அவருக்கு அது புரிந்திருக்கும். தன்னால் செய்யமுடிவதை மற்றவர்கள் செய்யமுடியாது என்பதை மறந்துவிட வேண்டும். தமிழ்நாட்டிலுள்ள விவசாயத்தில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின்மேல் எனக்கும் நம்பிக்கை இருக்கிறது, தமிழ்நாடு அரசாங்கத்திற்கும் நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, விவசாயிகளுக்குத் தேவையானவற்றையெல்லாம் அவர்களுக்குச் செய்து கொடுத்தோமானால், நிச்சயமாக இந்த உணவுப் பிரச்சினையை சுலபமாகத் தீர்த்துவிட முடியும் என்று நம்பலாம். மற்ற விஷயங்களைப் பற்றிப் பேசும்பொழுது, குறிப்பாக ஒவ்வொருவர் சொன்னதையும் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக, நான் குறிப்பாக ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

திரு. நல்லசிவம் அவர்கள் பேசும்பொழுது லோயர் பவானி பற்றிக் குறிப்பிட்டார்கள். எங்களுக்கு இப்பொழுதிருக்கக் கூடிய பாசன முறையிலே எந்தவிதமான மாறுதலும் இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். எங்களுக்கு இப்பொழுது கிடைக்கின்ற தண்ணீர் எப்பொழுதும் குறையாமல் கிடைக்க வேண்டுமென்று சென்னார்கள். விவசாயிகளுக்குத் தொந்திரவு கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஒரு நாளும் நினைக்கவில்லை. அங்கத்தினர் தண்ணீரை மிகச் சிக்கனமாகப் பயன்படுத்தி வருகிறோம் என்று சொன்னார்கள். அதே நேரத்தில் அவருடைய ஜில்லாவிலேயே மற்றொரு பகுதியிலே உள்ளவர்கள், நாங்களும் வாழ வேண்டும் நாங்களும் விவசாயம் செய்ய வேண்டும் என்று கோரிக்கைகள் விடும்பொழுது, அவர்களுடைய விருப்பத்தையும் கேட்டு அவர்களுடைய கஷ்டத்தையும் போக்கக்கூடிய வகையில் அரசாங்கம் திட்டத்தை உருவாக்க வேண்டியிருக்கிறது. லோயர் பவானியைப்பற்றி நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், அது உருவாக்கப்பட்டு முடிக்கப்பட்ட உடனே, அந்தத் திட்டத்தின் வாயிலாக அதில் அமையக்கூடிய ஆயக்கட்டுகளுக்கு குறிப்பிட்ட கன அடி தண்ணீர்தான் கொடுப்பது என்பது தான் முடிவு செய்யப்பட்டது. இன்றைக்கு திரு. நல்லசிவம் அவர்களும், திரு. தக்ஷிணாமூர்த்திக் கவுண்டர் அவர்களும் எங்களுக்குத் திட்டத்தில் நிர்ணயம் செய்திருக்கக் கூடிய அளவைக் குறைக்கக் கூடாது என்று சொன்னால் அதை ஒப்புக்கொள்ள முடியும். அப்படியில்லாமல், மற்றவர்களுக்குக் கிடைக்கக் கூடிய தண்ணீரையும் எங்களுக்கே கொடுத்துவிட வேண்டுமென்றால் என்ன செய்ய முடியும் ? இதற்கு நீங்களே தீர்ப்புச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கீழ் பவானித் திட்டத்தை உருவாக்கும் பொழுதே அந்தத் திட்டத்தினுடைய நோக்கத்தைப் பற்றிச் சொல்லியிருக்கிறோம். இந்தியா பூராவும் சொல்லியிருக்கிறோம். இந்தியாவில் உள்ள எல்லோரும் அந்தத் திட்டத்தைப் பாராட்டினார்கள். அந்தத் திட்டத்தை சாங்ஷன் செய்ததற்குக் காரணமே, ஒவ்வொரு புஞ்சை நிலத்திற்கும்



தண்ணீர் கொடுப்பதன் மூலமாக ஏராளமான தரிசு நிலத்தையோ, அல்லது புஞ்சை நிலத்தையோ சாகுபடி நிலமாக்க வேண்டும் என்பதுதான். திட்டம் பூர்த்தியானது. அங்கிருக்கக் கூடிய விவசாயிகள் புஞ்செயில் விவசாயம் செய்தார்கள். பிறகு புஞ்சையிலிருந்து நஞ்சைக்கு வந்தார்கள். ஒரு காலத்தில் 50,000 ஆக இருந்தது, வருஷாவருஷம் உயர்ந்து கொண்டே வந்தது. கடைசியில் எந்தவிதமானக் கட்டுப்பாடும் இல்லாமல் போய் விட்டால், கீழ்பவானி ஸ்கீமில் உள்ள ஆய்க்கட்டுக்களுக்குப் போதுமான அளவுத் தண்ணீர் கொடுக்க முடியுமா முடியாதா என்ற நிலை வந்துவிடும். இன்றைக்கு மற்றவர்களுக்குக் கிடைக்கக்கூடிய தண்ணீரையும் எங்களுக்கே கொடுத்துவிட வேண்டுமென்றால் அதைப்பற்றி அதிகமாகவும், ஆழமாகவும் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** கீழ்பவானித் திட்ட நீர்ப்பாசனத்தில் நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டுவந்த விவசாயிகள், புஞ்சை நிலங்களை நஞ்சை நிலங்களாக மாற்றிப் பயிரிட்டு வருகின்ற காரணத்தால் அவைகள் புஞ்சை நிலத்தினுடைய பண்பை இழந்துவிட்டனவென்றும், புஞ்சையாக மாற்றமுடியாது என்றும் குறைப்பட்டுக்கொள்கிறார்களே, அதற்குக் காரணமென்ன என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** விளக்கம் கூறியதற்கு நன்றி. அவர்கள் அப்படிச் சொல்கிறார்கள். ஆனால் நிபுணர்கள் அப்படியொன்றும் இல்லை என்று சொல்கிறார்கள். நிபுணர்கள் சாங்கோபாங்கமாகப் பரிசீலனை செய்து பார்த்து புஞ்சைகளாக இருப்பதால், நஷ்டமில்லை, கஷ்டமில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் முன்பு செய்த முடிவிலிருந்து மாறவில்லை. ஆனால் ஒரு வருஷம் தளர்த்த வேண்டியிருந்தது. தளர்த்தியதற்குக் காரணம், விவசாயத் துறையிலிருந்து புஞ்சை தானியங்களுக்கு விதைகள் கிடைக்காது என்ற காரணத்தால் ஒரு வருஷம் தளர்த்தி வைத்திருந்தோமே தவிர முடிவில் எந்தவிதமான மாறுதலும் கிடையாது.

ஆகவே, திரு. நல்லசிவம் அவர்களும், திரு. தக்ஷிணாமூர்த்திக் கவுண்டர் அவர்களும் கூறுகின்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்ளும் பட்சத்திலே ராஜ்யத்திலே இருக்கக் கூடிய வறண்ட பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்ற லட்சியத்தை நான் கைவிட வேண்டும். திரு. தியாகராஜன் அவர்கள்கூடச் சொன்னார்கள். "நாங்கள் காவேரித் தண்ணீரைக் கேட்டோம் கொடுக்கவில்லை, 15 ஆண்டுகள் முடிந்து விட்டன, மூன்று தேர்தல்கள் நடந்துவிட்டன, எங்களுக்குக் கொடுக்கவில்லையே" என்று அவர்கள் சொல்கிறார்கள். திரு. நல்லசிவம் அவர்கள் சொல்கிறார்கள், பிறருக்குக் கொடுக்கக் கூடிய தண்ணீரையும் எங்களுக்கே கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள்.

**திரு. க. ர. நல்லசிவம் :** பிறருக்குக் கொடுக்க வேண்டிய தண்ணீரையும் எங்களுக்கே கொடுத்துவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. 1959–64 வரை எப்படிக் கொடுக்கப்பட்டு வந்ததோ அதே மாதிரித் தண்ணீரைக் கொடுக்க வேண்டுமென்றுதான் சொன்னேன். யாருடைய தண்ணீரையும் கொடுக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை.

**கனம் திரு. வெ. ராமையா :** 1959-ஆம் வருடத்துக் கணக்குப் பார்க்கிற பொழுது, அப்பொழுதிருந்த பிரச்னையைத் தீர்ப்பதற்காக ஒரு புது முயற்சி எடுத்துக் கொண்டார்கள். அந்த முயற்சி முடிவான முயற்சியில்லை என்பதை அதற்காகப் போடப்பட்ட கமிட்டியின் அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். திரு. கோபால்சாமி அவர்கள் கூட அதைப் பரிசீலனை செய்து புஞ்சை தானியம் விளைவதைத் தடைசெய்யக்கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அறிக்கையை ஒப்புக் கொள்ளும் பட்சத்தில் திட்டத்திற்காக ஒதுக்கி வைக்கப்படும் தண்ணீரை பயன்படுத்தவேண்டுமென்று சொல்வது சரியல்ல. ஆகவே, புஞ்சை நிலங்களுக்காக எவ்வளவு தண்ணீர் கொடுக்கப்படுகிறதோ அந்தத் தண்ணீரிலிருந்து ஒரு அவுன்ஸ் கூடக் குறைக்கத் தயாராய் இல்லை. ஆகவே, உபரியாக இருந்த காரணத்தால் தற்காலிகமாக ஏற்பாடு செய்து கொடுத்த அவினாசி, கோயம்புத்தூர் தாலூ

காக்கையில் உள்ள மக்களுடைய நன்மையை எண்ணி ஆறுகளைத் திருத்திப் பார்க்க வேண்டுமென்று அவரை உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். எனவே இவர்கள் சொல்லக்கூடிய கருத்தை ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தில் வறண்ட பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்க முடியாமல் போகின்றது. அதோடில்லை, திரு. தண்டாயுதபாணியின் பேச்சை அவர்கள் கேட்டு இருப்பார்கள். அவர்களுடைய திருவண்ணாமலையில் இருக்கக்கூடிய ஒரு கிராமத்தைப் பற்றிச் சொன்னார்கள், இப்பொழுது ஏரியில் 75 என்றும் மற்றொன்றில் ஏரியில் 40 என்றும் இருக்கிறது. இந்த வித்தியாசம் இருக்கலாமா என்று கேட்டார்கள். எனக்குக் கூட அது தெரியாது. இந்த மாதிரி சொல்ல இருக்கக்கூடிய பிரச்னை இருந்தாலும், ஏரியை உயர்வாகப் போட்டால் இந்தப் பிரச்னைத் தீருமோ என்பதை எனக்குத் தெரியவில்லை. திரு. சம்பந்தம் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் போன வருஷம் கோபமாகப் பேசினார்கள். இந்த வருஷம் அப்படியில்லை. திரு. ஆ. கு. சுப்பையா அவர்களும் பேசினார்கள். இந்த வருஷம் தஞ்சை ஜில்லாவில், சீர்காழி, திருத்துறைப்பூண்டி, இன்னும் கனம் அங்கத்தினர் திரு. சம்பந்தம் அவர்கள் இருந்து வரக்கூடிய பகுதி இவைகளில் பாதிப்பில்லை. காவேரியைப் பொறுத்தவரையில் நீர்ப்பாசன எஞ்சினியர் ஒன்றும் செய்துவிடவில்லை. இயற்கை நன்றாக இருந்தது; நல்ல மழை பெய்தது; வெள்ளம் இல்லை. இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம் என்றால், முறையாக நாம் பாசன வசதி செய்து கொடுத்தோமேயானால் அவர்களுக்கு வெள்ளத்தைப்பற்றிய பிரச்னையே இல்லை; எந்த விதமான தொந்திரவும் இருக்காது. இப்பொழுது ஏரியைக் கட்டி பாசிக்கொண்டு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன்.

அந்த மாதிரி ஒழுங்கு முறையில் விவசாயிகளுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும். ஒரு பக்கத்தில் மக்களை அதிகமாகக் கொடுக்க முடியும். இன்னொரு பக்கத்தில் வறண்ட பகுதிகளுக்குத் தண்ணீர் கொடுக்க முடியும். சேலத்திலிருந்து வந்த கனம் அங்கத்தினர் அவர்கள் "ஏராளமாக காவேரியாக திருமணிமுத்தாறு அல்லது பொன்னையாறு திட்டம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிறது" என்று சொன்னார்கள். கனம் அங்கத்தினர் நல்லசிவம் அவர்கள் கருத்தை ஏற்றுக் கொண்டால் சேலம் கனம் அங்கத்தினர் அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. புதுக்கோட்டை அங்கத்தினர் அவர்களுடைய கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. அரவக்குறிச்சி அங்கத்தினருடைய கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது, ஆகவே, இதையெல்லாம் மொத்தமாகப் பரிசீலனை செய்யும்போது எவ்வளவு தண்ணீர் இருக்கிறது என்று பார்த்து முறையாக விவசாயிகள் அத்தனை பெருக்கும் தண்ணீர் கொடுக்க வேண்டும். பூமிக்கடியில் இருக்கும் தண்ணீரையும் தாராளமாகக் கொடுக்க வேண்டும். ஓடிக் கொண்டிருக்கிற தண்ணீரைப் பங்கிட்டுக் கொடுப்பதில் எந்தவிதமான தடையும் இல்லை என்பதை இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்கிறேன். கனம் அங்கத்தினர்கள் ஏராளமான ஆலோசனைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஒவ்வொன்றுக்கும் பதில் சொல்ல முடியாமைக்கு மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த வருஷம் நீர்ப்பாசன இலாகாவைப் பொறுத்த வரை அதிக சேதம் ஏற்படாத ஒரு வருஷம் எப்போது பார்த்தாலும் வெள்ளம், தண்ணீர், என்ற நிலைமை இருக்கும். இந்த வருஷம் அந்த நிலைமை இல்லை. இந்த வருஷம் மேட்டூரில் போதுமான தண்ணீர் இல்லாத சமயத்தில் நமது பிரதம எஞ்சினியரும் மற்றவர்களும் ரொம்பத் துணிச்சலோடு கோடை சாகுபடிக்குத் தண்ணீரைத் திறந்து விட்டார்கள். ஒரே வாரத்தில் நல்ல மழை பெய்து மற்ற இடங்களுக்கும் நீர்ப்பாசன வசதி ஏற்பட்டது. நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்தும், ஹைவேஸ் பொறுத்தும் பிரதம எஞ்சினியர்கள் தங்களுடைய கடமையை மிகத் திறமையாகச் செய்வதோடு அரசாங்கத்தின் இலட்சியத்தை நிறைவேற்றுவதற்குப் பெரும் உதவிகளைச் செய்து கொடுத்ததற்காக என்னுடைய பாராட்டுதல்களை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மராமத்து இலாகாவைப் பொறுத்த வரை இந்த வருஷம் ஒரு விசேஷமான வருஷம். அதன் காரியதரிசியாக இருக்கக்கூடிய ஸ்ரீமான் திருமலை அவர்கள் உண்மையிலேயே இந்த இலாகாவுக்குப் புதுத்தெம்பையும் தைரியத்தையும் கொடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகை அல்ல. அவர்களிடம் எந்தப் பிரச்னையைச் சொன்னாலும்



சாங்ஷன் போட்டுச் சொல்லி தள்ளிவிடக் கூடிய மனப்பான்மை இல்லாமல், அதனை முடிக்க வேண்டுமென்ற முறையில் அவர்கள் எடுத்த முயற்சிகள் தான் பக்கர் பி. எஸ். கர் அவர்கள் இந்த பதவியிலிருந்து சமீபத்தில் ரெகுசா முத்திரம் பிரதமனுடைய உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென்ற உத்தரவு போடப்பட்டு வேலை ஏற்பட்ட நிகழ்ச்சிகள். அதற்காக உண்மையிலேயே என்னுடைய பாராட்டுதலையும், அரசாங்கத்திலுடைய பாராட்டுதலையும் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகளின் மீது பேசும்போது எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள்; பல தேவைகளைச் சொன்னார்கள். அந்தத் தேவைகளை யெல்லாம் பூர்த்தி செய்ய வேண்டுமென்று சொன்னால் கோடிக்கணக்கில் மானியத்தைப் போன்று இன்னும் ஒரு மடங்கு தேவையாக இருக்கிறது. ஆகவே, கனம் எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் இதிலே 100 ரூபாயைக் குறைக்க வேண்டுமென்று கேட்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**புலவர் கா. கோவிந்தன் :** உணவு உற்பத்தியை அதிகமாகப் பெருக்கக் கூடிய மாவட்டத்தில் அடித்தளத்தில் இருக்கக்கூடிய நீரைப் பயன்படுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதற்கான முயற்சிகளை சர்க்கார் எடுத்துக் கொள்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தஞ்சை மாவட்டத்திற்கு அடுத்து அதிகமாக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வது வட ஆற்காடு மாவட்டந்தான். அங்கும் அடித்தள நீரைப் பயன்படுத்துவதற்கான திட்டத்தைக் கொண்டுவர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** தஞ்சை மாவட்டத்திற்கு மட்டுமல்ல ; எல்லா மாவட்டத்திலும் செய்யலாம்.

Mr. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 66,58,21,300 under Demand No. XXVI—Irrigation be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

Mr. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,58,21,300 under Demand No. XXVI—Irrigation."

The Demand was put and carried and the Grant was made.

Mr. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 10,98,39,600 under Demand No. XLII—Capital Outlay on Irrigation be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

Mr. DEPUTY SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 10,98,99,600 under Demand No. XLII—Capital Outlay on Irrigation."

The Demand was put and carried and the Grant was made.

Mr. DEPUTY SPEAKER : The question is—

"That the allotment of Rs. 6,59,67,800 under Demand No. XXVII—Public Works—Works be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

[19th March 1965

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 6,59,67,800 under Demand No. XXVII—Public Works—Works."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the allotment of Rs. 2,25,04,300 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,25,04,300 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant."

The Demand was put and carried and the Grant was made.

MR. DEPUTY SPEAKER: The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,13,85,100 under Demand No. XLIII—Capital Outlay on Public Works."

The Demand was put and carried and the Grant was made.

1-48 p.m. MR. DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. tomorrow.

The House then adjourned.

## III.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

### A. Statutory Rules and Orders.

159. *Notification issued with G.O. Ms. 2376, Rural Development and Local Administration, dated 12th November 1964 making rules regarding election of members to the Appointment and other Committees of Panchayat Unions. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayat Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

160. *Notification issued with Proceedings Roc. No. 59864/64-F4, dated 21st October 1964, regarding the exclusion and inclusion of certain areas of Soolamani and Palavakkam Panchayats, Tiruvallur taluk, Chingleput district. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*

161. *Notification issued with Roc. No. 84982/63-F5, dated 26th September 1964, regarding the exclusion and inclusion of certain areas of Tirupparankundram and Tirunagar Panchayats in Madurai taluk, Madurai district. [Laid on the Table of the House under section 179 (4) of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXXV of 1958).]*



19th March 1965]

### B. Reports, Notifications and other papers.

68. *Notification issued with G.O. Ms. No. 4951, Industries, Labour and Co-operation (Labour), dated 24th October 1964, amending the Madras Factories Rules, 1950, published with the late Development Department Notification, dated the 15th March 1950, at pages 103 to 178 of the Rules Supplement to Part I of the Fort St. George Gazette, dated the 25th April 1950, as subsequently amended, the same having been previously published as required by section 115 of the Factories Act, 1948 (Central Act XLIII of 1948.)]*

* 69. *Review of Panchayat Development in Madras State 1964-65 (Tamil).*

* 70. *Note on Demand No. XXIX—1965-66 (Tamil and English).*

† 71. *A Review of the Working of Minor Ports in Madras State.*

* Circulated to Members on 17th March 1965.

† Circulated to Members on 18th March 1955.

# Appendix.

(*Vide* answer to starred question No. 277 on page 172 supra.)

The Director of Public Health has issued an informative press note in the local dailies informing the public about the prevalence of this disease and advising them to report the occurrence of cases to the Corporation Health authorities. The intensification of control measures was discussed by the Director of Public Health with the Commissioner, Corporation of Madras and the Health authorities. As a result of these discussions, the Corporation of Madras has intensified the mosquito control measures. For this purpose, Madras City is divided into 20 zones, each zone consisting of five divisions. Twenty men are working in each zone. They inspect every house and destroy the mosquito larvae in all the breeding places through anti-larvicidal measures. The Government have sanctioned for this purpose the employment of 350 thozhilalies and 60 supervisors.

2. The Government have also declared the epidemic haemorrhagic fever (Dengue and Chikenguniya) as a notifiable infectious disease under the Madras Public Health Act, 1939. A large number of persons were reported to be affected with Dengue fever in Melapalayam at Perambur. Arrangements were made with a Mobile Van Unit to render medical aid daily to the families and to all those affected with Dengue fever. This unit consisting of one doctor, several staff nurses, pharmacists and nursing orderlies was sent daily by turn from the following three institutions :—

(1) Government Royapettah Hospital, Madras.

(2) Government Kasturba Gandhi Hospital for Women and Children, Madras.

(3) Government Kilpauk Medical College and Hospital, Madras.

The situation is under close watch.

**பதில்.**—(1) பொது சுகாதாரத் துறை நெறியாளர், இந்த நோய் பரவியிருப்பதைப் பொது மக்களுக்கு அறிவிக்கும் வகையிலும், எங்கெங்கு இந்த நோய் காணப்படுகிறதோ அங்கெல்லாம் அதைக் குறித்து மாநகராட்சி சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு அறிவிக்கும்படியும், உள்ளூர் செய்தித் தாள்களில் செய்திக் குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார். பொது சுகாதாரத் துறை நெறியாளர், இந்நோயைத் தீவிரமாகத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைக் குறித்து சென்னை மாநகராட்சி ஆணையாளருடனும், சுகாதார அதிகாரிகளுடனும் கலந்து ஆலோசித்தார்; மேற்படி ஆலோசனைகளின் விளைவாக, சென்னை மாநகராட்சி கொசுத் தடுப்பு ஏற்பாடுகளைத் தீவிரமாக மேற்கொண்டது. இதற்காக சென்னை நகரம் 20 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மண்டலமும் 5 வட்டங்களைக் கொண்டது. ஒவ்வொரு மண்டலத்திலும் 20 பேர் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் ஒவ்வொரு வீட்டையும் பார்வையிட்டு, கொசுக்கள் இனப் பெருக்கம் செய்யும்



எல்லா இடங்களிலும் கொசுப் புழுக்களை அழிக்கக்கூடிய தடுப்பு முறைகளைப் பயன்படுத்திக் கொசுக்களை அழித்தார்கள். இதற்காக 350 தொழிலாளர்களையும், 60 மேற்பார்வையாளர்களையும் அமர்த்திக் கொள்ள அரசாங்கம் அனுமதித்தது.

(2) 1939-ம் ஆண்டு தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டத்தின் கீழ், அரசாங்கம் இக்காய்ச்சலை (டெங்கு, சிக்கன்கினியா) குறிப்பிடத்தக்க தொற்று நோய் என்றும் அறிவித்தது. பெரம்பூரில் மேலப்பாளையத்தில் பலர் டெங்குக் காய்ச்சலால் அவதியுற்றதாக அறிவிக்கப்பட்டது. டெங்குக் காய்ச்சலால் அவதியுற்றவர்களுக்கும், அவர்களது குடும்பங்களுக்கும், அன்றாடம் மருத்துவ உதவியளிப்பதற்காக ஒரு இயங்கும் மருத்துவ வண்டி (Mobile Van Unit) ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஒரு டாக்டர், பல ஸ்டாப் நர்சுகள், மருந்து தயாரிப்பவர்கள், ஆயாக்கள் இவர்களைக் கொண்ட இந்த யூனிட் கீழ்க்கண்ட மூன்று மருத்துவ மனைகளிலிருந்து அன்றாடம் முறைபோட்டு அனுப்பப்பட்டது.

1. சென்னை அரசாங்க ராயப்பேட்டை மருத்துவ மனை.

2. சென்னை அரசாங்க கஸ்தூரிபாய் காந்தி மகளிர்-சிறுர் மருத்துவ மனை.

3. சென்னை அரசாங்கக் கீழ்ப்பாக்கம், மருத்துவக் கல்லூரி, மருத்துவ மனை.

இத்தொற்று நோய் சம்பந்தமான நிலைமை கூர்ந்து கவனிக்கப்பட்டு வருகிறது.

V211, 31 N65
N65.28.3
64899

# LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATION

## IN MADRAS CITY.

Messrs. ACCOUNT TEST INSTITUTE, EGMORE, MADRAS 8
Messrs. HIGGINBOTHAMS, LIMITED, Madras-2.
Messrs. NEW CENTURY BOOK HOUSE, Madras-2.
Messrs. P. VARADACHARI & Co., Madras-1.
Messrs. C. SUBBIAH CHETTY & SONS, MADRAS-5.
Sri. S. S. SRINIVASARAGHAVAN, Royapettah, Madras-14.
Messrs. THE FREE INDIA CO-OPERATIR'S AGENCY, Madras-4.
Messrs. PALANI PRACHURAM, Madras-5.
Messrs. THE EDUCATIONAL AGENCIES, BOOK SELLERS, Madras-15.
Messrs. UNIVERSAL BOOK HOUSE, MOORE MARKET. Madras-3.
Messrs. RUKMINI CORPORATION, VEPERY, Madras-7

## IN MUFASSAL OF MADRAS STATE.

Sri. E. M. GOPALAKRISHNA KONE, Madurai, Madurai district.
Messrs. THE ORIENTAL BOOK HOUSE, Madurai.
Messrs VIVEKANANDA PRESS, PRINTER, PUBLISHER AND BOOK-SELLER Madurai
J.J.M. BOOK DEPOT AND STATIONERY EMPORIUM, MADURAI.
Sri A. VENKATASUBBAN, Vellore, North Arcot district.
Messrs. MUTHAMIZH MANRAM, Mayuram.
Messrs. BHARATHA MATHA BOOK DEPOT, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. NATHAN & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. APPAR BOOK STALL, Thanjavur.
Messrs. P. N. SWAMINATHASIVAM & Co., Pudukottai, Tiruchirappalli district
Messrs. M. PALANI & Co. Clock Tower, Pudukottai.
Messrs. S. KRISHNASWAMI & Co., Tiruchirappalli district.
Messrs. PALANIAPPA BROTHERS, Tiruchirappalli district.
Sri S. R. SUBRAMANIA PILLAI, Tirunelveli, Tirunelveli district.
Messrs NELLAI PUTHAKA NILAYAM BOOK-SELLERS, 10, Thana Muna Buildings Tirunelveli Junction.
Sri B. ARULDOSS, Villupuram Town, South Arcot district.
Sri. V. B. GANESAN, Villupuram, South Arcot district.
Messrs. THE EDUCATIONAL SUPPLIES COMPANY, Coimbatore (R.S. Puram).
Messrs. VASANTHAM STORES, BOOK-SELLERS, Cross Cut Road, Coimbatore.
Messrs. MERCURY BOOK COMPANY, 223, Raja Street, Coimbatore.
Messrs. SIVALINGA VILAS BOOK DEPOT, Erode, Coimbatore, district.
Sri S. M. JAGANNATHAN, BOOK SELLER AND PUBLISHER, Nagercoil, Kanyakumari district
Sri M. PALANI & Co., Tiruchirappalli.
Messrs. A. K. CHANDRIAH CHETTIAR & SONS, Salem-1.
Messrs. T. CHELLARAM & SONS, BOOK-SELLERS AND STATIONERS, Market, Ootacamund.
Messrs. K. M. K. BROTHERS, BOOK SELLERS, Ootacamund.
Messrs. MEENAKSHI PATHIPAGAM, Pudukottai.

## IN OTHER STATES.

Messrs. JANATHA AGENCIES, BOOK SELLERS, Gudur.
Messrs. JAIN AGENCY, New Delhi-1.
Messrs. INTERNATIONAL BOOK HOUSE, Trivandrum.
Messrs. BOOK-LOVERS (PRIVATE) LIMITED, Hyderabad.

PRINTED AND PUBLISHED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING MADRAS, ON THE AUTHORITY OF THE SPEAKER OF THE LEGISLATIVE ASSEMBLY.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |